
# தெய்வீக வாழ்க்கை



நூலாசிரியர்: ஆத்மஜோதி நா. முத்தையா

ஒன்றாரியோ இந்துசமயப் பேரவை வெளியீடு

உ

சிவமயம்

# தெய்வீக வாழ்க்கை

ஞானசுரபி

ஆத்மஜோதி நா. முத்தையா

ஒன்ராறியோ

இந்து சமயப் பேரவை

ரொறன்ரோ, கனடா

நூல்: தெய்வீக வாழ்க்கை

ஆசிரியர்: ஞானசுரபி, ஆத்மஜோதி நா. முத்தையா

எழுத்தமைப்பு: மா. கனகசபாபதி

அச்சாக்கம்: விவேகா அச்சகம்

முதற் பதிப்பு: மே 2005

வெளியீடு: ஒன்ராறியோ இந்து சமயப் பேரவை

Title: Theiveeka Vaazhkai
(Divine Life)

Author: Gnanasurapi, Arthmajothy
N. Muthiah

Typesetting: M. Kanagasabapathy

Printed at: Viveka press

First Release: May 2005

Published by: Ontario Hindu Religious Society

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | தெய்வீக வாழ்க்கையின் இயல்பு | 09 |
| 2. | திருவாசகத்தில் ஒரு வாசகம் | 13 |
| 3. | வலிவலம் மேயவன் | 16 |
| 4. | தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே | 21 |
| 5. | வழிபாடு | 27 |
| 6. | உள்ளங் கவர் கள்வன் | 29 |
| 7. | நடை உடை பாவனை | 36 |
| 8. | ஐயம் தெளிதல் | 40 |
| 9. | கதிர்காம முருகன் | 43 |
| 10. | ஆயிரம் அறிவதைப் பார்க்கிலும் ஒன்றைச் செய்வதே மேல் | 48 |
| 11. | இந்து சமயத்தின் உலகளாவிய இயல்பு | 53 |
| 12. | இந்து சமய ஆராய்ச்சி நிலையம் | 65 |
| 13. | தியானமும் யோகமும் | 68 |
| 14. | நாகைலிங்கரைத் தரிசி நெஞ்சே | 78 |
| 15. | உலகுய்ய வழி | 81 |
| 16. | எல்லாப்பிழையும் பொறுத்தருள்வாய் | 86 |

# பதிப்புரை

பெரியார் ஆத்மஜோதி முத்தையா அவர்கள் தெய்வீக வாழ்வு வாழ்ந்தவர். தான் கற்று அறிந்து உணர்ந்தவற்றை மக்களுக்குப் போதித்தவர். தமிழ் மக்களின் வாழ்வை மேன்மைப்படுத்துவதை தன் குறிக்கோளாகக் கொண்டவர். ஆன்மீக வாழ்வே மனிதனைப் பூரணப்படுத்தும் என்பதை நன்குணர்ந்து தன் போதனைகளாலும், பேச்சாலும், எழுத்தாலும் மக்களை நெறிப்படுத்தியவர். தன் ஆசிரியரான சைவத்தமிழ் உலகம் போற்றும் உன்னத பெரியாராகிய பண்டிதமணி கணபதிப்பிள்ளையிடம் இருந்து ஆத்மீக வள்ளல் என்னும் பட்டத்தையும் பெற்றவர். தன் ஆத்மீக குருமார்களில் ஒருவரான சுவாமி சுத்தானந்தரிடம் இருந்து அன்புமணி என்னும் பட்டத்தைப் பெற்றவர். உலகியல் வாழ்வில் சிக்குண்டு தவித்த தமிழ் மக்கள் மீது கொண்ட அன்பினால் அவர்களை நல்வழிப்படுத்தீ இறைவன் மீது அன்பு பூணச் செய்தவர்.

புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களும் அவர்களின் சந்ததியினரும் தமிழ் மொழியைப் பேசவேண்டுமென்றும், சைவ நெறியில் நின்று வாழவேண்டுமென்றும் விரும்பியவர். கனடா, சுவிஸ், இந்தோனேசியா, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் தங்கியிருந்த காலங்களில், தன் போதனைகளால் மக்களை திசைதிருப்பியவர். சமயக்கருத்துக்களும், ஆன்மீக உணர்வும் மக்களிடம் பரப்பப்பட வேண்டுமென்பதில் முன்னின்று உழைத்தவர். தன் வழியைப் பின்பற்றுவோரையும் உழைக்க வைத்தவர்.

பெரியாரின் கனடா வருகையினால் கனடா வாழ் தமிழ் மக்களிடையே மறுமலர்ச்சி ஏற்பட்டது. எங்கள் இந்து சமயப் பேரவையும் உருவானது. அவர்வழி நின்று பேரவை ஆற்றும் பணிகளை கனடா வாழ் தமிழ் மக்கள் நன்கறிவர். 2005ம் ஆண்டு பெரியார் இறைவனடி சேர்ந்து பத்தாவது வருடமாகும். இந்த ஆண்டை இந்து சமயப் பேரவை அவரது நினைவு ஆண்டாகப் பிரகடனப்படுத்தியுள்ளது. அவரின் ஞாபகமாக ‘தெய்வீக வாழ்க்கை’ என்ற இந் நூலை வெளியிடுவதில் பேரவை மகிழ்ச்சியடைகிறது.

நாவலப்பிட்டியில் வெளிவந்த ஆத்மஜோதி பத்திரிகையில்

பெரியார் அவர்கள் எழுதிய பதினாறு கட்டுரைகளின் தொகுதியாக இந்நூல் வெளிவருகின்றது. சகல கட்டுரைகளும் ஆத்மீக ஒளியைப் பரப்பும் கட்டுரைகளாகும். 1983ஆம் ஆண்டுக்கு முன்பு நாவலப்பிட்டியில் வெளிவந்த ஆத்மஜோதி சஞ்சிகைகளில் சிலவற்றை யாழ். மாவட்ட ஆத்மஜோதி ஞாபகார்த்த சபையின் செயலாளர் திரு. த. தருமலிங்கம் அவர்கள் அனுப்பியிருந்தார். அத்துடன் வடஅமெரிக்காவில் கலிபோர்னியாவில் வாழும் திருமதி பத்மினி உமாகாந்தன் என்பவரும் சில இதழ்களை அனுப்பியிருந்தார். இவர் தன் சிறுவயது தொடக்கம் நூலாசிரியருடன் தொடர்புடையவராவர்.

மக்களை நல்வழிப்படுத்தி நன்னெறியில் வாழ வகுக்கும் இந்த தெய்வீக நூலை யாவரும் படித்து பயன்பெறுவீர்களாகுக.

இந்நூலை அச்சிட்டு உதவிய விவேகா அச்சகத்தினருக்கும் வடிவமைப்புச் செய்த மா. கனகசபாபதி அவர்களுக்கும் பிழைதிருத்தம் செய்வதில் முன்னின்று உழைத்த பெரியார்கள் வி. கந்தவனம், செ. சோமசுந்தரம் ஆகியோருக்கும் இந் நூல் வெளிவருவதற்கு ஆதரவு தரும் பேரவையின் சிவனடியார் திருக்கூட்டத்தினருக்கும் என் நன்றியும் நூலாசிரியரின் ஆசிகளும் உரித்தாகுக.

சிவ. முத்துலிங்கம்
நூல் வெளியீட்டுப் பொறுப்பாளர்
உதவிச் செயலாளர்
ஒன்ராறியோ, இந்துசமயப் பேரவை

உ

சிவமயம்

# அணிந்துரை

ஆத்மஜோதி நா. முத்தையா அவர்கள் நெடுங்காலமாகவே 'ஆத்மஜோதி' என்ற சமய சஞ்சிகையை வெளியிட்டுச் சமயம் வளர்த்தவர். அகில உலகத்துச் சைவர்களும் விரும்பிப் படித்த ஒரு மாதாந்தச் சஞ்சிகையாக அது விளங்கியது. 'ஆத்மஜோதி' என்ற பெயர் நாளடைவில் அதன் ஆசிரியர் அவர்களுக்கே பட்டப் பெயரும் ஆயிற்று. மதுரை சித்தாச்சிரமம் அவருக்கு 'சித்தஞான வித்தகர்' என்ற பட்டத்தை அளித்து 1982ல் கௌரவித்தது. கனடா இந்து சமயப் பேரவை 1995ல் 'ஞானசுரபி' என்ற பட்டத்தைச் சூட்டியது. இன்னும் அவருக்கு எத்தனையோ பட்டங்கள் எனினும் அவற்றால் அவரோடு ஒட்டிக் கொண்ட 'ஆத்மஜோதி'யை அடித்து விழுத்த முடியவில்லை.

அதற்குத் திருவருளே காரணம் என்று சொல்வதைத் தவிர வேறு ஒன்றும் இல்லை. அவரது ஆத்மா திருவருளாலே சோதியாக விளங்குகிறது. வாழ்க்கை முழுவதும் திருவருளிலே திளைத்து அதன் அருமையை, பெருமையை, தான் பெற்ற இன்பத்தை எல்லாம் எழுத்தாலும் பேச்சாலும் எல்லோருக்கும் எடுத்தியம்பிய தொண்டர் அவர்.

அத்தகைய தெய்வீகர் அவ்வப்போது தமது சஞ்சிகையில் எழுதிய ஏராளமான சிந்தனைகள் நூல் வடிவம் பெறாமலேயுள்ளன. அவற்றுள் 16 கட்டுரைகளை அரிதின் முயன்று தேடி அவரது சீடர் திருமுறைச் செல்வர் திரு. சிவ. முத்துலிங்கம் அவர்கள் தொகுத்திருக்கின்றார். இது தமது குருவுக்கு அவர் செய்திருக்கும் தொண்டு மட்டுமல்லாது சமய உலகத்துக்கும் சமய இலக்கியத்துக்கும் செய்திருக்கும் சிறந்ததொரு சேவையுமாகும்.

இந்த நூலுக்கு அணிந்துரை எழுத வேண்டும் என்று அவர் கேட்டதுடன் இதற்குப் பெயர் சூட்டும் பொறுப்பையும் என்னிடம் விட்டு விட்டார். நூல் முழுவதையும் படித்த பின் 'தெய்வீக வாழ்க்கை' என்ற பெயர் மிகவும் பொருத்தமாக இருப்பதை உணர முடிந்தது. இது முதலாவது கட்டுரையின் பொருளாகவும் உள்ளது. அது மட்டுமன்றி எல்லாக் கட்டுரைகளும் மக்களைத் தெய்வீக

வாழ்க்கைக்கு வழிகாட்டுவதையே நோக்கமாகக் கொண்டிருப்பதையும் வாசகர்கள் எளிதாகவே உணர்ந்து கொள்வர். 'தெய்வீக வாழ்க்கை' என்றதும் இது எமக்கு அப்பாற்பட்டதொன்று என்று யாரும் நினைக்க வேண்டியதில்லை. வையத்துள் வாழ்வாங்கு வாழுதலே தெய்வீக வாழ்க்கையாகும்.

வாழ்வாங்கு வாழ்தல் என்றால் 'நீதிவழுவா நெறிமுறையில்' வாழ்தல். நீதியை இக்காலத்திலே பொதுமக்களும் நீதிமான்களும் எந்த அளவுக்குப் பின்பற்றி வருகிறார்கள் என்பது பலருக்கும் பரகசியமானதொன்று. நீதி எது என்பதிலேயே பிரச்சனைப்படுகின்ற காலம் இது.

நீதிக்குச் சரியான சாட்சி மனச்சாட்சி. நீதியைப் பின்பற்றுவதற்கும் பேணுவதற்கும் நிலைநாட்டுவதற்கும் மனம் பக்குவப்பட்டதாக இருக்க வேண்டும்.

இந்த நூல் மனத்தைப் பக்குவஞ் செய்யும் முறைகளைப் பலவாறு எடுத்துரைக்கின்றது. தெய்வீக வாழ்க்கையின் இயல்பு, தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே, வழிபாடு, ஆயிரம் அறிவதைப் பார்க்கிலும் ஒன்றைச் செய்வதே மேல், தியானமும் யோகமும், நாகைலிங்கரைத் தரிசி நெஞ்சே போன்ற அத்தியாயங்கள் மனத்தை மையமாகக் கொண்டவை.

சைவ சமயத்தின் மையமே மனந்தான். மனத்தாற் காணாததை மந்திரத்தாலும் காண முடியாது. மனச்சுத்தம் ஆத்மீக வாழ்க்கைக்கு இன்றியமையாதது.

மனத்தைச் சுத்தப்படுத்தவே எல்லாச்சமயங்களும் முனைகின்றன. வழிமுறைகள்தாம் வேறுபடுகின்றன.

சைவம் மனப்பக்குவம் பற்றிப் பேசுகின்றது. பக்குவத்துக்கு தியானப்பயிற்சி ஏற்றது. பயிற்சிக்கு முயற்சி அவசியம். பக்குவம் பெற்ற மனம் பாதை தவறாது; நீதி வழுவாது.

சைவ சமய ஒழுக்கம் நீதியிலே தங்கியுள்ளது. நீதியிலே 'மேன்மைகொள் நீதி' என்ற ஒன்று பற்றி சைவச் சான்றோர் இடையறாது வலியுறுத்துவர். மேன்மைகொள் சைவ நீதி என்பது

பிற உயிர்களுக்கு ஊறு செய்யாமை; அதாவது கொல்லாமை. சைவம் ஒன்றுதான் எல்லா உயிர்களுக்கும் நீதி ஒன்றென்று உரைப்பதால் இது சைவநீதி எனப்படுகிறது. சைவநீதி வழுவில்லாத நீதி. இந்த நீதியில் வாழ்வதே தெய்வீக வாழ்க்கையாகும்.

இத்தகைய வாழ்க்கைக்கு வழிகாட்டும் ஆத்மஜோதி நா. முத்தையா அவர்கள் திருவருளிலே திளைத்த வாழ்க்கை வாழ்ந்தவர். அதனால் அவரது அனுபவங்களும் தெய்வீக வாழ்க்கை வாழ்ந்த திருத்தொண்டர்கள், சித்தர்கள். மகான்கள் போன்றவர்களின் அறிவுரைகளும் கலந்தவொரு தெய்வீக நூலாக இது விளங்குகின்றது.

நூலாசிரியர் தலைசிறந்த எழுத்தாளர். சமய தத்துவங்களை மக்களுக்கு விளக்கிக் கூறுவதில் வல்லவர். படித்துப் பெற்ற அறிவும் பட்டறிவும் சமரசம் பெற்று விளங்கிய சன்மார்க்கர். அவரது விளக்கங்களில் நம்பத் தகுந்த நடைமுறை உதாரணங்கள் பரவலாக இருக்கும்; படிப்பதற்குச் சுவை பெருக்கும்.

எழுத்து நடையும் மிக இலகுவானது. பேசுவது போலவே எழுதுவார். அதனால் இதனைப் படிக்கின்றபொழுது அவரே முன்னின்று பேசுவது போன்ற ஓர் உணர்வு ஏற்படுகின்றது.

நல்லமனம் படைத்தவர்களின் சிந்தனைகள், திருவருள்வழி செயற்பட்ட பெரியவர்களின் திருவாக்கு எமக்கு வேண்டியவை; வாழ்க்கைப் பிரச்சனைகளைத் தீர்க்க உதவுபவை; வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிகாட்டுபவை; ஆன்ம ஒளியேற்றித் தெய்வீக வாழ்க்கை வாழ வைத்து, மறுபிறப்பைப் போக்கும் மந்திரங்களாக அமைபவை.

படித்துப் பயன் பெறுவோமாக!

வி. கந்தவனம்

# 1. தெய்வீக வாழ்க்கையின் இயல்பு

தெய்வீக வாழ்வு வாழவேண்டும் என்று எல்லோருக்கும் ஆசை உண்டு. ஆனால் அப்படி வாழும் வைராக்கியந்தான் இல்லை. சூழலின் தாக்கமும் உண்டு. வீட்டிலுள்ள மனைவி யினுடைய வற்புறுத்தலுக்காகக் கணவன் விரதம் அனுட்டிக்கிறான். அன்று மாலை எல்லோரும் கோயிலுக்குப் போவதாக ஆனந்தத் துடன் இருக்கிறார்கள். சுமார் நான்கு மணிக்கு வீட்டுத்தலை வனுடைய நண்பர்கள் அங்கு வந்து சேருகிறார்கள். கணவன் கோயிலையே மறந்து நண்பர்களுடன் புறப்பட்டு விட்டான். மனைவியுங் குழந்தைகளும் அப்பா வருவார், வருவார் என்று எதிர்பார்த்துப் பார்த்துப் பார்த்த கண்ணும் பூத்துக் கோயில் சென்று திரும்புகின்றனர். அப்பா இரவு பதினொரு மணிக்கு அறிவு நினைவற்ற நிலையில் வீடு வந்து சேருகிறார். வந்தவருக்கு விரதத்திற்கு ஆக்கிய உணவுகள் எதுவும் பிடிக்கவில்லை. சத்தம் போடுகிறார்; ஆடுகிறார்; படுத்துவிடுகிறார்.

இந்நிலைதான் இன்று நாம் சாதாரணமாகக் காணும் காட்சி. மகன் ஒருவன், ஏழு வயது, நகத்தைப் பல்லாற் கடிக்கிறான். தந்தை கடிக்காதே என்கிறார். தந்தையின் வார்த்தையை மகன் காதில் போட்டுக்கொள்ளவே இல்லை. தந்தை உரத்துச் சத்தம் இடுகிறார். மகன் நகத்தைக் கடித்துக் கொண்டேயிருக்கிறான். அப்பாவுக்குத் தலைக்குமேலே கோபம். கோபத்தினால் பாலனை அடி, அடி என்று அடிக்கிறார். மகன் மயங்கி விழுந்துவிட்டான். தாய் மயங்கிய மகனை வாரி அணைத்து ஆசுவாசப்படுத்துகிறாள். தந்தை கோபம் அடங்குவதற்காக வெளியே சென்றுவிடுகிறார். தாயின் அரவணைப்பிலே இருந்த மகன் விழித்துப் பார்க்கிறான். தாயின் அன்பு முகத்தைக் கண்டு ஆனந்தம் அடைகிறான்.

'அப்பா சொல்வதைக் கேட்டு நடந்தால் என்ன? இதனால் தானே இத்தனை ஆர்ப்பாட்டமும்.'

'அப்பா இப்படிக் கோபங் கொள்ளுகிறாரே. எனக்குப் பிடித்தமில்லாததை அவர் செய்கிறாரே. அவரை நான் எப்படிக் கேட்பது?'

' அப்பா அப்படி என்ன செய்துவிட்டார்' என்று தாய் கேட்கிறாள். 'அவர் புகைப்பது எனக்கு விருப்பம் இல்லை. குடித்து விட்டு வந்து சத்தம் போடுவது எனக்கு விருப்பம் இல்லை. நான் நகத்தைப் பல்லால் கடிப்பது தான் குற்றமா?' என்று கேட்ட

மகன் உறக்கத்தில் ஆழ்ந்து விட்டான்.

வெளியே சென்ற தந்தையும் தனது மிருக சுபாவத்தை உணர்ந்தவராகி வீடு வந்து சேர்ந்தார். மகன் களைத்து உறங்குவதைக் கண்டு கண்கலங்கி நின்றார். நடந்தவை எல்லாவற்றையும் மனைவி கூறக்கேட்ட கணவன் தனது பிழைகள் அத்தனையையும் தனக்குள்ளே ஒப்புக் கொண்டான். தனக் குள்ளேயே பிராயச்சித்தமும் தேடிக் கொண்டான். அன்று தொடக்கம் அவன் புகைப்பதில்லை. மது அருந்துவதில்லை. வீட்டில் கலகலப்பு ஏற்படத் தொடங்கியது. மூத்தவளுக்கு (மூதேவிக்கு) அங்கே வேலையில்லை. இலக்குமி வந்து குடிபுகுந்தாள். இதுதான் தெய்வீக வாழ்வு.

தெய்வத்தன்மை ஒழுங்காய் அமைந்த இடமே கடவுள் உலகம் எனப்படும். தெய்வத்தின் அருள் தடைப்படாது விளங்குதற்குரிய இடம் உண்மை அன்பு நிறைந்துள்ள இடமாகும். மெய்யன்பர் கூட்டமே அத்தகைய இடம். கடவுளுக்குத் தொண்டு செய்வதிலும் மக்களுக்குத் தொண்டு செய்வதிலும் பயன் கருதாத விருப்பம் உடைய அன்பர், அன்பு செலுத்துவதில் ஒருவரைவிட ஒருவர் விரைந்து முன்செல்லும் இடமே மெய்யன்பர் கூட்டமாகும். அன்பு வடிவாகிய கடவுளும் அன்பு வடிவாகிய உண்மைத் தொண்டர்களும் ஒன்றுசேர்ந்து குழுமியுள்ள இடமே கடவுளது அருளாட்சி நிகழும் உலகமாகும். மாசற்ற அன்பு ஒன்றினாலேதான் தெய்வீக வாழ்க்கையின் இயல்பை அனுபவிக்க முடியும்.

அன்பர்க்குப்பணி செய்வதால் அன்பு நமக்கு எளிதில் கைவரும். அன்பு மயமாக எண்ணத்திலும், விருப்பத்திலும், நோக்கத்திலும், சொல்லிலும் செயலிலும் நாம் ஒன்றி விடுவோமானால் நாம் உலகத் துன்பத்தினின்றும் விடுதலையுற்று உண்மை இன்பத்தை நுகரும் பெருவாழ்வு பெறுவோம்.

**" அன்பர் பணிசெய்ய என்னை ஆளாக்கி விட்டுவிட்டால்**
**இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே"**

என்பது தாயுமானாருடைய அனுபவம். இதில் அன்பர் பணி என்பது அன்பர்களுக்குப் பணி செய்வது மாத்திரம் அன்று. அன்பர்செய்கின்ற பணியை நாமும் செய்யப்பழகிக் கொள்ள வேண்டும் என்பது கருத்து. உண்மை அன்பர் எவ்வுயிரிடத்தும் இரக்கம் உடையவராயிருப்பார். உடம்பையும் இறைவர்

திருமேனியாகக் கருதுவர். தாழ்வு பாராட்டமாட்டார். அவர்களுக்குப் பெருஞ் செல்வந்தரும், மிக வறியவரும் ஒரே தன்மையராய்த் தோன்றுவர். கூலிக்குப் பாடுபடும் தொழிலாளர்கள் போல அவர்கள் தங்கள் அன்பை அளந்து கொடுக்கமாட்டார்கள்.

அவர்கள் ஏழையொருவன் துன்புற்றாலும், இழிந்த இனத்தான் ஒருவன் நோயுற்றாலும் இரண்டையும் நீக்குதற்கு விரைந்து செல்வார்கள். எவ்வளவு தாழ்வுடையவருக்கும் எவ்வகைத் தாழ்மையான தொண்டும் இயற்றுதற்கு அவர்கள் பின்வாங்கமாட்டார்கள். உணவு இல்லாதவனுக்கு உணவு தேடிக்கொடுத்தல், துணி இல்லாதவனுக்குத் துணி தேடிக்கொடுத்தல், அழுக்காடை தரித்த நோயாளி ஏழைக்கு ஆடை தோய்த்துக் கொடுத்தல் முதலிய எவ்வகைத் தொண்டும் பயன் கருதாது ஆற்றுவதற்கு மனவெறுப்புக் கொள்ளாத பெரியவர்களே உண்மை அன்பர்கள்.

இத்தகையோர்களுடைய வாழ்க்கை வரலாறுகளைப் பெரியபுராணத்தில் காண்கிறோம். பெரியபுராணத்தை வீடுதோறும் ஓதி வந்தால் அதில் கூறப்பட்ட நாயன்மார்களுடைய தியாகமும் நமது உள்ளத்திலே பதியும்; நாமும் அவர்களைப்போல நடக்க முயல்வோம். அன்புச் செயல்களை நாளடைவில் ஒருவர் பெருக்கிக் கொண்டே செல்வாரானால், அன்பு செய்யும் பழக்கம் ஏற்பட்டு அவர் உள்ளம் அன்புமயமாய்விடும். உள்ளம் அன்புமயமாக மாறாவிட்டால், செயலும் நிலைபெறாது. இரக்கமே தெய்வத்தன்மையாதலின், இரக்கம் காரணமாகச் செய்யுஞ் செயலே தெய்வீக வாழ்க்கைக்குரிய அன்புச் செயலாகும்.

சிலர், குற்றம் புரிந்தவர், கூடாவொழுக்கத்தாரை நேசிக்க முடியாததென்பர். அது தவறு. கெட்டவர்களைத் திருத்த வேண்டும் என்னும் நல்லெண்ணம், இரக்கம், பொறுமை, குற்றங்களை மன்னிக்குந் தன்மை என்பவைகளே அன்பெனப்படுமென்பதை அவர்கள் அறியார்கள். குற்றம் செய்யும் தன் குழந்தையைத் திருத்துவதற்கு ஆசைப்படுந் தாய் போல, கெட்டவர்களைத் திருத்த விருப்ப முறுதலே அன்புச் செயலாகும்.

முதலில் ஒருவர் தமக்குப் பிறர் செய்த குற்றத்தை மன்னிக்கப் பழகுதல் வேண்டும். குற்றம் என்பது பெரும்பாலும் அறியாமையால் நிகழ்வதேயாகும். அறியாமை காரணமாகத் தீங்கு செய்தவர்பால் இரக்கங்கொள்ளுதலே சான்றோர் தன்மையாகும். மன்னித்தல் எதிர்மறைச் செயலாகும். உடன்பாட்டுச் செயலாவது பகைவர்க்கும்

நன்மை செய்தல். அங்ஙனம் செய்யும் நன்மைக்கும் அன்பு காரணமாக இருத்தல் வேண்டும். பகைவரிடம் அன்பு உண்டாக வேண்டுமானால் அது கடவுள் பக்தி உடையவருக்கே இயல்வதாகும். கடவுள் அருள் தம்மைக் காக்கும் என்ற உறுதி உடையவர்களே கடவுளைப் போலத் தீயவர்களுக்கும் நன்மையே செய்வார்கள். தீயவர்களும் உய்ய வேண்டும் என்கின்ற கருணையே அவருள்ளத்தில் குடிகொண்டிருக்கும்.

இராவணன் கயிலைமலையை எடுக்க முயன்று பிழைசெய்தாலும் மனந்திருந்திக் கடவுளை வழுத்தியவுடன் அவனுக்கு அவர் அருள் செய்தார் என்பதனை விளக்கவே, திருஞானசம்பந்தர் தமது ஒவ்வொரு பதிகத்து எட்டாம் பாட்டிலும் இராவணன் செய்தியைக் கூறினார் என்றார் ஆசிரியர் சேக்கிழார்.

**" மண்ணுலகில் வாழ்வார்கள் பிழைத்தாலும் வந்தடையின்**
**கண்ணுதலான் தன் கருணை கைக்கொள்ளுமெனக் காட்ட"**

என்று கூறினார். மன்னிப்புக் குணம் சமய ஆராய்ச்சி உடையவர்களிடம் ஏற்படுமானால், சமயச்சண்டைகள் உலகத்தில் நிகழமாட்டா. நம்மிடம் அருட்குணமில்லையானால் நமக்கு அருட் குணத்தைக் கொடுக்கும்படி கடவுளை இடைவிடாது வேண்டி அதனைப் பெறுதல் நமது கடமை. நாம் அமைதியாயிருக்கும் நேரத்தில் எதிரியினிடம் சார்ந்த நினைவுகள் உண்டாகும்படி நம்முடைய மனத்தைப் பழக்குதல் வேண்டும். இடைவிடாது அம்முயற்சியை உண்மையாக ஒருவர் செய்தால் எதிரியை மன்னிக்கவும் அவ்வெதிரிக்காகக் கடவுளிடம் பிரார்த்தனை செய்யவும் அவனோடு நட்புக்கொள்ளவும் வல்லவராதல் திண்ணம்.

ஒருவரோடும் பகை பாராட்டாதவரிடத்துக் கடவுளுடைய அருளும் உலகெங்கும் அன்புமே நமக்கு அனுபவத்திற்குப் புலனாகும். அப்போது நாம் வாழும் வாழ்க்கை தெய்வீக வாழ்க்கையாயும் நாம் இருக்கும் இடம் தெய்வீக உலகமாயும் நமக்கு விளங்கும்.

இதுவே தெய்வீக வாழ்க்கையின் இயல்பு.

# 2. திருவாசகத்தில் ஒரு வாசகம்

"திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்" என்பது நீண்டகாலமாகப் பழகி வந்த பழமொழி. திருவாசகத்தைப் படித்து உணர்ந்து உருகி அதில் அநுபவங்கண்டவர்களது உள்ளத்தில் இருந்து பிறந்த மொழி. நினைந்து நினைந்து, உணர்ந்து உணர்ந்து, நெகிழ்ந்து நெகிழ்ந்து, அன்பே நிறைந்து நிறைந்து, ஊற்றெழுங் கண்ணீரதனால் உடம்பு நனைந்து நனைந்து, அருளமுதே, நன்னிதியே, ஞானநடத்தரசே, என்னுரிமை நாயகனே என்று வனைந்து வனைந்து ஏத்தியவர்களின் உள்ள உருக்கத்தில் இருந்து பிறந்த மொழி.

தேனை அருந்துபவர்கள் எந்தக் கோணத்தில் இருந்து அருந்தினாலும் அதன் இனிமையில் எவ்வித மாற்றமும் இல்லை. மேலே உள்ளது, நடுவில் உள்ளது, அடியில் உள்ளது என்ற பேதமே இல்லை. பக்திக்கும் இத்தகையதொரு இலட்சணம் உண்டு. திருவாசகத்திலும் எந்த வாசகத்தைச் சுவைத்தாலும் இப்படியானதொரு அநுபவத்தையே நாம் பெறலாம். இதுபற்றியே திருவாசகத்தைத் தேனுக்கு உவமையாகக் கூறியுள்ளார்கள்.

தேன் பித்தத்தைப் போக்கும். மந்தத்தைத் தவிர்க்கும். நல்ல இரத்தத்தை நல்கும். நெடுங்காலமாக நமக்குத் தொல்லைதரும் பிறவிப்பிணியை மாற்றுவது திருவாசகத்தேன். நல்லதேன் நாட்பட்டால் கல்கண்டாக மாறும். அந்தக் கற்கண்டு தனி ஒரு சுவை உடையது. அதேபோலத் திருவாசகத்தை ஓதி உணர்பவர்களுக்கு நமச்சிவாயத்தின் மீது தணியாத ஒரு ஆராமை ஏற்படும். சாதனை மிகமிக நமச்சிவாயமாகவே அவர் மாறிவிடுவார்.

பார்க்குமிடமெங்கும் நீக்கமற நின்று நமச்சிவாயமே காட்சிகொடுக்கும். எல்லாம் சிவமயமாகவே காண்பர். திருவாசகத்தை எல்லாரும் படித்துத் தான் பெற்ற இன்பத்தை எல்லாரும் பெறவேண்டும் என்பது மணிவாசகப் பெருமானுடைய திருவுள்ளமாகும். திருவாசகம் முழுவதையும் கற்றுக் கொள்ள முடியாதவர்கள் அதன் சுவையின் ஒரு துளியையாவது சுவைக்க வேண்டும் எனப் பெரிதும் விரும்பினார். முழுவதையும் கற்றுணர முடியாதவர்கள் சிவபுராணம் முழுவதையும் படித்துணர்ந்தால் போதியது என்று உணர்ந்தார். சிவபுராணம் திருவாசகத்திற்கு முன்னுரை போன்றது.

இன்றைய உலகில் அதனைப் படிப்பதற்குக்கூட பலருக்குச் சோம்பல் உண்டு. இன்னும் பலருக்கு நேரம் இல்லாப் பிரச்சினை. அது மாத்திரமா? தியேட்டர் வாசலில் மூன்று மணித்தியாலம் காத்திருக்கும் மனிதன் கோயில் வாசலில் மூன்று நிமிடங்கள் நிற்பதற்கு ஆயத்தமாக இல்லை. தினமும் தினசரிப் பத்திரிகை வாசிப்பதில் மணித்தியாலக் கணக்கையும், நாவல் வாசிப்பதில் நாட்கணக்கையும் செலவு செய்யும் மனிதன் சிவபுராணத்தைத் தினசரி பாராயணமாகக் கொள்வதற்குப் பதினைந்து நிமிடங்கள் செலவு செய்ய ஆயத்தமாக இல்லை.

இச்சோம்பல் தனத்தை அன்றே அறிந்திருந்தார் மணிவாசகப் பெருமான். சிவபுராணத்தைத் தினசரி பாராயணம் செய்யமாட்டாதவர்கள் சிவபுராணத்தின் முதலிருவரிகளையாவது படித்துணர்ந்தால் போதியது என்று கருதினார். அதனால்

**'நமச்சிவாய வாழ்க! நாதன்தாள் வாழ்க!**
**இமைப்பொழுதும் என்னெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க!'**

என்ற இரு அடிகளையும் முதலிலேயே வைத்தார். சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்பவர்கள் இரண்டாவது வரிக்குமேல் படிக்க வேண்டிய அவசியம் ஏற்படாது. நெஞ்சத்தில் வாழும் இறைவனது இரு திருப்பாதங்களையும் கண்டுகொண்டே இருப்பர். இமைப்பொழுதேனும் எனது நெஞ்சில் இறைவனது திருப்பாதம் நீங்காது இருக்கின்றது என்ற பாவனை மிக உயர்ந்த பாவனையாகும். அந்தப் பாவனையில் உயர்ந்துவிட்டால் வேறு சாதனைகளே தேவையில்லை.

முதலிரு அடிகளையும் பஜனைகளின் நாமகோஷமாக எடுத்துக்கொண்ட தத்துவமும் இதுவாகும். இதனைச் சொல்வதற்குக்கூடப் பலருக்குச் சோம்பல். பழக்கப்படாத ஒரு தன்மை. மணிவாசகப் பெருமானுடைய கருணை இன்னும் மேலே விரிந்தது. முதல் வரியின் முதலாவது சொல்லைச் சொன்னாலே போதியது என்று கருணை பாலித்தார்கள். அதனாலேயே 'நமச்சிவாய வாழ்க' என்று சிவபுராணத்தை ஆரம்பித்தார்கள். திருவாசகத்தை முழுவதும் படித்துணர வாய்ப்பில்லாதவர்கள் கவலை கொள்ளத் தேவை இல்லை.

'நமச்சிவாய' என்று சொன்னாலே போதியது. அதுவே குரு உபதேசம். அதுவே மூலமந்திரம். இம்மந்திரத்தின் விரிவே

திருவாசகம். பல மூலிகைகளைப் பிடுங்கி அவற்றைச் சாறாக்கி அந்தச் சாற்றை ஒரு சிறு வில்லையாக்கி உண்பதுபோன்றது நமச்சிவாய மந்திரத்தை நாம் ஜெபம் செய்வது.

**நமச்சி வாயவே ஞானமுங் கல்வியும்**
**நமச்சி வாயவே நானறி விச்சையும்**
**நமச்சி வாயவே நானவின் றேத்துமே**
**நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே**

என்பது அப்பர் சுவாமிகளுடைய திருவாக்கு.

திருவாசகத்தில் கடைசிப் பதிகம் அச்சோப் பதிகம் ஆகும். அதாவது இறைவனை அறியும் அநுபவ வழியை அறியாது இருந்த தன்னைச் சிவமாக்கிய அருட்திறத்தைக் கூறி வியக்கின்றார். இதற்குக் காரணம் யாது? நமச்சிவாய மந்திரமே.

"நான் சிவ சிவா என்றிருக்கின்றேன். என்னை ஏன் தொந்தரவு செய்கிறாய்?" என்று நம்மவர் அடிக்கடி சொல்வதை நாம் கேட்கின்றோம். உண்மையில் சிவா என்று சொல்லியிருக்கமாட்டான். ஆனால் ஒருவன் ஒன்றும் செய்யாமல் சும்மா இருக்குந் தன்மையை நாம் சிவா என்றிருப்பதாகக் கூறுகின்றோம். நமது முன்னோர் சிவனாமத்தை மனதில் ஜெபித்துக் கொண்டே சிவத்தியானம் செய்து வந்தார்கள். அதாவது பொறிகளைப் புலன்வழிச் செல்ல விடாது மனத்தை அடக்கியிருந்தார்கள். இதுவே காலகதியில், சிவா என்றிருப்பது என்பதற்கு யாதொரு வம்புக்கும் போகாமல் ஒடுங்கி இருக்கும் நிலையையும் குறிப்பதாகப் பேச்சு வழக்கில் வந்துவிட்டது.

எல்லாருக்கும் சும்மா இருக்க விருப்பம். ஆனால் சும்மா இருக்கத்தான் தெரியாது. சும்மா இருக்கும் சுகத்தைப் போல் உயர்ந்த சுகம் உலகில் வேறு எதுவுமே இல்லை. சும்மா இருக்கும் சுகத்தை அநுபவிக்க விரும்புவோர் திருவாசகத்தில் ஒரு வாசகமாகிய நமச்சிவாய மந்திரத்தை உபதேசம் பெற்று அதனைச் செபித்து அதிலே சித்திபெற்று எல்லாம் சிவமயம் என்றிருப்பார்களாக!

# 3. வலிவலம் மேயவன்

வலிவலம் என்பது ஓர் ஊர். இது திருவல்லம் என்றும் திருவலம் என்றும் அழைக்கப்பெறும். இது வடஆற்காடு மாவட்டத்தில் சென்னை பங்களூர் பிரதான சாலையில் சென்னையிலிருந்து எழுபத்தைந்து மைல் தூரத்தில் இருக்கிறது. பொன்னை என்று இன்று வழங்கும் நீவா நதிக்கரையில் இருக்கின்றது இத்தலம்.

இங்கு கோயில் கொண்டிருக்கும் சுவாமியின் பெயர் வல்ல நாதர். அம்பிகையின் பெயர் வல்லாம்பிகை, நற்றமிழ்வல்ல ஞானசம்பந்தர், கற்றவர் கண்டு மகிழும் இத்திருவல்லம் என்னும் தலத்துக்கும் வந்திருக்கிறார்.

**தாயவன் உலகுக்குத் தன் ஒப்பு இல்லாத்**
**தூயவன் தூமதி சூடி, எல்லாம்**
**ஆயவன் அமரர்க்கும் முனிவர் கட்கும்**
**சேயவன் உறைவிடம் திருவல்லமே**

என்று பாடியிருக்கின்றார். உலகுக்குத் தாயானவன், ஒப்பில்லாத் தூயவன், தேவர்கட்கும் முனிவர்கட்கும் சேயவன் திருத்தலம் திருவல்லம் என்கின்றது. அமரர், முனிவர் இருவரும் போகிகளாயும், மனன சீலர்களாயும் இருத்தலின் அவர்களுக்குச் சேய்மையானவன் எனவே ஞானிகட்கு மிக அண்ணியன் என்பது பெறப்பட்டது.

வில்வங் காடுகளாற் சூழப் பெற்றதாதலின் வில்வாரண்ய தலம் என்றும் சொல்வர். தீக்காலி என்பான் பூசித்துப் பேறு பெற்றமையால் தீக்காலி வல்லம் எனவும் வழங்கும். நவக்கிரகங்களும் வல்லாளனும் பூசித்துப் பேறு பெற்றனர். இங்குள்ள தீர்த்தம் கௌரி தீர்த்தம் எனப்படும்.

நம்மவர் கோயிலுக்கு விளக்கு வாங்கிக் கொடுப்பார்கள். ஆனால் எண்ணெய் வாங்கிக் கொடுக்கமாட்டார்கள். இலட்சக் கணக்கில் செலவு செய்து கோயில் கட்டுவார்கள். கோயில் பூஜை முட்டின்றி நடப்பதற்கு மானியம் வழங்கமாட்டார்கள். பதினாயிரக் கணக்கில் செலவு செய்து ஒருநாள் திருவிழா எடுப்பர். கோயில் கோபுரம் வெள்ளை அடித்து ஐம்பது ஆண்டுகளாகி இருக்கும். திருத்தலந்தோறும் பாடிய திருமுறைப் பாடல்கள்

இலட்சக்கணக்கில் உண்டு. அவற்றை ஒலிபரப்பி மூலம் கோயில் திருவிழாக்களிலே ஒலிபரப்பாது 'பொப்' இசைக்கு முக்கிய இடம்கொடுப்பர்.

ஒரு பக்தன் வலிவலம் கோவிலுக்கு இரண்டு விளக்குகள் கொடுத்ததோடு எண்ணெய்க்காக இரண்டாயிரம் குழி நிலம் மானியமாக விட்டதாகக் கல்வெட்டுக் கூறுகின்றது. குலோத்துங்கன், வீரசோழன் மனைவியான தன்னுடைய மகளுக்கு நன்மைகள் உண்டாகுமாறு விளக்குப் போடப்பட்ட செய்தி வருகின்றது.

கோயிலினுள்ளே உள்ள விநாயகருக்கு வலம் வந்த விநாயகர் என்றும் வரசித்தி விநாயகர் என்றும் பெயர்கள் உண்டு. இங்கே ஒரு புராணக்கதை இடம்பெறுகின்றது. பிள்ளையார் மாங்கனி பெற்ற கதை எங்கு நடைபெற்றது என்பதற்குத் தகுந்த ஆதாரங்கள் இல்லாவிட்டாலும் இங்குள்ளவர்கள் அங்குதான் அக்கதை நிகழ்ந்ததாக நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள். வலம் வந்து மாங்கனி பெற்று வரசித்தி பெற்றவர் அவர். பிரார்த்தனை செய்து கொள்ளும் பக்தர்களும் வரசித்தி பெறுவதற்கு அருளுவார். இங்குள்ள மக்கள் கதையையும் அதற்குரிய படங்களையும் எழுதி, அங்குள்ள வல்லநாத ஈசுவரர்கோயிலில் தொங்கவிட்டு வைத்திருக்கிறார்கள்.

திருமுறைகளை வகுத்த நம்பியாண்டார் நம்பி அவர்கள் பாடியுள்ள நாரையூர் விநாயகர் இரட்டை மணிமாலையில் ஒரு பாடலில் இப்புராணச் செய்திகள் வருவதைக் காணலாம்.

**கொம்பனைய வள்ளி கொழுநன் குறுகாமே**
**வம்பனைய மாங்கனியை நாரையூர் – நம்பனையே**
**தன்னவலம் செய்துகொளும் தாழ்தடக் கையாய் என்நோய்**
**பின் அவலம் செய்வது ஏனோ பேசு?**

இங்கு இன்னும் ஒரு விசேடம் உண்டு. எல்லாக் கோயில்களிலும் நந்தி சுவாமியையே பார்த்துக் கொண்டிருப்பார். இங்கோ நந்தி பின் புறத்தையே சுவாமிக்குக் காட்டிக் கொண்டிருக்கின்றார். இதற்குச் சரித்திரம் ஒன்று உண்டு.

கோயிலுக்குப் பக்கத்திலே வல்லாம்பேட்டை என்பது ஒரு மலை. அம்மலையில் வாழ்ந்து வந்தவன் கஞ்சாரன் என்னும் அசுரன். அவன் மக்களை மிகக் கொடுமை செய்தான். மக்கள்

வல்லநாதரிடம் மனமுருகி முறையிட்டார்கள். அம்மக்களுடைய துயர் துடைக்க நந்தியை இறைவன் ஏவினார். அன்று அவ்வசுரனைத் துரத்திச் சென்ற நந்தி அன்று தொடக்கம் திரும்பாமலேயே இருக்கின்றது.

அசுரன் இனிமேல் எப்பொழுதாவது இப்பக்கம் வரக்கூடாது என்பதற்காக நந்திதேவர் விழிப்பாய் இருக்கிறார் என்பது ஒரு கருத்து. நந்திதான் ஜீவாத்மா. ஜீவாத்மா எப்போதும் இறைவனைவிட்டுவிலகித் தூரவே சென்று கொண்டிருக்கின்றது. இறைவனோ தன்னோடு ஜீவாத்மாவைச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்ற ஆசையினால் ஜீவாத்மாவின் பின்னாலேயே திரிந்து கொண்டிருக்கின்றார் என்பது இன்னொரு கருத்து. “புறம்புறந் திரிந்த செல்வமே சிவபெருமானே” என்பது மணிவாசகர் வாக்கு.

சம்பந்தப் பெருமான் மூன்று வயதிலேயே குளக்கரையில் இருந்து திருத்தோணியப்பரை அம்மையே அப்பா என்று அழைத்த செய்தி எல்லாரும் அறிந்த ஒன்றாகும். அம்மை வந்து ஞானப்பாலூட்டிய செய்தியை அடிக்கடி நினைவு கூருவார். வல்லநாதரைப் பாடிய பதிகத்தில் ஏழாவது பாடலை ‘தாயுநீயே, தந்தைநீயே’ என்று தொடங்குகின்றார்.

உலகில் உயிர்கள் எல்லாவற்றுக்குந் தாயும் உண்டு; தந்தையும் உண்டு. இதை மறுத்துச் சொல்லும் சமயமோ, நாடோ, சமூகமோ கிடையா. இறைவனை அம்மை அப்பனாக உணர்ந்தது சைவசமயம். நமக்கு அம்மை வேறு, அப்பன் வேறு. உலகில் உள்ள எல்லா உயிர்களுக்கும் அம்மை அப்பனாகக் காட்சி தருகின்றான் இறைவன்.

இறைவனைப் பாடிய எல்லாப் பெரியார்களும் இறைவனைத் துதிக்கின்றபோது அம்மையை முதலாக வைத்துத் தோத்திரம் புரிவார்கள். ஏன் எனில் பிறந்து விழித்தவுடன் தாய் தானே முதலிற் காட்சி அளிக்கின்றாள். தாய் காட்டினால்தானே தந்தையைத் தெரியும்.

“அம்மையே அப்பா ஒப்பிலாமணியே” என்றார் மணிவாசகர்.
“அம்மையப்பா இனியாற்றேன்” என்றார் இராமலிங்கசுவாமிகள்.
“அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்” என்றார் ஔவையார்.
“மாத்ரு தேவோபவ, பித்ரு தேவோபவ” என்கின்றது வேதம்.

சங்கரன் என்ற சொல்லுக்குச் சுகத்தைச் செய்பவன் என்பது

பொருள். இறைவன் ஜீவர்களுக்கு நன்மையே செய்கின்றான். சிலசமயங்களில் அவை துன்பம் போல நமக்குத் தெரியும். வைத்தியர் புண் ஒன்றைச் சுகப்டுத்துவதற்காகக் கத்தியால் வெட்டுகின்றார். அவர் செய்வது துன்பம்போல இருந்தாலும் முடிவில் இன்பமாகவே முடிகின்றது.

பிரியத்தைச் செய்யும் தாயாகவும் நன்மையை நாடிச் செய்யும் தந்தையாகவும் உயிர்கட்கு நன்மை செய்தலையே இயல்பாகக் கொண்டு விளங்கும் சங்கரனாகவும் இறைவன் விளங்குகின்றான். அழுந்தொறும் அணைக்கும் அன்னையாகவும், அறிவிலாது ஓடி ஓடி விழுந்தொறும் எடுக்கும் அப்பனாகவும், தொழுந்தொறும் காக்குந் தெய்வமாகவும் விளங்குகின்றான் இறைவன்.

வேதங்களோ அன்று தொடங்கி இன்றுகாறும் இறைவனை ஆராய்ந்து கொண்டே இருக்கின்றன. ஆனால் அவற்றினால் ஒரு முடிவையுங் காணமுடியவில்லை. "வேதங்கள் ஐயா என ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியன்" அல்லவா? "ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்குச் சோதிக்க வேண்டாம்" சுடர்விட்டுப் பிரகாசிக்கின்றான் நமது உள்ளத்தில். பிரம விட்டுணுக்களாலும் காண்பதற்கரிய இறைவனை நாவுக்கரசர் உள்ளத்திலே தேடிக்கண்டு கொண்டாராம்.

**" தேடிக்கண்டு கொண்டேன் திருமாலொடு நான்முகனும்**
**தேடித் தேடொணாத் தேவனை என்னுள்ளே**
**தேடிக்கண்டு கொண்டேன்"**

என்று ஆனந்தக் கூத்தாடுகின்றார்.

வேதங்கள் தேடியும் காணமுடியாத உன்னை என்மனம் பக்திசெய்ய விரும்புகின்றது. மனம் எப்படிப்பட்டதென்று எனக்கல்லவா தெரியும்? வேதத்திற்கு மேகத்தை உவமை கூறினார்கள். அதுபோதவில்லை. காற்றை உவமை கூறினார்கள். அதுவும் போதவில்லை. மனோ வேகம்தான் உலகில் பெரிய வேகம் என்று முடிவு கட்டினார்கள். மனத்தை உன்னிடத்தில் நிறுத்திப் பக்தி செய்ய விரும்புகின்றேன். ஆனால் அதற்கிடையூறாக ஐம்புலவேடர்கள் ஆறலைக்கின்றார்களே.

மாயா காரியமாகிய இவ்வுடம்பிற்குள் ஐந்து பேர்கள் இருந்து கூத்தடிக்கின்றார்கள். பஞ்சேந்திரியங்கள் இருந்து கொண்டு

மனத்தை உன்னிடம் பொருந்த விடாது செய்கின்றனர். இப்போ கொட்டம் அடிக்கும் ஐந்து பேரும் ஒரு நாளைக்கு இருந்தாற்போல் கைவிட்டு விடுவார்கள். அத்தருணத்திலாவது உனது துணை வேண்டாமா? "ஐவருங் கைவிட்டு மெய்விடும்போது அடியேனுன் அடைக்கலமே" என்கின்றார் அருணகிரியார்.

ஒரு வீட்டிற்கு ஐந்து வாசல். வீட்டின் நடுவே ஒரு குத்து விளக்கு. அதை எரியவிட்டார்கள். ஐந்து வாசலையும் அடைத்திருந்த போது எழுதிய சித்திரம் போலச் சுடர்கள் ஒளிவிட்டுப் பிரகாசித்தன. ஆனால் ஐந்து கதவுகளையும் திறந்து விட்டபோது அந்தச் சுடர் அலைந்த அலைவைச் சொல்லவும் வேண்டுமா? நாலா பக்கமும் சுழன்று சுழன்று அலைந்தன. இத்தகையதொரு நிலையில் தான் நமது மனமும் அலைந்து கொண்டிருக்கின்றது.

பெருமானே இத்தகைய மன மாயத்திற்குப் பெரிதும் அஞ்சுகின்றேன். 'இம்மாயத்தைத் தீர்த்து என்னை ஆண்டருள்வீராக. இப்பொழுது பாடலைப் பாருங்கள்.

**" தாயு நீயே தந்தைநீயே சங்கரனே அடியேன்**
**ஆயுநின்பால் அன்புசெய்வான் ஆதரிக்கின்ற துள்ளம்**
**ஆயமாய காயந்தன்னுள் ஐவர்நின்று ஒன்றலொட்டார்**
**மாயமே என்று அஞ்சுகின்றேன் வலிவலமேயவனே."**

'திருவலிவலத்தில் கோயில் கொண்ட பெருமானே, அன்பர்க்கு நன்மை செய்பவனே! எல்லார்க்குந் தாயும் நீதான் தந்தையும் நீ தான் வேதங்கள் இன்னமும் ஆராய்ந்து கொண்டிருக்கும் முடிவுகாணாத உன் மீது என்மனம் பக்தி செய்ய விரும்புகின்றது. ஆனால் அதற்கு இடையூறாக மாயா காரியமாகிய இவ்வுடம்பிற்குள் பஞ்சேந்திரியங்கள் இருந்து கொண்டு மனத்தை உன்னிடம் பொருந்தவிடாது செய்கின்றன. இவர்களின் மாயம் இத்தன்மையானதே! என்று இதற்கு அஞ்சுகின்றேன். இம்மாயந் தீர்த்து அருள்புரிவீராக!' என்பது இதன் பொருள்.

# 4. தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே!

தாள் + தளை என்ற இரு சொற்கள் சேரும்போது தாடலை என்று ஆகி ஒரு சொல்போல நிற்கின்றது. சொல்லால் இரண்டாயினும் பொருளால் ஒன்றாகி நிற்கும் இந்த நிலையை சிவனும் ஆத்மாவும் ஒன்றுசேரும்போது உண்டாகும் அத்துவித நிலைக்கு உதாரணமாகக் காட்டுவார் உமாபதி சிவாச்சாரியார். சிவமும் ஆத்மாவும் கலக்கின்றதாகிய பிரிக்க முடியாத அந்த இன்பக்கூடலே அத்துவித முத்தி எனப்படும்.

ஆன்மாக்கள் எல்லாம் பெண்கள், சிவன் ஒருவனே ஆண். ஆனபடியினால்தான் இறைவனுக்குப் புருஷோத்தமன் என்ற பெயரும் ஏற்பட்டிருக்கிறது. பெண் ஒருத்தி ஆண்மகன் ஒருவனுடன் கூடி இன்பம் அடைதல் உலக இயற்கை நியதி. அதைமீறிப் பெண்ணொருத்தி இன்னொரு பெண்ணுடன் சேருவதால் இன்பத்தைப் பெறமாட்டாள். இங்ஙனமே சிவனுடன் சேரும் ஆன்மா பேரின்பப் பேற்றினை அனுபவிக்கும். அருளோடு சேரும் ஆன்மா அங்ஙனம் அனுபவிப்பதில்லை. ஆன்மாவைச் சிவத்துடன் சேர்த்து வைப்பது திருவருளே!

ஆறு கடலைச் சேர்ந்தபின் ஆறு என்ற பெயரைப் பெறுவதில்லை. கடல் என்ற பெயரையே பெறும். இறைவனை ஆத்மா சேர்ந்த பின் இருபொருள் அல்ல, ஒன்றே தான். பரம்பொருளைத் தவிர உலகில் வேறு ஒன்றுமே இல்லை.

மணப்பருவம் அடைந்த ஒரு பெண், வெளியிலே அதிகம் செல்லாத பெண், வீட்டோடு 'அடைந்து கிடக்கும்பெண், யாராவது புதிய ஆண்கள் வீட்டிற்கு வந்தாலும் அவர்கள் கண்களிற் படாமல் ஓடி ஒதுங்கிக் கொள்ளுவாள். இக்காலத்திலே பெண்களும் ஆண்களும் அடிக்கடி சந்திக்கும் வாய்ப்புகள் உண்டு. அதனால் கூட்டி வைப்பாரின்றித் தாமே கூடிக்கொள்வார்கள். பெற்றோருக்கு விருப்பமில்லாவிட்டாலும் தாமே பதிவுத் திருமணம் செய்துகொண்டு வாழ்வார்கள்.

ஆனால் இப்பெண் யாரையும் மனதிலே கொள்ளாதவள். தாய் தந்தையர் தம்மகளுக்கேற்ற மணாளனைத் தேடி அலைவதை அவள் அறிவாள். யார் யாரோ வீட்டுக்கு வருவார்கள். தாயும் தந்தையும் சில சமயங்களில் இரகசியமாகப்

பேசுவதும் இவள் காதுகளில் விழுவதுண்டு. பெரியவர்களுடைய கருமங்களிலே அவள் தலையிடுவதில்லை. ஆனால் தன்னைப் பற்றிப் பெற்றார் கவலைப்படுவதை மாத்திரம் அறிவாள்.

ஒருநாள் ஒரு நல்ல செய்தி அவள் காதில் விழுந்தது. ஒரு நல்ல இடத்தில் விவாகம் பொருந்தியிருக்கிறது என்பதுதான் அந்தச் செய்தி. அடுத்த வீட்டு மாமி மாப்பிள்ளையினுடைய பெயரைச் சொன்னாள். பெயரே அவளுக்கு நல்லாகப் பிடித்துவிட்டது. மாமி மாமி அவர் எப்படி இருப்பார்? கறுப்பா? சிவப்பா? ஒல்லியா? மொத்தமா? நீங்கள் அவரை நேரில் கண்டீர்களா? உங்களுக்கு அவரைத் தெரியுமா? என்று கேள்விக்குமேல் கேள்வி போட்டு துளைத்துவிட்டாள்.

மாமி மாமி அவர் எந்த ஊர்க்காரராம்? ஊரின் பெயரைச் சொன்னதுமே அவளுக்கு ஊரின் பெயரே நன்கு பிடித்துக் கொண்டது. படத்தைப் பார்த்துத் தனக்கு வரப்போகிற கணவனுடைய 'குணநலன்கள் எல்லாவற்றையுமே அறிந்து கொண்டாள். தனக்கு வரப்போகிற கணவனுடைய பெயரை மற்றவர்கள் உச்சரிக்கும் போதெல்லாம் மனம் புளகாங்கிதம் அடைந்தாள். அவனுடைய ஊரின் பெயரைச் சொன்னாலே போதும் அவளுடைய உள்ளத்தில் புத்துணர்வு தோன்றிவிடும். ஆசை வெட்கம் அறியாது என்பார்களே! அவன் மீது பைத்தியமே கொண்டுவிட்டாள்!

மாப்பிள்ளை பெண்பார்க்க வந்தார். எப்படியோ மாப்பிள்ளையைப் பார்த்துவிட்டாள். கருத்துக்கேற்ற கணவன் என்று கனிகூர்ந்தாள். விவாகமும் நடந்தது. விவாகம் செய்த அன்றே அன்னையையும் தந்தையையும் விட்டுக் கணவனுடன் சென்றுவிட்டாள். இதுவரை திருமணம் ஆகவில்லையே என்று கவலைப்பட்ட பெற்றார் மகள், தங்களைப் பிரிந்து செல்லுகின்றாளே என்றும் கவலைப்பட்டனர். உலக நியதியைக் கருதிப் பெற்றார் ஆறுதல் அடைந்தனர்.

கணவனைக் கைப்பிடித்த உடனே எல்லாம் அவனே என்று உறுதி பூண்டாள். அன்னை தந்தையரை மாத்திரம் அல்ல. பக்கத்திலுள்ளாரோடு சேர்ந்து பழகிய பழக்கங்களையே மறந்துவிட்டாள். கணவனைத் தவிர வேறு எதுவும் அவள் உள்ளத்தில் இடம்பெறவில்லை. பெயரைக்கூட மறந்து விட்டாள். விவாகத்திற்கு முன்பு தந்தையின் பெயராலேயே தன்னை அழைத்து எழுதி வந்தவள் கணவனைக் கைப்பிடித்த உடனே

கணவனுடைய பெயரையே வைத்துக் கொண்டாள்.

ஒரு பெண்ணுடைய தியாகம் இதுதான். பிறந்த இடத்தில் வேறு பெயரோடு இருந்தவள் புகுந்த இடத்தில் பெயர், உடல், பொருள், ஆவி எல்லாவற்றையுமே தியாகம் செய்து விடுகின்றாள். இத்தகைய தியாகத்தோடு தன் மனைவி வந்துள்ளாள் என்று சில கணவன்மார் சிந்திப்பதில்லை. கணவனே சரண் என்று அவன் என்ன செய்தாலும் பொறுத்துக் கொண்டு அவனுக்கே தன்னை ஆளாக்கி வாழுகின்ற வாழ்க்கை ஒரு பெண்ணினால் முடியுமே தவிர, வேறு யாரால் முடியும்?

இதுவரை உலக நிகழ்ச்சியினைப் பார்த்தோம். இதனை ஆழ்ந்து சிந்திப்பவர் யாருமில்லை. அங்ஙனம் ஆழ்ந்து சிந்திப்பார்களேயானால், நினைத்த உடனேயே கலியாணப் பதிவை நீக்கிக் கொண்டு இன்னொருவனுடைய கையைப் பிடித்துக் கொண்டு செல்லும் பழக்கம் ஏற்படுமா? இதே இலௌகீக நிகழ்ச்சி ஆத்மீக நிலையில் எவ்வாறு பொருந்தியுள்ளது என்பதைப் பார்ப்போம்.

தலைவனை அடைய வேண்டுமென்ற தாகம் ஒரு ஜீவாத்மா. இலௌகீகத்தில் ஒரு பெண்ணையும் ஒரு பிள்ளையையும் அன்னை தந்தையரோ, கலியாணத் தரகரோ கூட்டி வைத்தல் போல **ஆன்மாவாகிய பெண்ணை தலைவனாகிய இறைவனோடு சம்பந்தப்படுத்தி வைப்பவர்தான் குரு. அந்தக் குருமூலமாகத் திருவருளே ஆத்மாவை இறைவனோடு சேர்த்துவைக்கின்றது.**

சீடனுடைய பக்குவநிலையை அறிந்து ஒருநாள் குரு உபதேசம் செய்தார். மந்திர உபதேசம் கிடைத்தது. அதுவே தலைவனாகிய இறைவனுடைய நாமமாகவும் அமைந்திருந்தது. பஞ்சாட்சரத்திற்கு ஒரு பெருமை உண்டு. அது மந்திரமாகவும் இறைவனுடைய திருப்பெயராகவும் அமைந்துள்ளது. ஆனபடியினால்தான் அது வேதம் நான்கிலும் மெய்ப்பொருளாக விளங்கிக் கொண்டிருக்கின்றது. அந்த மெய்ப்பொருள் 'நாதன் நாமம் நமச்சிவாய' என்பதாகும். ஞானமாகவும், கல்வியாகவும், வித்தையாகவும், நாவினால் உயர்வாக உச்சரிக்கக்கூடியதாகவும், வாழ்க்கையில் நன்னெறியைக் காட்டக்கூடியதாகவும் அமைந்தது நமச்சிவாயமாகும்.

மந்திர உபதேசம் கிடைத்த உடனே அந்த மந்திரப் பொருளை குரு விளக்கம் செய்வார். ஒவ்வொரு மந்திரத்திற்கும்

தியான சுலோகம் ஒன்று உண்டு. அதுவே மந்திரப் பொருளைத் தெளிவுபடுத்துவது. நமசிவாய மந்திரத்திற்குரிய தியான சுலோகம் பின்வருமாறு:-

ஐந்து திருமுகமே நிறங்கள் ஐந்தே ஐமூன்று திருக்கண்ணே
அத்தம்பத்தே வஞ்சமழுச் சூலமுடன் வாள் அபயம் வரதம்
வலப்பால் மற்றிடப்பால் துஞ்சனலும் அங்குசமும் அணிபாம்பும்
தோலும் உடனுண்டே இப்படி எம்பெருமானைக் காணலாமே.

உபதேச மந்திரமும் உபதேச மந்திரப் பொருளும் அறிந்த பின் அதனைச் சாதனை செய்ய வேண்டியதுதானே முறை. அந்த இறைவன் பல ஊர்களிலும் பல தலங்களிலும் பலவித மூர்த்தமாக விளங்குகின்றான். எல்லா மூர்த்திகளிலும் எல்லாத் தலங்களிலும் இறைவன்தான் சாந்நித்தியமாக விளங்கினாலும் சிலருக்குச் சில தலங்களினுடைய பெயரைக் கேட்ட மாத்திரத்திலேயே ஒருவித மயிர்க்கூச்செறிவு உண்டாவதைப் பார்க்கலாம்.

சுந்தரருக்கு அடிக்கடி எங்கிருந்தாலும் திருவாரூர் நினைவு எழுந்ததுபோல ஆன்மாவாகிய பெண்ணுக்கும் தன்னை ஆட்கொண்ட தலைவனது தலத்தைக் கேட்ட உடனேயே ஒரு பைத்தியநிலை ஏற்பட்டுவிடுகின்றது. எல்லாவற்றிலும் எங்கும் இறைவனைக் கண்டுகொண்டிருக்கின்ற ஓர் ஆனந்த நிலையே பைத்தியநிலை என்று கூறப்படும். சிவபெருமானே சுந்தரரால் "பித்தா பிறைசூடி" எனப் பாடப்பெற்றார். இறைவனும் ஒரு பித்தன் தான். ஓர் ஆத்மாவானது தன்னை நாடிவந்து கட்டுகளினின்று தன்னை விடுவித்துக் கொள்ளாதா? என்றொரு பித்துப்பிடித்துக் கொண்டே இறைவன் உலகம் முழுவதிலும் அலைகின்றான்.

ஜீவாத்மாவுக்கு எத்தனை பிறப்போ அத்தனை பிறப்புக்களிலும் அன்னை எத்தனை அப்பன் எத்தனையோ யாரறிவார்? ஒவ்வொரு தாயும் குழந்தைகளுக்குத் தாயாகி இருப்பதோடு முடிவில் தமக்கொரு தாயைத் தேடிச் செல்வதே வழக்கமாகிவிட்டது. இதனைத் "தாய்த்தாய் கொண்டேகுமிவ்வுலகு" என்று ஒரு புலவர் பாடி உள்ளார்.

குருவினுடைய உபதேசம் கிடைத்த உடனே முன்னைய ஆசார அனுட்டானங்கள் எல்லாம் தாமே நழுவிவிடுகின்றன. நெல்

முளைக்கும்வரை உமியினுடைய பாதுகாப்பு அவசியமானதுபோல குருவினுடைய கிருபை கிடைக்கும்வரை ஆசார அனுட்டானங்கள் எல்லாமே தேவைதான். ஜீவன் முத்திநிலை அடைந்து விட்ட ஒருவனுக்கு இந்த ஆசார அநுட்டானங்களால் எவ்வித பயனும் இல்லை.

குருவினுடைய உபதேசத்தால் நான் என்ற அகங்காரம் அழிந்துவிடுகின்றது. நான் தானாகிறது. குருவினுடைய உபதேசம் கிடைத்த அன்றே பெற்றோர் இட்ட பெயரும் அழிந்துவிடுகின்றது. குருநாதன் வைத்த ஞானப்பெயரே நிலைத்து நிற்கிறது. கணவனைக் கைப்பிடித்தபின் பெண்ணின் பெற்றோர் இட்ட பெயர் மறைந்து கணவனுடைய பெயரே நிலைத்து விளங்குவதுபோல குருநாதனுடைய சம்பந்தத்தால் முன்னைய பெயரும் அழிந்து விடுகின்றது.

ஜீவாத்மாவின் தலை இறைவனுடைய தாள்சேர்தல் தாள்+தலை=தாடலை ஆகிறது. இதுவே அத்துவித முத்தி என்றும் பேசப்படுகின்றது.

எமது பிறப்பின் நோக்கமும் இறைவனுடைய தாள் சேர்தலாகும். இதனைத் திருநாவுக்கரசருடைய தேவாரம் பின்வருமாறு கூறுகின்றது:

**முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள்**
**மூர்த்தி அவனிருக்கும் வண்ணங் கேட்டாள்**
**பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்**
**பெயர்த்தும் அவனுக்கே பிச்சியானாள்**
**அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்**
**அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தைத்**
**தன்னை மறந்தாள் தன்னாமங் கெட்டாள்**
**தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே.**

இத்திருப்பாடல் திருவாரூர்ப் பெருமானது திருப்பெயரைக் கேட்ட உடனே தன்வசமழிந்த தலையன்புடையதாய தலைவி ஒருத்தியின் தன்மையை அவள் தோழி விளங்க உரைத்து செவிலிக்கு அறத்தொடு நின்றதாக வைத்துச் சத்திநிபாதத்து உத்தமர்களது நிலையை விளக்கியருளியது.

திருவருட் சக்தி ஆன்மாவிலே பதிதல் சத்திநிபாதம் எனப்படும். பகவான் ரமணமகரிஷி அவர்கள் சிறுவயதிலே

எப்பொழுதோ யாரோ ஒருவர் அருணாசலம் என்ற பெயரைச் சொல்லக் கேட்டார். அப்பெயரைக் கேட்ட உடனேயே அவருடைய உள்ளத்தில் ஒரு மாற்றம் ஏற்பட்டு விட்டது. சில நாட்களில் அப்பெயர் குறிக்கும் அருணாசலனைத் தேடிப் புறப்பட்டு விட்டார்.

அப்பெண் கேட்ட நாமம் சிவன் என்பதாகும். சிவம் என்ற சொல்லுக்கு மங்கலம், வசீகரித்தல் என்ற பொருள் உண்டு. இறைவனுடைய வண்ணம் பொன்வண்ணம் ஆகும். ஆரூர் என்பதற்கு எல்லாம் நிறைந்த ஊர் என்றும் பொருள் உண்டு.

தன்னை மறந்தமையாவது தலைவனையே நினையும் நினைவிலேயே தான் இது செய்கின்றமை என்பதை அறியாதொழிந்தமை. இறைவனை மறக்கிறோம். பொன்னை, மாதரை, மண்ணை மறந்துவிடலாம். தன்னை மறக்கிறதுதான் கடினம். ஆணவம் அற்ற நிலையிலேதான் தன்னை மறக்கக்கூடும். தாளைத் தலைப்பட்டமையாவது, தனக்கென ஒன்றின்றி அவன் வழியளாய் ஒழிந்தமை.

நாமங்கேட்டல், வண்ணங்கேட்டல், ஆரூர் கேட்டல், பிச்சியாதல் நான்கும் முறையே கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டைகூடல் என்னும் நான்குமாகவும் அமையும். பின்னால் கூறப்பட்டவை எல்லாம் அணைந்தோர் தன்மையைக் குறிக்கும். நாமம் பொதுவில் உணரப்படுவது. வண்ணம் சிறப்பாக ஆய்ந்து உணரப்படுவது. பித்து அதனில் அழுந்துதல்.

ஜீவாத்மாவின் தலை பரமாத்மாவின் தாளைப் பொருந்துதலே முத்தி அல்லது மோட்சம் எனப்படும்.

# 5. வழிபாடு

வழிபாடு என்ற சொல்லுக்கு ஆண்டவனது வழியிலே நிற்றல் என்பது பொருள். அந்த வழிதான் என்ன? இறைவனை உணர்தல். இறைவனை உணர்ந்து நெகிழ்தலே வழிபாடுகளுக்குள் எல்லாம் தலையாயது. இறைவனை உணர்ந்த ஒருவரால் தான் எல்லாப் படைப்புக்களிலும் இறைவனைக் காண முடியும்.

பெரியார் ஒருவர் பின்வருமாறு வேண்டுதல் செய்கின்றார்: "பெருமானே எனது இரு பிழைகளை மன்னிக்க வேண்டும். சென்ற பிறப்பில் வழிபடாத பிழையினையும் அடுத்த பிறப்பில் வழிபடாத பிழையினையும் பொறுத்துக் கொள்ளுதல் வேண்டும்." சென்ற பிறப்பில் வழிபடாத செயலினை இவர் எவ்வாறு அறிந்தார்? "அவரே சொல்லுகின்றார், பெருமானே சென்ற பிறப்பில் நான் வழிபாடு செய்யாததினால் அல்லவா இப்பிறப்பு எனக்கு ஏற்பட்டது. இப்பிறப்பு எனக்குச் சம்பவித்ததைக் கொண்டு சென்ற பிறப்பில் நான் உன்னை வழிபாடு செய்யவில்லை என்பது தெளிவாகிறதல்லவா?"

அடுத்த பிறப்பில் வழிபாடு செய்ய மாட்டார் என்பதனை எவ்வாறு அறிந்தார்? இப்பிறப்பில் உன்னை நான் மன மொழி மெய்களால் வணங்குகின்றேன். ஆதலால் எனக்கு அடுத்த பிறப்பு நிகழாது என்பது தெளிவாகின்றது. பிறப்பு இல்லையேல் வழிபாடும் இல்லையல்லவா?

ஓர் உண்மையான பக்தன் இந்த வழியிலேதான் தன்னைப்பற்றிச் சிந்திப்பான். எதற்கும் முதலில் மன ஒருமைப்பாடுதான் முக்கியத்துவம் அடைகின்றது. இலௌகீக விடயங்களில் ஒருவன் முதன்மை பெறுவதற்கும் மன ஒருமைப்பாடே முதற்காரணம். பரீட்சையில் விசேட சித்தி அடைய வேண்டும் என்று விரும்புகிற மாணவனுக்கும் மன ஒருமைப்பாடே மிக மிக முக்கியம். மாணவர்கள் தத்தமது மன ஒருமைப்பாட்டுக்கேற்கவே அவ்வப் பாடங்களில் புள்ளிகள் பெறுகின்றார்கள். பக்தியின் அளவு கோலும் மன ஒருமைப்பாடே.

மன ஒருமைப்பாடு ஏற்படுகின்ற அளவுக்கு பக்தி உண்டாகின்றது. பக்தியின் அளவுக்குத் தகுந்தவாறு இறைவனுக்குச் சமீபத்தில் சென்று கொண்டிருக்கின்றோம். பக்தி உள்ளத்தில் உணர்வு ஏற்படும் அளவுக்கு நான் எனது என்பன அழிந்து விடுகின்றன. அவை அழிந்த இடத்தில் எஞ்சி இருப்பது

நீ என்பதாகும். இங்கு நீ என்பதே கடவுள்.

கலியுகத்தில் கலியின் கொடுமைகள் அநந்தம். அக்கொடுமையினூடே ஆண்டவனை அடைவதற்கும் ஆண்டவனை வழிபாடு செய்வதற்கும் இலகுவான வழியைக் காட்டியுள்ளான்.

ஒரு கணப்பொழுது மனம் உருகி உணர்ந்து இறைவன் நாமத்தை ஒருமுறை சொன்னால் போதும் எல்லா வினைகளும் அழிந்து இறைவனுடைய திருக்காட்சி கிடைத்துவிடுகின்றது. ஆகவே கலியுகத்தில் பிறந்து கடவுளை அடைதல் இலகுவான மார்க்கம் என்றும் பெரியார் பலர் கலியுகத்திலேயே நாம் பிறந்த பிறவியை அறுத்துக் கொள்ள வேண்டும் என்றும் விரும்பி வேண்டுதல் செய்துள்ளார்கள்.

ஆனபடியினாலேதான் கலியுகத்தில் அடிக்கடி உலகெங்கிலும் அவதாரங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. கலியுகம் கடவுளை அடைவதற்கு மற்றைய யுகங்களை விடச் சிறந்தது என்றே நாம் கருத வேண்டியுள்ளது. கிடைத்தற்கரிய மானிடப்பிறவி கிடைத்துள்ளது. அதுவும் கலியுகத்திலே கிடைத்துள்ளது. இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ? இந்த யுகம் தப்பினால் எந்த யுகம் கிடைக்குமோ யாரறிவார்? காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ள வேண்டும். ஆகவே மனம் உருகி வழிபாடு செய்தல் ஒன்றே இக்கலியுகத்தில் பிறவி அறுக்கத்தகுந்த வழியாகும்.

# 6. உள்ளங் கவர் கள்வன்

உள்ளத்தைக் கவர்ந்த கள்வன் சிவபெருமான். யாருடைய உள்ளத்தைக் கவர்ந்தான்? மூன்று வயது நிரம்பப் பெறாத, பால்மணம் மாறாத திருஞானசம்பந்தக் குழந்தையின் உள்ளத்தைக் கவர்ந்தான்.

இப்படிச் சொல்வது யார்? திருஞானசம்பந்தக் குழந்தையேதான் இப்படிச் சொல்கிறது. சொல்வதற்குக் காரணம் யாது? தந்தையார் அடிப்பதற்காகத் தடியை ஓங்கினார். தந்தையாகிய சிவபாத இருதயர் இப்பாலனுக்குத் தடி ஓங்கக் காரணம் என்ன? குளக்கரையிலே குழந்தையைவிட்டுக் குளிக்கச் சென்ற தந்தையார் திரும்பி வந்தபோது குழந்தையின் கடைவாயிலே பால் சிந்தி இருந்தது.

இப்பால் எப்படி வந்தது? தந்தையார் குளத்தினுள் மூழ்கியபோது தந்தையாரைக் காணாது எதிரே தெரிந்த கோபுரத்தைப் பார்த்து "அம்மையே அப்பா" என்று அழுதது. முற்பிறவித் தொடர்ச்சியினால் குழந்தை அழுது அழைத்ததைக் கேட்ட சிவபெருமான் உமாதேவியாரோடும் வந்து பொற்கிண்ணத்திலே ஞானப்பாலை ஊட்டினார். குழந்தை ஞானப்பாலுண்ட செய்தியை எம்பெருமான் உலகுக்கு அறிவுறுத்த விரும்பி குழந்தையின் கடைவாயிலே பாலைச் சிந்தச் செய்தார்.

இதனைப் பார்த்த சிவபாத இருதயர் யார் உனக்குப் பால் ஊட்டினார்கள் என்று தடியை எடுத்து அடிப்பது போல ஓங்கியபோதுதான் முதலாவது திருமுறையில் உள்ள முதலாவது பாட்டுத் திருஞானசம்பந்தக் குழந்தையினுடைய வாயில் இருந்து வெளிவந்தது.

சிவபாத இருதயர் குழந்தை பிறந்த உடனே என்ன பெயரை வைத்தாரோ நாமறியோம். உமாதேவியார் ஞானப்பாலைப் புகட்டியமையினால் குழந்தை திருஞானசம்பந்தர் என்ற பெயரைப் பெற்றதோடு சிவஞானத்தையும் பெற்றுக்கொண்டது. சிவஞானத்தைப் பெற்றுக்கொண்ட குழந்தை முதன் முதலாக வாயைத் திறந்தது. அதுதான் -

**" தோடுடைய செவியன் விடைஏறியோர் தூவெண்மதிசூடிக்**
**காடுடைய சுடலைப் பொடிபூசி என்உள்ளங் கவர்கள்வன்**

ஏடுடைய மலரான் முனைநாட் பணிந்தேத்த அருள்செய்த
பீடுடைய பிரமா புரமேவிய பெம்மான் இவனன்றே”

என்ற திருப்பாடலாக மலர்ந்தது.

‘தோடு அணிந்த செவியை உடையவனாகி, எருதின்மேல் ஏறியவனாகி, வெண்மை நிறம் உடைய சந்திரனை அணிந்தவனாகி, சுடுகாட்டுச் சாம்பலைப் பூசியவனாகி, வந்து என் உள்ளத்தைக் கவர்ந்த கள்வனாவான். அவன் யாரென்றால், முன்னாளிலே பிரமதேவர் பூசித்தமையினால் அவருக்கு அருள்செய்து பிரமபுரம் என்ற பெயரைத் தனக்காக்கிக் கொண்ட சீர்காழி என்னுந் திருத்தலத்திலே உள்ள சிவபெருமான் ஆவர்.’

சிவபெருமானிடத்திலே பல நிறமுள்ள பல பொருட்கள் இருக்கின்றன. ஆனால் குழந்தையின் கண்ணுக்குத் தெரிந்த பொருட்கள் அத்தனையும் வெண்மை நிறம் உடையவையாகும். தோடு, எருது, நீறு, சந்திரன் இப்பொருட்கள் நான்குமே வெண்மைநிறம் உடையவை.

ஞானப்பால் உண்ட குந்தைக்கு சத்வகுணமே மேலிட்டிருந்தது. சத்வகுணத்தின் நிறம் வெண்மையாகும். ஆதலால் ஞானசம்பந்தக் குழந்தையின் கண்களுக்கு வெண்மை நிறமுள்ள பொருட்களே புலனாயின. உள்ளத்தில் எது பதிந்துள்ளதோ, அதுவேதான் பிரதிபலிக்கும். பொன்னிறமுள்ள கொன்றையும் வேற்று நிறமுள்ள பாம்பும் குழந்தையின் கண்களுக்குப் புலப்பட்டில.

உள்ளத்திலே ஒருவருடைய உருவம் பதிந்துவிட்டால் சில சமயத்தில் பார்க்கப்படுகிறவர்கள் எல்லாருமே அவராகத் தெரிவதுண்டு. இராவணனுடைய உள்ளத்திலே சீதை குடிபுகுந்து விட்டாள். சூர்ப்பனகையின் உள்ளத்திலே இராமன் குடிபுகுந்து விட்டான். அர்த்த சாமத்தில் சூர்ப்பனகையைக் கண்ட இராவணன் சீதை என்று கட்டித் தழுவுகிறான். இருவரும் ஒருவரை ஒருவர் கட்டித் தழுவியபின் உண்மையை உணருகின்றனர். இருவரும் வெட்கி ஒதுங்கிக் கொண்டனர்.

சிவம் வேறு சக்திவேறு அல்ல; இரண்டும் ஒன்றே. என்றாலும் வெவ்வேறாகவே வர்ணிக்கப்படுவது உண்டு. சிவபெருமான் அர்த்தநாரீச்சர வடிவம் உடையவர். வலது பாகம் ஆண் உருவம் இடது பாகம் பெண் உருவம் கொண்டவன்.

வந்தவர் சிவபெருமான். காட்சி கொடுத்தவர் சிவபெருமான். பாலூட்டியவர் உமாதேவியார். பாலூட்டியவரையும் காட்சி கொடுத்தவரையும் சேர்த்துச் சொல்ல வேண்டும். ஓருரு என்ற ஞானமும் தெளிவாக வேண்டும். பெண் பாதியின் காதிலே தோடும் ஆண்பாதியின் காதிலே குழையும் அணிந்திருக்கின்றான் இறைவன். ஆகவே ஆரம்பத்திலே "தோடுடைய செவியன்" என்றே ஆரம்பிக்கின்றார்.

தோடு பெண்ணையும் செவியன் ஆணையும் குறிக்கின்றது. ஆகவே அத்தொடர் அர்த்த நாரீச்சர வடிவத்தைத் தெளிவுபடுத்துகின்றது. பிள்ளையாருடைய அழுகைக் குரல் முதலிற் சென்றடைந்து, திருமுலைப்பால் அருளச் செய்தது திருச்செவி ஆதலின் அதனையே முதலில் நினைவுகூர்ந்தார். இதனைச் சேக்கிழார் பெருமான் "பல்லுயிருங் களிகூரத் தம்பாடல் பரமர் பால் செல்லுமுறை பெறுதற்குத் திருச்செவியைச் சிறுப்பித்து" என்று குறிப்பிடுகின்றார். தோடு என்று குறிப்பிட்டமையினாலே இடப்பாகத்துச் செவி என்பது பெறப்பட்டது. "தோடு, கூற்று, பித்தா மூன்றும் பீடுடைத் தேசிகன் பேரருள் ஆகும்" என்பதால் இது ஞானதேசிகனது திருவருள் திறத்தை விளக்குவதாகும்.

அம்பிகையின் பகுதியை நினைப்பதனால் ஞானப்பால் ஊட்டிய நன்றியறிவும், இறைவனோடு ஒன்றாக வைத்து நினைப்பதனால் உண்மை உணர்வும் உடையவர் என்பதைச் சம்பந்தப் பெருமான் புலப்படுத்திக் கொண்டார்.

ஞானசம்பந்தப் பெருமான் இனித்தேவாரப் பதிகங்களால் இறைவனுடைய புகழைப் பாடுவதையே தம்முடைய வாழ்க்கைப் பணியாக ஏற்றுக் கொண்டார். அவ்வாறு பாடும் போது அந்தப் பாடல்கள் சென்று சேரும் இடம் செவி ஆகையால் அதை முதலில் பாடினார்.

இறைவனுடைய திருக்காதில் இரண்டு கந்தருவர்கள் தோடாக இருந்து எப்போதும் இசைபாடிக் கொண்டே இருக்கிறார்கள். எந்த நூலைத் தொடங்கினாலும் மங்கல மொழியில் தொடங்குவது வழக்கம். இறைவன் திருவருளால் எந்த வாக்கு எழுந்தாலும் அது மங்கல மொழியேதான். தோடு மங்கலத்தைக்காட்டும் அறிகுறி. தோடு திருமங்கலியத்தோடு சேர்த்து எண்ணத்தகுவது. காதுகுத்துக் கலியாணம், கடுக்கன்பூட்டுக் கலியாணம் என்ற தொடர்களால் அதன் முக்கியத்துவம் விளங்குகின்றது.

தேவாரம் தமிழ் வேதம் எனப்படும். வடமொழி வேதம் எழுதாக்கிளவி. தமிழ் வேதமாகிய தேவாரம் எழுதும்மறை. வேதத்தைப் போன்ற சிறப்புடைய தேவாரப் பாடல்களில் வேதத்திலுள்ள சாரமான கருத்துக்கள் அமைந்திருக்கின்றன. வேதம் ஓம் என்ற பிரணவ ஒலியுடன் தொடங்குகிறது. தமிழ் வேதமாகிய தேவாரம் ஓம் என்று தொடங்கவில்லை. ஆயினும் ஓம் என்ற எழுத்தின் பெரும்பகுதியாகிய ஓ என்ற எழுத்தோடு தொடங்குகிறது. மந்திரத்தை மறைத்துச் சொல்வது பழக்கம். இங்கும் இந்த ஓம் என்ற மந்திரத்தை வேறு ஓர் எழுத்தோடு சேர்த்து வைத்தார் ஞானசம்பந்தர். மிகவும் நுட்பமான பொருளை ஏதேனும் ஒரு கருவியால் எடுப்பார்கள். நுட்பமான பொருளை உடைய ஓங்காரத்தைத் தகரமெய்யோடு சார்த்தி, தோ என்ற எழுத்தை முதலில் வைத்து தோடு என்ற தமிழ் வேதத்தைத் தொடங்கினார் சம்பந்தர்.

12ம் திருமுறையாகிய பெரிய புராணம் இறைவனார் அடியெடுத்துக் கொடுத்தபடி உலகெலாம் என்று தொடங்கி உலகெலாம் என்று முடிகின்றது. 12ம் திருமுறையில் கடைசி எழுத்து 'ம்' என்பது ஆகும். முதலாவது திருமுறையில் முதல் எழுத்து ஓ என்று தொடங்கி 12ம் திருமுறையில் 'ம்' என்று முடிவதால் பன்னிரு திருமுறைகளும் பிரணவமாகிய ஓம் என்பதன் விரிவையே கூறுகின்றன.

"எல்லையிலா மறைமுதல் மெய்யுடன் எடுத்த எழுது மறை
மல்லல் கொடுந் தமிழால் இம்மாநிலத்தோர்க் குரை சிறப்ப"

என்பது சேக்கிழார் வாக்கு. "எல்லையில்லாத மறையின் முதல் எழுத்தை ஒரு மெய்யெழுத்தோடு சேர்த்து வைத்து எடுத்துக்கூறிய எழுதுவதற்குரிய வேதமாகிய வளம் மிக்க நீண்ட தமிழால் இந்த மாநிலத்தில் உள்ளவர்களுக்குப் புகழ் சிறக்கும்படியாக" என்பது இதன் பொருள்.

சொரூபசிவம் மூவகை ஆன்மாக்களுக்கும் மூவகையால் அநுக்கிரகித்து மும்மலங்களையும் போக்கி அருளாரமுதத்தை உண்பித்தருளுகின்றது; அந்த வகையில் சகலருக்கு படர்க்கையில் தோன்றிப்புரியும் குரு அருளைக் குறிக்கின்றது. மூன்று வயதுக் குழந்தையாகிய ஞானசம்பந்தப்பிள்ளையார் தீவிரதர அன்புகொண்டு சன்மார்க்க நெறியாகிய நாயக நாயகித் தன்மையில் எடுத்த

எடுப்பிலேயே ஈடுபடுகின்றார். இது வயது கடந்த அநுபவம். இதனைத்தான் விட்ட குறை தொட்ட குறை என்பார்கள்.

உமாதேவியாருடைய திருமுலைப்பால் உண்ட பெருமையினாலே சம்பந்தப் பெருமான் இறைவனாருடைய திருமகனார் ஆகின்றார். சொரூப நிலையில் முருகப் பெருமானே சம்பந்தராகத் தோன்றினார் என்பது அருணகிரியாருடைய திருவாக்கு. கதிர்காமத் திருப்புகழில் முருகப் பெருமானை "வழுதிகூன் நிமிர்த்த பெருமாளே" என்று குறிப்பிடுகின்றார் அருணகிரியார்.

பெண்ணின் நல்லாளொடும் பெருந்தகையாகிய சிவபெருமான் இருந்த காரணத்தால் என்னுள்ளங் கவர்கின்றார் என நயந்தோன்றக் கூறினார். உலகத்தை இறைவன் தாங்குகின்றான்; இறைவனைத் தருமம் தாங்குகின்றது. இதனை விடை ஏறி என்பதால் குறிப்பிடுகின்றார். மதிக்குத் தூய்மையும் களங்கமின்மையும் இலக்கணமாதலின் தூவெண்மதிசூடி என்றார். இருள் ஒளியைச் சாராதவாறு போலக் களங்கம் இறைவனையும் அவனருள் பெற்றாரையும் சாராது. தூய்மை மனத்திலும் வெண்மை புறத்திலும் நிகழ்வது ஆதலின் இங்கே குறிப்பிடும் மதி நாம் காணும் சந்திரன் போன்ற பௌதீக சந்திரன் அல்லன் என்பது தெளியத்தக்கது. அன்றியும் ஒரு கலைப்பிறையாதலின் களங்கத்திற்கு இடமே இல்லை.

ஊழி முடிவு காலத்தைச் சர்வ சங்கார காலம் என்றும் சொல்வர். அக்காலத்தில் இறைவன் ஆன்மாக்களுடைய ஆறுதலை விரும்புகின்றான். எல்லா உலகமும் முறையே தத்தங்காரணத்துள் ஒடுங்கக் காரணங்கள் யாவும் இறுதியாக இறைவனிடம் ஒடுக்கப்பெறும்போது சர்வசங்காரம் நிகழ்வது. அந்த நேரம் எல்லாம் மயானமயமாகவே காட்சி அளிக்கும். மகா சங்காரமாவது நிவர்த்தியாதி பஞ்ச கலைகளிலும் அடங்கிய எல்லாப் புவனங்களையும் சங்கரிக்கின்ற நிலை. அப்போதுதான் எல்லாம் சுடலைக் காடாகும். அங்கு இருப்பது நீறு ஒன்றே. அதனை இன்னொருமுறை நீற்றமுடியாது. ஆகவே இறைவன் தானொருவனாகவே நின்று சுடலைப் பொடியைத் திருமேனி எங்கும் விளங்கப்பூசி திருநர்த்தனம் செய்கின்றான்.

உள்ளங் கவர்தலாவது அவனையன்றி உளங்கள் அறியாவாறு ஆட்கொள்ளுதல். யசுர்வேதத்தில் இறைவனுடைய புகழைக் கூறுவதும் பஞ்சாட்சரத்தைத் தன் நடுவிலே பெற்றதுமாகிய

ஸ்ரீருத்திரம் இறைவனைக் கள்வர் தலைவன் என்று கூறுகின்றது. இதனையே சம்பந்தர் உள்ளங்கவர் கள்வன் என்று கூறினார்.

கள்வன் பிறர் அறியாவாறு தன் தொழிலைப் புரிபவன். அதாவது தன்னை மறைத்துக் கொள்பவன். இறைவனும் சம்பந்தரை பிறர் அறியா வகையில் ஆட்கொண்டான். அவன் உருவைப் பிறர் காண இயலாது. ஒரு பொருளை உடையாரிடம் முன்னே சொல்லாமலே அப்பொருளைக் கவர்வது கள்வனுடைய தொழில். இங்கும் சம்பந்தப் பெருமானுடைய உள்ளத்தை அவர் எதிர்பாராமலே கவர்ந்து கொண்டவர் இறைவன்.

தோடுடைய செவியனாகி விடைஏறி ஓர் தூவெண்மதிசூடி, காடுடைய சுடலைப் பொடி பூசிவரும் பெருமான் கோலத்தின் உண்மையை நினைக்கும்போது உள்ளம் மயங்கி உருகுகின்றது. அந்த உருக்கத்திலே தன்னை இழந்த சம்பந்தப் பெருமான் உள்ளங்கவர்கள்வன் என்று குறிப்பிடுகின்றார்.

ஏடு என்றால் இதழ். தாமரை இதழிலே வாழ்பவன் பிரமன். பிரமன் வழிபாடு செய்த தலமாதலின் இறைவருக்கு பிரமபுரீசர் என்பதும் தலத்திற்குப் பிரமபுரம் என்பதும் பெயராயிற்று. சீர்காழிக்குப் பன்னிரண்டு திருப்பெயர்கள் உண்டு. சூரபத்மனுக்குப் பயந்தோடிய தேவேந்திரன் சீர்காழியிலே மூங்கில் உருவில் இருந்து தவஞ்செய்தான். இதனைக் கந்தபுராணம் "பத்துடன் இரண்டு நாமம் படைத்த தொல்காழி நல்கி" என்று குறிப்பிடுகின்றது.

ஞானசம்பந்தப் பெருமான் முற்பிறவியிலே மலரினாலே இறைவரை வழிபட்ட தொடர்ச்சி காரணமாகவே இந்தப் பிறப்பில் இந்த நிலை எய்தினார் என்பதனை மலரால் முன்பு வழிபட்டார் என்ற பொருள் கூறுதலும் உண்டு. பீடு என்றால் பெருமை. பிரமபுரத்திற்கு முன்னுள்ள பெருமைகளோடு ஞானசம்பந்தப் பெருமான் பிறந்த பெருமையும் சேர்ந்து கொண்டது. இறைவன் தாமே விரும்பி எழுந்தருளி வந்தாராதலின் மேவிய என்று குறிப்பிட்டார். இறைவன் நித்திய சுதந்திரன். ஆதலால் தானே எழுந்தருளுகின்றான். பெருமான் என்ற சொல்லே பெம்மான் எனத் திரிந்து வந்தது.

இப்பாடல் ஐந்தொழில்களையும் குறிப்பிடுகின்றது. 'விடையேறி' என்பது நித்தியத் தன்மையை வேண்டிய அறக்கடவுளை வெள்விடையாகப் படைத்து ஊர்தியாகக் கொண்டதால் படைத்தலும், 'மதிசூடி' என்பது சந்திரனுக்கு அபயம் தந்து திருமுடியில் ஏற்றிக் காத்ததால் காத்தலும், 'பொடிபூசி'

என்பது சர்வசங்கார காலத்து நிகழ்ச்சியை அறிவித்தலால் அழித்தலும், 'கள்வன்' என்பது இறைவன் எல்லா உயிர்களிடத்தும் நீக்கமற, நிறைந்திருந்தும் அவைகள் வினைப் போகங்களை நுகர ஒளித்து நிற்பதால் மறைத்தலும், 'அருள்செய்த' என்பது அனைவர்க்கும் அருள்செய்யும் அநுக்கிரகமாகிய அருளலும் ஆகிய ஐந்தொழிலின் விளக்கம் நாம் படித்து இன்புறத்தக்கது.

சந்திரன் குருத் துரோகம் செய்தவன். தக்கனுடைய யாகத்திலே சிவத் துரோகம் செய்தவன். குருவினுடைய மனைவியை விரும்பிய துரோகத்தையும் சிவனைத் தவிர வேறொரு தெய்வம் உண்டென்று நம்பிய சிவத்துரோகத்தையும் செய்த பாவியாகிய சந்திரன் இறைவனுடைய திருவடி சம்பந்தத்தால் இறைவனாருடைய முடியிலே இருக்கும் பாக்கியத்தைப் பெற்றான் என்றால் நாமும் இறைவனைச் சரண் அடைதலால் எப்பாவஞ் செய்தாலும் விமோசனம் கிடைக்கும் என்பது பெறக் கிடக்கின்றது.

ஸ்ரீமத் செப்பறைச் சுவாமிகள் இத்திருப்பாடலுக்கு இன்னும் விரிவான விளக்கங்கள் கூறியிருக்கிறார். தோடுடைய செவியன் முதலாயின இறைவனது எண்குணங்களாகிய சிறப்பு இயல்புகளை உணர்த்துவன. 'பிரமாபுரம்', 'விடையேறி' முதலியன இறைவனது தசாங்கங்களைக் குறிப்பால் உணர்த்தி நிற்பன. 'விடையேறி', 'பொடிபூசி', 'உள்ளங்கவர் கள்வன்' என்பன முறையே இறைவனுடைய மூன்று திருமேனிகளாகிய உருவம், அரு உருவம், அருவம் என்ற மூன்றையும் குறித்து நிற்பன.

இத்திருப்பாடல் ஞானசம்பந்தப் பெருமானுடைய ஞானம் முழுவதும் விளங்கும் ஒரு திருப்பாடலாக அமைந்துள்ளது. பின்னால் வரும் பாடல்கள் எல்லாம் இதற்கு விரிவுரைபோல் அமைந்து விளங்குவனவாகும்.

# 7. நடை உடை பாவனை

நடை, உடை, பாவனை நன்றாக இருந்தால் தானே நாலுபேர் மதிப்பார்கள் என்று சாதாரணமாகச் சொல்லுவதுண்டு. நடை என்ற சொல்லுக்கு நடத்தல் என்ற கருத்தும் உண்டு, ஒழுக்கம் என்ற கருத்தும் உண்டு. கூத்து, செலவு, செல்வம், தொடர்பு, நடத்தை, பழக்கம், முறை, வழக்கம், வழி, வாயிற்கடவை முற்றம் என்ற கருத்துகளையும் கொடுப்பது. இவற்றுள் எல்லாம் உயிராக இருப்பது ஒழுக்கம்.

"ஒழுக்கம் விழுப்பந் தரலால் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்"

என்பது வள்ளுவர் கூறிய ஒழுக்கமுடைமை என்ற அதிகாரத்தில் முதலாவது குறள் ஆகும். குற்றமற்ற பழக்கவழக்கங்கள் சேர்ந்த நல்ல நடத்தை ஒழுக்கமுடைமை என்று கூறப்படும். ஒவ்வொரு நாளும் நாம் செய்கிற ஒவ்வொரு செயலும் நல்ல நடத்தைக்கு ஒத்ததா என்று சீர்தூக்கிச் செய்யும் சீலமே ஒழுக்கமுடைமை.

நல்நடத்தை ஒருவனுக்கு மேன்மை உண்டாக்குவதனால் நல்ல - நடத்தையே உயிரைக்காட்டிலும் உயர்ந்ததாக மதித்து மிகவுங் கருத்தோடு காக்க வேண்டும். உயிர் எல்லாருக்கும் இருக்கிறது. உயர்வு எல்லாருக்கும் இல்லை. ஒழுக்கத்தினால் தான் உயர்வு கிடைக்கிறது. அதனால் உயிரைக் காட்டிலும் சிறந்தது ஒழுக்கம். எல்லா நன்மைகளுக்கும் ஒழுக்கமே காரணம்.

பிராணன் எல்லாவற்றிலும் பெரியதானாலும் ஆசாரத்தைப்போல் மறுமைக்கு உதவி செய்யமாட்டாது. ஒரு பெரிய மகாத்மா டெல்லிக்கு வந்தார். எல்லோரும் அவரது உன்னத குணநலன்களைப் பாராட்டினர். சிலர் அவரது ஞானம்பற்றி வானளாவப் புகழ்ந்தனர். வேறுசிலர் அவரது தத்துவம் பற்றிப் புகழ்ந்தனர். மகாத்மாவுக்கு மிக மகிழ்ச்சி.

ஒரு மனிதர் சொன்னார், "மகாத்மாஜி! உங்களிடத்தில் ஒரு குறை இருக்கிறது." சுவாமிஜி பதில் கேள்வி போட்டார். "என்னிடத்தில் என்ன குறை இருக்கிறது? என்னிடத்தில் குறையே இல்லை." "உங்களிடத்தில் கோபம் இருக்கிறது. இதுதான் உங்களிடத்தில் உள்ள குறை."

மகாத்மா பெரிதும் எரிச்சலுற்றார். அவர் தனது தலையை வெட்கத்தால் தொங்கவிட்டுக் கொண்டு உடனே டெல்லியைவிட்டு அகன்றார். ஒரு சிறுகுறை எல்லாப் புகழையும் கெடுக்கிறது. குறை ஏதும் இல்லாத ஒழுக்கத்தை ஒவ்வொருவரும் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

மனிதனைச் சமூகத்திலே அந்தஸ்துள்ளவனாக மதிக்கச் செய்வதில் உடை முக்கியத்துவம் பெறுகிறது. பாடசாலைகளில் சீருடை வைப்பதில் ஒரு கருத்துண்டு. உடையைக் கொண்டு மாணவர் மத்தியிலே உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற பேதம் உண்டாகாமலிருப்பதற்காகவே தான். "கந்தையானாலும் கசக்கிக்கட்டு" என்று சொல்வார்கள். உடைக்கு இரண்டு இலட்சணம். ஒன்று தூய்மை. அடுத்தது எளிமை. வெண்ணிற ஆடை எமது உள்ளத்தில் சாத்வீக குணத்தை வளர்க்கிறது. காந்திஜீயின் உடை தூய்மையோடு கூடிய எளிமை. மானத்தைக் காப்பதற்கே உடை. தன்னைப் பிறருக்குக் காட்டிக் கொள்வதற்காக அல்ல. விலை உயர்ந்த ஆடையும், தனது உடலை மற்றையோருக்குக் காட்டிக் கொள்ளும் உடையும் தவிர்க்க வேண்டியவையாகும்.

"உண்பதுநாழி உடுப்பது நான்குமுழம்
எண்பது கோடி நினைந் தெண்ணுவன"

என்பது பற்றி நாம் நிறைய நிறையச் சிந்திக்க வேண்டும்.

"குஞ்சிஅழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சலழகும் அழகல்ல"

என்பது பற்றியும் இக்காலத்தில் நிறையச் சிந்திக்க வேண்டும்.

சிந்தனை இன்றியே கண்ட பாவனையில் கொண்டை முடிவதே நமது வாழ்க்கையாக மாறிவிட்டது. மனதிற்குச் சாந்தியைக் கொடுக்கவல்லதும் கண்டோரின் உள்ளத்திலே தூய்மையான எண்ணத்தை உண்டாக்கவல்லதுமான உடையே நமக்கு வேண்டுவது. உடையின் நிறங்கள் நமது மனதின் கோணல்களை வெளிப்படுத்துகின்றன என்று பெரியோர் கூறுவர்.

பாவனை என்ற சொல் எண்ணம், தியானம், நடத்தை, மாதிரி, நினைப்பு, தெளிகை, தியானிக்கப்படுவது, அடையாளம்,

ஒப்பு, போலி, என்ற பொருட்களில் வருவது.

இறைவணக்கம் செய்வோர் ஓர் உருவமாக இறைவனைப் பாவிப்பது வழக்கம். காரணம் அப்போதுதான் மனது ஒடுங்கும். மனது ஒடுங்கும் அளவுக்கு பக்தி பெருகும். பக்தி பெருகினால் பாடி உருகலாம். அதனால் நெஞ்சக் கனகல்லும் நெகிழ்ந்து உருகுகின்றது.

கோயிலுக்குப் போகிறோம். கோயிலிலுள்ள திரு உருவத்தை பொன்னாலும் பட்டாலும் பூவாலும் அலங்கரித்து வைத்திருக்கின்றார்கள். அத்திரு உருவத்தை நன்கு பார்த்து-அடிக்கடி பார்த்து உள்ளமாகிய திரையில் எழுதுகின்றோம். கோயிலுக்குப் போனால் கோயிலிலுள்ள திரு உருவத்தைப் பார்த்துப் பக்தி செய்கின்றோம். வீட்டில் இருந்தால் வீட்டில் உள்ள படத்தைப் பார்த்துப் பக்தி செய்கின்றோம். வீடும் கோயிலும் தவிர்ந்த இடங்களில் என் செய்வது? அதற்காகத்தான் மனதில் இறைவன் திரு உருவை எழுதுகின்றோம். இதனை அப்பர் சுவாமிகள்.

"உயிராவண்ணம் இருந்து உற்றுநோக்கி உள்ளக் கிழியின்
உரு எழுதி"

என்று குறிப்பிடுகின்றார். முதலில் பாவித்து இறைஞ்சிய திரு உருவம் ஈற்றில் அநுபவப் பொருளாக மாறுகிறது.

யாரோ ஒருவரை நாம் எதிர்பார்த்துக் கொண்டிருப்போம். அவர்தான் வருகிறார் என்று தீர்மானித்து விடுவோம். அவர் கிட்ட வரவர அவரல்ல என்ற ஞானம் பிறக்கிறது. முதலில் எமது பகுதியிலிருந்த உருவமே தூரத்தில் வரும் உருவத்தைப் பிரதிபலித்துக் காட்டியது. மனத்திலுள்ள பாவந்தான் அதற்குக் காரணம். அது போலவே பரிபூரணமான அன்பு இருக்குமானால் ஒன்றும் இல்லாத இடத்திலும் நம்முடைய அன்புக்குப் பாத்திரமானவருடைய உருவம் தோன்றும்.

சீதா பிராட்டியின் அழகை சூர்ப்பனகை வாயிலாக இராவணன் கேட்டான். கேட்டவுடன் அந்தப் பிராட்டியிடம் ஆசை கொண்டான். அவன் சீதையைப் பார்த்ததில்லை. ஆனாலும் சூர்ப்பனகை வருணித்த வருணனையைக் கொண்டு எப்போதும் பிராட்டியின் நினைவாகவே இருந்தான்.

ஒருநாள் அவனுக்குத் திடீரென்று வெளியில் ஒரு பெண்ணின்

தோற்றம் தோன்றியது. அந்த அழகிய தோற்றத்தைக் கண்டவுடன் அவள்தான் சீதையாக இருக்க வேண்டுமென்று எண்ணினான். சூர்ப்பனகையை உடனே அழைத்து "இவள்தான் நீ சொன்ன சீதையோ? பார்" என்று புறவெளியைக் காட்டினான். சூர்ப்பனகை இராமன் நினைவாக இருந்தவள். அவ்வெறுவெளியை "இவர் தான் அந்த வல்வில் இராமன்" என்றாள். வெறும் வெளியில் அவரவர்களுடைய மனோபாவத்திற்கேற்றபடி உருவம் தோன்றியது.

இப்படிப்பட்டதொரு பாவனையே ஆத்மீகத்திலும் தியான நிலையில் முதலில் காணப்படுகிறது. அவரவர் சாதனையின் வலிவுக்குத் தக்கதாகவும் மனோநிலைக்குத் தக்கதாகவும் காட்சிகள் வித்தியாசப்படும். ஆத்மீக சாதனைகள் ஒன்றாக இருக்கலாம். அநுபவங்கள் இரண்டுபேருக்கு ஒன்றுபோல் இல்லை.

உண்மைக் கவிஞன் 'பாவனை' என்ற ஞான விமானத்தைத் துணைக்கொண்டுதான் எந்தக் காலத்தும் சஞ்சரிக்கிறான். எந்த உலகத்திலும் சஞ்சரிக்கிறான். மக்கள் உள்ளங்களிலும் சஞ்சரிக்கிறான். கூடுவிட்டுக் கூடுபாய்ந்து அரக்கர் உள்ளங்களிலே, அமரர் உள்ளங்களிலே சஞ்சரிக்கிறான். இராமனுடைய உள்ளத்தைப் பாவனை செய்தமை கம்பனுக்குப்பெருமை இல்லை. இராவணனுடைய உள்ளத்தைப் பாவனை செய்தானே அதுதான் கம்பனுக்குப் பெருமை. சீதையைப் பாவனைசெய்த கம்பன் சூர்ப்பனகையைப் பாவனை செய்தானே அதுதான் உண்மைக் கவித்துவம்.

ஆண்டாள் பாவை நோன்பு நோற்றது பாவனையால்தான். செயலைக் கொண்டு அல்ல, பாசுரத்தைக் கொண்டுதான்.

மனிதன் எதனைப் பாவனை செய்கிறானோ, அது ஆகிறான் என்பதுதான் உண்மை.

# 8. ஐயம் தெளிதல்

முற்காலங்களில் நம்மோடு நம் காரியங்களில் கலந்து கொண்டிருந்ததாகக் கூறப்படும் ரிஷிகள், மஹாத்மாக்கள் இப்போதும் இருக்கிறார்களா? அப்படி இருந்தால் இப்போது ஏன் நம்முடன் தொடர்பு வைத்துக் கொள்வதில்லை?

நமது புராண இதிகாசங்களில் மகரிஷிகள், ஜீவன் முக்தர்கள் முதலியோர்கள் சாதாரண ஜனங்களிடையில் கலந்துகொண்டு அவர்களுக்கு வேண்டிய சகாயங்களைச் செய்துகொண்டிருந்த தாகக் கூறப்பட்டிருப்பது உண்மையே. அவ்வளவுக்கு இக்காலத்தில் அந்த மகான்கள் நம்முடன் தொடர்புவைத்துக் கொள்ளாமலிருப் பதும் ஒருவாறு உண்மையே. ஆனால் அந்த மகான்கள் இன்னும் இருக்கிறார்கள். நம்முடைய நலத்திற்காக உழைத்தும் வருகிறார்கள். அவ்விதம் நம்முடைய நன்மையையே கோரி அவர்கள் உழைப்பது அவர்களுக்கு இயற்கை. மகான் சங்கராச் சாரியார் அவர்களைப் பற்றிக் கூறியிருப்பது கவனிக்கத்தக்கது.
சாந்த மூர்த்திகளான மகான்களான சத்சனங்கள் இன்றும் வசிக்கிறார்கள். கோடை வெயிலினால் பீடிக்கப்பட்ட உலகத்திற்கு வசந்தகாலம் இதம் அளிப்பதுபோல் உலக ஜனங்களுக்கு நன்மையைச் செய்து கொண்டிருக்கிறார்கள். பயங்கரமான பவ சாகரத்தைக் கடந்தவர்கள். அதுபோலவே மற்ற ஜீவன்களும் அந்தப் பவசாகரத்தைக் கடக்க வேண்டி, ஒரு காரணத்தையும் மேற்கொள்ளாமல் அவர்களுக்கு வழிகாட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

முக்தியை அடைந்தவர்கள், வேற்றுமை என்னும் அஞ்ஞானத்தைக் கடந்தவர்கள், இறைவனோடும், அதனால் மற்ற ஜீவன்களோடும் ஐக்கியத்தை அனுபவிக்கிறவர்கள். அந்த மகான்கள் நாம் இந்தப் பவ சாகரத்தில் மூழ்கித் தவிப்பதைக் கண்டு அவர்கள் மனமிளகி நம்மையும் அவர்கள் அடைந்திருக்கும் பரமானந்தப் பதவியை அடையும்படி செய்ய முயலுகிறார்கள். அதற்காகவே இவ்வுலகில் ஜீவன் முக்தர்களாக இருந்து பலவிதமான உதவிகளை நமக்குப் புரிந்து கொண்டிருக்கிறார்கள். அநேக சிஷ்யர்களை மேற்கொண்டு அவர்களுக்கு உயர்ந்த உபதேசங்களைக் கொடுத்து அவர்களை முன்னேறச் செய்வதுமல்லாமல் அந்தச் சிஷ்யர்கள் மூலம் உலகிற்கும் பல

நலன்களைப் புரிகிறார்கள். அவர்களிருப்பிடம் அந்தச் சிஷ்யர்களுக்குத் தெரியும். இன்னும் அத்தகைய மகான்களோடு தொடர்புள்ள பல சிஷ்யர்கள் இருக்கிறார்கள். ஆத்மீக உணர்ச்சியுள்ள ஜீவன்கள் அம்மகான்களுடைய பார்வையில் படத்தான் செய்வார்கள். எப்படியாவது அவர்களுடன் தொடர்பு ஏற்படும். ஆனால் அம்மகான்கள் யாரையும் நிர்ப்பந்தப்படுத்தி "யோகமார்க்கத்தைக் கடைப்பிடி" என்று தூண்டமாட்டார்கள். அந்த ஆத்மீக மார்க்கத்தில் உற்சாகம் ஏற்படும் ஜீவன்களுக்கு எப்படியாவது அம்மகான்களோடு தொடர்பு ஏற்படும் என்பதில் சந்தேகமில்லை.

ஆனால், ஏன் அம்மகான்கள் பகிரங்கமாக வந்து நம்முடன் உலாவுவதில்லை என்று கேட்டால், அதற்குப் பல காரணங்கள் உண்டு. அவர்களுடைய தூல சூக்கும சரீரங்கள் மிகவும் பரிசுத்தமானவை. அந்தப் பரிசுத்தம் மாசுபடாதிருக்கத்தான் அவர்கள் ஒதுங்கி வனாந்தரங்களில் தங்கள் ஆச்சிரமங்களில் வசிக்கிறார்கள். பலவித துர்க்கந்தங்களும், இழிவான காற்றுகளும் எண்ணங்களும் அமரிக்கையில்லாமையும் நிறைந்திருக்கும் நம்மிடையில் அவர்கள் வருவதானால் அவர்களது பரிசுத்த சரீரங்கள் இவற்றைத் தாங்கமுடியாது. நமக்கே சில இடங்களில் சென்றால் அந்த இடத்திலுள்ள சூழ்நிலையை நம்மால் சகிக்க முடிவதில்லையே. தங்களுடைய பரிசுத்தத்தைக் காப்பாற்றிக்கொள்ள பிரயத்தனம் செய்வதிலேயே அவர்கள் கவனம் செலுத்த வேண்டிவரலாம். நமக்கு உதவிபுரிய இடமில்லாமல் போய்விடலாம். அதனால் எந்த இடங்களுக்கு அவர்கள் பின்போக முடியுமோ அங்குதான் செல்வார்கள். மற்ற இடங்களுக்குத் தங்கள் சிஷ்யர்களை அனுப்பி அவர்கள் மூலம் தங்கள் காரியங்களை ஒருவாறு முடித்துக் கொள்வார்கள். தற்கால மனித சமூக நடவடிக்கைகள் ஆத்மீக உணர்ச்சிக்கு பொருத்தமில்லாதபடி இருப்பதால் தான் இப்படி அவர்கள் ஒதுங்கி நிற்க வேண்டி வருகிறது.

மேலும், அம்மகான்கள் நம்முடன் கலந்து கொண்டாலும் விசேட பிரயோசனம் உண்டா? அவர்கள் மகான்கள் என்பது நமக்குத் தெரியும் என்பது நிச்சயமா? அவர்கள் தாம் பெரியவர்கள் என்று கூறிக்கொள்வார்களா? மாட்டவே மாட்டார்கள். மகான்களைக் கண்டால் அவர்கள் மகான்கள்தான் என்று உணர்வது எளிதல்ல. சிலசமயங்களில் விபரீதம் ஏற்பட்டாலும் ஏற்படலாம்.

அவர்களுடைய தேஸசை தாங்கமுடியாமல் நாம் தடுமாறலாம். தவறான அபிப்பிராயம் கொள்ளலாம். மகான்களுடைய சமீபத்தில் பழகி அவர்களுடைய மகத்துவத்தை அறிய நமக்குத் திறம் வேண்டும். எந்த விஷயத்திலும் சரி, ஒருவரிடத்தில் திறத்தை அறிய வேண்டுமானால், அந்த விஷயத்தைப் பற்றின வரையில் நம்மிடத்திலும் கொஞ்சம் திறம் வேண்டும். ஒரு சங்கீத வித்துவானுடைய திறத்தை நன்கறிய நம்மிடத்தில் கொஞ்சமாவது சங்கீத உணர்ச்சி இருக்க வேண்டுமல்லவா? ஒரு பெரிய சமஸ்கிருத பண்டிதருடைய பெருமையை அறிய நமக்குக் கொஞ்சமாவது சமஸ்கிருத பாஷாஞானம் வேண்டாமா? அதுபோலவே ஆத்மீக மார்க்கத்தில் உயர்ந்த பதவியை அடைந்திருக்கும் ஒரு மகாத்மாவின் பெருமையை உணர வேண்டுமானால் அந்த ஆத்மீக உணர்ச்சி கொஞ்சமாவது நம்மிடத்தில் இருக்க வேண்டியது அவசியம்.

தசரத மகாராஜாவின் பிள்ளை ஸ்ரீ ராமன் ஒரு பெரிய ஆத்மா என்பது தகப்பனுக்குத் தெரியவில்லை. காட்டிலிருந்து வந்த விசுவாமித்திர முனிவருக்குத் தெரிந்தது. அம்முனிவர் தசரதனுக்குக் கூறினது கவனிக்கத்தக்கது. “தசரதா! ஸ்ரீராமன் உண்மையான பராக்கிரமமுள்ள பெரிய ஆத்மா என்பது எனக்குத் தெரியும். எனக்கு மட்டுமல்ல, என்னைப் போல தபசிகளாய் விளங்கும் வசிட்டர் முதலியோர்களுக்கும் தெரியும் என்று விசுவாமித்திரர் சொன்னார். ஆகையால் ஒரு மகாத்மாவைப் பார்த்த மாத்திரத்தில் அவருடைய பெருமையை அறிய முடியுமென்பது சொல்ல முடியாது. யார் கண்டார்கள்?

இன்னும் அனேக மகாத்மாக்கள் உலாவிக் கொண்டிருக்கலாம். சனங்கள் அவர்களை ஏதோ சாதாரணமானவர்கள் என்று எண்ணிக் கொண்டிருக்கலாம். நமக்குத் தெரியாததால் அத்தகைய மகான்கள் நம்மிடையில் நடமாடுவது இல்லையென்று சொல்ல இயலாது.

# 9. கதிர்காம முருகன்

இலங்கையிலுள்ள ஒரு மலை முகட்டில், நடுப்பகல் வேளையில் நின்று இந்து மாக்கடலுள் நோக்கினால், கடலின் அடிப்பகுதியில் பொற்கலசமொன்று காணப்படும் என்றும், அஃது இராமாயண காலத்தில் இலங்கையின் மன்னனாயிருந்த இராவணேஸ்வரனின் அரண்மனைக் கலசம் என்றும் பலர் கூறக் கேள்வி. இக்கூற்று உண்மையாயினும் பொய்யாயினும் இந்து மாக்கடலுள் ஒரு பரந்த நிலப்பகுதி அமிழ்ந்தியுள்ளது என்பதை இது குறிக்கும் என்று கொள்வதனால் இழுக்கொன்றுமில்லை.

மேலே குறிப்பிட்ட மலை முகடு கதிரமலை முகடாகும். சூரபத்மன் ஆயிரத்தெட்டு அண்டங்களையும் அரசு செலுத்திய தலைநகரம் மகேந்திரபுரியாகும். இம் மகேந்திரபுரி இருந்த இடம் இந்து சமுத்திரமாகும்.

வீரவாகுதேவர் சூரபத்மாவிடம் தூது சென்றபோது கந்தமாதன பர்வதத்திலிருந்து புறப்பட்டு ஆகாயமார்க்கமாகத் தென்திசை நோக்கிச் சென்றுள்ளார். அவர் முதலிற் சந்தித்த இடம் இலங்கையாகும். இலங்கையிலிருந்த அவுணர்கள் வீரவாகுதேவரை எதிர்க்க அவர் தன்னை எதிர்த்த அவுணர்களை எல்லாம் சங்காரம் செய்து இலங்கையிலிருந்து ஆயிரம் யோசனை தூரத்திலுள்ள மகேந்திரபுரியை நோக்கிச் சென்றார் என்று கந்தபுராணம் கூறுகின்றது.

கதிர்காமத்திற்குப் பக்கத்திலே உள்ள கிரிவிகாரை கட்டப்படுவதற்கு முன்பு அந்த இடம் சூரன் கோட்டை என்று அழைக்கப்பட்டது. இலங்கை 'சூரனுடைய ஆட்சிக்குட் பட்டிருந்தது என்பதற்கு இதுவும் ஒரு அத்தாட்சியாகும்.

அழியா வரந்தரும் ஆறுமுகப் பெருமானின் அற்புதத் திருவிளையாடல்கள் இன்றும் நடைபெறும் திவ்விய க்ஷேத்திரம் கதிர்காமம். அது மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூன்றின் மகிமையால் இணையற்ற சிறப்புடைத்து. நம்மவர்கள் சிதம்பரத்தையும் காசியையும் கயிலையையும் நினைப்பது போன்று தென்னிந்திய பக்தர்கள் கதிர்காம முருகனை அடிக்கடி நினைப்பதுண்டு. அவர்கள் இந்தியா முழுவதும் யாத்திரை செய்தாலும் கதிர்காம யாத்திரையின் பின்தான் அவர்களது யாத்திரை பூர்த்தியாகின்றது. தமிழகத்தவரையும்

இலங்கைவாழ்மக்களையும் அத்தியாத்மத் தொடர்பில் பிணைத்து நிற்பது கதிர்காமம் ஆகும்.

இந்து, பௌத்தம், இஸ்லாம் ஆகிய மூவரையும் ஒன்றுபடுத்தும் இடம் கதிர்காமம். முருகப் பெருமான் அருவமாய் நின்று அருள் விளையாடல் செய்யும் இடம் கதிர்காமம். இந்தியாவில் காந்தியின் ஹரிஜனப் போராட்டத்திற்குப் பின்பே இந்துக் கோயில்கள் ஹரிஜனங்களுக்குத் திறந்து விடப்பெற்று சமரச வழிபாடு ஏற்பட்டது. கதிர்காமத்திலோ சரித்திர காலத்திற்கு முன்பிருந்தே சமரச வழிபாடு நடைபெற்று வந்துள்ளது. அந்தக் காலத்திலே அரசனுஞ் சாமிதான்; ஆண்டியுஞ் சாமிதான். இன்று முருகப் பெருமானுக்கு வேட்டுவப் பெண்களுடைய பூசைதான் முதலில் இடம்பெறுகிறது.

தேவநண்பிய தீசன் காலத்திலே, அதாவது கி.மு.307ஆம் ஆண்டில் தான் இந்த நாட்டிற்கு முதன் முதலாக புத்த மதம் காலடி எடுத்து வைத்தது. இந்த நாட்டிற்குப் புத்தமதம் வருவதற்கு முன்பே இந்நாட்டில் உள்ளவர்கள் எல்லாரும் இந்துக்களாகவே இருந்தார்கள். இலங்கையின் முதலாவது சிங்கள அரசனாகிய விஜயன் கதிர்காமத்தைப் புனருத்தாரணம் செய்தான் என்று மகாவம்சம் கூறுகின்றது.

மிகப் புராதன காலத்தில் அகத்தியரிலங்கை, புலத்தியரிலங்கை, குபேரனிலங்கை, இராவணனிலங்கை, விபீஷணனிலங்கை என்ற பெயர்களால் அழைக்கப்பட்டும் ஆட்சி செய்யப்பட்டும் வந்துள்ளது.

கதிர்காமம் என்பது கடவுள் தன்மையுடைய ஒளியும் அன்பும் நிறைந்த இடம் என்று பொருள்படும். கதிர்காமம் சமயவரலாற்றுச் சிறப்புமிக்கது. சீதையைத் தேடி வந்த அநுமன் கதிர்காமப் பெருமானை வணங்கிச் சென்றான் என்பர். தேவநண்பிய தீசனுடைய ஆட்சிக் காலத்தில் அசோகமன்னரின் மகள் சங்கமித்திரை அநுராதபுரத்திற்குக் கொண்டு வந்த அரசமரத்தின் கிளையொன்றைக் கதிர்காமப் பிரபு வாங்கி வந்து இங்குள்ள கோயிலில் நாட்டியதாகக் கூறப்பட்டுள்ளது. கி.மு.300இல் மகாநாகன் என்னும் அரசர் கதிர்காமக் கோயிலுக்குப் பக்கத்தில் கிரிவிகாரை என்ற பௌத்த மடத்தைக் கட்டினார். இப்பொழுதுள்ள கோயில் 16ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலாவது 17ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலாவது முதலாம் அல்லது இரண்டாம் இராசசிங்கனால் கட்டப்பட்டிருக்க வேண்டும் என்று

வரலாற்றாசிரியர்கள் கருதுகின்றனர்.

ஆறு குழந்தைகளாகச் சரவணப் பொய்கையிலே தவழ்ந்த முருகனை உமாதேவியார் எடுத்தபோது ஆறு திருமுகங்களும் ஒரு திருமேனியுங் கொண்டு ஆறுமுகன் ஆனான். அதனால் கந்தன் என்னும் பெயரைப் பெற்றான். கந்தன் என்ற சொல்லுக்கு ஒன்றானவன் - கட்டுப்பட்டவன் என்பது பொருள். பற்றுக்கோடானவன் என்ற பொருளும் உண்டு. எப்பொழுதும் இளமைத் திருக்கோலமே உடையவனாதலின் முருகன், குமரன், சேய், பாலசுப்பிரமணியன் என்ற பெயர்களால் அழைக்கப்படுகின்றான். அன்பர்களுடைய இதயக் குகையிலே விட்டு நீங்காமலிருப்பதனால் குகன் என்ற திருநாமத்தையும் உடையவன்.

சரவணப் பொய்கையில் தவழ்ந்தானாகையால் சரவணபவன் என்றும் கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப்பட்டானாகையால் கார்த்திகேயன் என்றும் விசாக நட்சத்திரத்திற்குரியவனாகையால் விசாகன் என்றும் பெயர்களைப் பெற்றான்.

கிரௌஞ்ச மலையையும் சூரனது உடலையும் பிளந்ததாகிய இவரது வேலாயுதத்தின் பெருமை கற்பனைக்கு எட்டாதது. இது பற்றியே கதிர்வேல், சக்திவேல், வெற்றிவேல், வடிவேல், தங்கவேல், சித்திரவேல், குமாரவேல் என்ற பலவகைச் சிறப்புகளால் அழைப்பர்.

போரிற் புறங்கொடுத்த சூரனை சேவலும் மயிலுமாக்கி சேவலைத் தனக்குக் கொடியாகவும் மயிலை வாகனமாகவும் கொண்டாராதலினால் சேவற்கொடியோன் என்றும் மயில்வாகனன் என்றும் அழைக்கப்படுகின்றார். கடப்பமாலை அணிந்தவரானபடியினால் கடம்பன் என்ற பெயரைப் பெறுகின்றார்.

சிங்கள மக்கள் முருகனை 'கதறகமத் தெவியோ' என்றும் கதிர்காமத்தை 'கத்தறகம' என்றும் அழைப்பர். 'கத்துறு' என்பது, தோடங்காய்ப் பருமனுள்ள காய்களையுடைய ஓர் நச்சு மரத்தின் பெயராகும். 'கத்துறு' என்னும் பெயரையுடைய நச்சுமரங்கள் நிறைந்த இடமாதலின் 'கத்தறகம' எனப் பெயர் வந்ததென்பர்.

கதிர்காமத்தில் கப்புறாளைமார்களே பூசகர்களாகி வேண்டிய கோவிற்பணிகளை எல்லாம் செய்வர். அண்டமுகட்டை அளாவிச் செவிபட ஒலிக்கும் "வேல், வேல்" என்னும் ஆரவாரத்தொனி ஒரு புறமும், கருத்தை அறியாது கேட்டவாய் கேட்டு அரோஹரா என ஒலிக்குந்தொனி மறுபுறமுமாக ஓர் நவீன முறைபற்றியே கதிர்காம உற்சவம் நடைபெறுகிறது. அகரம் உகரம் இரண்டும் சேர்ந்தே

அரோஹரமானது. இந்த அரோகரம், ஓம் என்ற பிரணவ அட்சரத்தையே குறிக்கும். கதிர்காமத்தில் அரோகரா என்னும் வார்த்தைக்கு இருக்கும் வலிமையை வேறு எந்த முருக தலத்திலும் நாம் காணமுடியாது. கதிர்காமத்தில் பக்தர்கள் எல்லோருமே உயர்வு தாழ்வு இன்றி செயல்கள் எல்லாமே அரோகரா என்றுதான் அழைப்பார்கள்.

ஒருவர் அரோகரா என்று கூறினால் அவ்வொலிகேட்ட அத்தனை பேரும் அரோகரா என்று வாய்விட்டு ஒலிப்பர். பாதைக்கு அரோகரா என்றால் அத்தனை பெருங்கூட்டத்தின் மத்தியிலும் வழி கிடைத்துவிடும். விபூதி நிரம்பிய சட்டிகளில் விளைகற்பூரத்தை எரித்து அச்சட்டிகளைப் பக்தர்கள் தலையிலே சுமந்து கொண்டு கூட்டங் கூட்டமாகப் பக்தி பரவசத்தோடு வருங்காட்சியைப் பார்த்த எவருக்கும் மயிர்க்கூச்செறியும்.

கதிர்காமத் தலத்திலிருந்து மூன்று மைல் தூரத்தில் விபூதிமலை என்ற பெயருடன் ஒரு மலை உண்டு. அங்கு பெறப்படும் விபூதியே கதிர்காம விபூதியாகும். நிலத்திலிருந்து பெறப்படும் விபூதி கதிர்காமத்தைத் தவிர உலகின் வேறு எந்த இடத்திலும் நாம் காணமுடியாது.

"காசியி லிறக்க முத்தி கயிலையிற் பிறக்க முத்தி
கேசமர் தில்லை தன்னில் திருநடங் காண முத்தி"

என்றெல்லாம் கூறிய பெரியோர்கள் கங்கா தீர்த்தத்திற்கும் மாணிக்க கங்கா தீர்த்தத்திற்கும் முதன்மை கொடுத்துள்ளார்கள்.

அத்தனிறைவன் அமலேசன் அமராலயத்தின் அருகுறுநீர்
சுத்த மசுத்த மாயினு நற்சுரர்கள் பரவுங் கங்கையென்றே
புத்தி புரிந்தங்கத் தடத்தில் புனலுட்படிவோர் யாரெனினும்
சுத்த சனனத் துறுபாவத் தணைத்துசிறந்து விளங்குவரே.

புதுவருடப் பிறப்பை ஒட்டிய மூன்று தினங்களும் ஆடி மாதத்தில் பதினைந்து நாட்களும் திருக்கார்த்திகையை மையமாகக் கொண்ட மூன்று நாட்களும் விசேட விழாக்கள் நடைபெறுங் காலங்களாகும்.

இக்காலங்களில் நடைபெறும் விழாவின்போது இலட்சக்கணக்கான முருகனடியார்கள் வந்து கூடுவர். இந்த

அடியார்களுக்கு அன்னதானம் செய்யப் பல மடங்கள் இருந்தன. அவற்றுள் மிகச் சிறந்ததாகக் கருதப்பட்டது இராமகிருஷ்ண மடத்தினரால் நடத்தப்பட்ட அன்னசத்திரமாகும். தானங்களுள் சிறந்தது அன்னதானமாகும். அன்னதானத்துக்கு விசேடம் என்னவென்றால் இதிலேதான் ஒருத்தரைப் பூரணமாகத் திருப்திப்படுத்த முடியும். பணம், நகை, பூமி, வீடு இந்த மாதிரியானவற்றை எவ்வளவு கொடுத்தாலும் வாங்கிக் கொள்கிறவன் அதற்குமேல் தந்தாலும் வேண்டாம் என்று சொல்லமாட்டான். அன்னம் போடுகிறபோதுதான் ஒருத்தன் என்னதான் முட்டச் சாப்பிட்டாலும் ஓர் அளவுக்குமேல் சாப்பிட முடியாது போதும் என்று சொல்கிறான். ஓர் அளவுக்குமேல் போய்விட்டால் ஐயையோ! இனிமேல் போடாதீர்கள் என்று மன்றாடவும் செய்கிறான்.

இத்தகைய அன்னதானம் வெகுகாலமாகவே நடைபெற்று வந்தது. கடந்த ஆறு ஏழு ஆண்டுகளாக அவை நடைபெறுவதில்லை. அரசாங்கம் இராமகிருஷ்ண மடத்தை எடுத்துக் கொண்டமையே இதற்கு முக்கிய காரணமாகும். இதனால் பக்தர்கள் வருகையும் குறைந்து கொண்டே வந்தது.

பக்தர்களுக்கு அநுசரணையாக இல்லாது வியாபார நோக்கங்கொண்ட கூட்டம் ஒன்று வளர்ந்து வந்தது. தற்போது அதனை யாவரும் உணர்ந்துள்ளனர். அரசாங்கமும் ஸ்ரீ இராமகிருஷ்ண மடத்தின் சேவையைத் தற்போதுதான் உணர்ந்துள்ளது போலும். மறுபடியும் ஸ்ரீ இராமகிருஷ்ண மடத்தின் அன்னதான சேவை ஆரம்பிக்க இருப்பதையும் அறிந்து பக்தர்கள் எல்லோருமே குதூகலம் கொள்கின்றனர்.

முருகப் பெருமான் தன் அடியார்களைக் காக்கத் திருவுளம் கொண்டுள்ளார். ஸ்ரீ இராமகிருஷ்ண மடத்தின் சேவையில் அடியார்கள் எல்லோரும் பங்கு கொண்டு பயன் பெறுவார்களாக!

# 10. ஆயிரம் அறிவதைப் பார்க்கிலும் ஒன்றைச் செய்வதே மேல்

அறிவது என்பது கிளிப்பிள்ளைப் பாடம். செய்வது என்பது அனுபவம்! கரும்பைப்பற்றிக் கட்டுரை ஆயிரம் பக்கத்திலே ஒருவன் எழுதலாம், பரிசும் பெறலாம். ஒருநாளாவது அவன் கரும்பைச் சுவைக்கானாயின் அந்த அறிவினால் அவனுக்கு யாது பயன்? அறிவிலானாயினும் கரும்பைச் சுவைத்தவன் அனுபவத்தைப் பெறுகின்றான்.

பல நூல்களைக் கற்றவர்கள் கடவுளைப் பற்றி நாட்கணக்காகப் பேசலாம். பேசி முடிவு காண்பார்களோ என்றால் அதுதான் முடியாது. இறைவன், "வேதங்கள் ஐயா என ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியன்." இறைவன் அறியப்படும் பொருளல்ல; அனுபவிக்கப்படும்பொருள்.

"ஒரு நாளைக்கு ஒரு நொடிப்பொழுதேனும்
உன்னைப் படைத்தவனை எண்ணிச் சுகித்ததுண்டோ மனமே"

என்றொருவர் மனதைப் பார்த்துக் கேட்கின்றார்.

பயிற்சி செய்கின்ற வரையில் எந்த விஷயமுமே கடினமானது போலத்தான் தோன்றும். பயிற்சியின் மூலம் ஒரு விஷயத்தைச் சாதகம் செய்து விட்டால் அது போன்ற சுலபமான காரியம் பிறகுவேறு எதுவும் இருக்காது.

மனத்தோடு படாமல் வாழ்நாள் முழுவதும் பிரார்த்தனை செய்யலாம். ஆனால் யாது பயன்? ஐந்து நிமிட நேரம் மனம் ஒடுங்கித் தியானம் செய்தால் அதுவே உயர்ந்தது. மனதைப் புலன்வழிச் செல்ல விடாது எண்ணெய் ஒழுக்குப்போல விடாது நினைப்பதே தியானம் எனப்படும். பிரார்த்தனையை உள்ளுணர்ந்து செய்யும்போது உள்ளத்தை உருக்கும். அந்த நிலை ஆழ்ந்த தியானத்திற்கு அழைத்துச் சென்றுவிடும். பிரார்த்தனையில் ஈடுபட்டிருக்கும் போதே மனது அலைந்து கொண்டிருப்பதால் அது இலகுவாகத் தோன்றலாம். ஆனால் மனதை அலையவிட்டுத் தியானம் செய்ய முடியாது. இதனால் பிரார்த்தனை செய்வது இலகுவானது போலவும் தியானம் செய்வது கஷ்டம் போலவுந்

தோன்றலாம். சில நாட்களுக்காயினும் கஷ்டப்பட்டு மனதைத் தியானத்தில் ஈடுபடுத்துவோமேயானால் அதைப்போன்ற இன்பம் வேறு எதிலும் காணமுடியாது.

“தியானமே எனது மனது நிலை” என்ற அளவுக்குப் பயிற்சியினால் முன்னேறிவிடலாம்.

இரண்டு சில்லுள்ள சைக்கிள் தானாக நிற்காது. எங்காவது சுவரிலோ மரத்திலோ சாத்தி நிறுத்த வேண்டும். அப்படி நிலையற்ற சைக்கிளின் மீது ஒருவன் ஏறி அமர்ந்து ‘பெடலை’ மிதிக்கும்போது அந்தச் சைக்கிள் ஆளையும் சுமந்து கொண்டு விழாமலும் செல்லுகின்றது.

சைக்கிள் விடத் தெரியாதவன் இந்த அதிசயத்தைப் பார்த்து வாய்பிளந்து நிற்கிறான். இதுவே எப்படிச் சாத்தியமாயிற்று என்று அதிசயிக்கிறான். அவனே சைக்கிள் கற்றுக் கொள்ளப் பயிற்சி பெறும்போது சைக்கிளை நிலையாக ஓட்டாமல் விழுகிறான்; எழுகிறான். இதேது நமக்கு வராது போலிருக்கிறதே என்று அவ்வப்போது சோர்வு அடைகிறான்.

ஆனால் அவனே சைக்கிள் ஓடக் கற்றுக் கொண்ட பிறகு அதைப்போல் சுலபமான காரியம் எதுவும் இல்லை என்று எண்ணுகிறான். சைக்கிள் விழாமல் அவனைத் தாங்கிச் செல்வது அவனுக்கு இப்போது அதிசயமாகத் தோன்றுவதில்லை. சாதாரண நிகழ்ச்சியாகவே தென்படுகிறது. தான் மாத்திரமா சைக்கிளில் செல்லுகிறான். முன்னால் குழந்தையையும் பின்னால் மனைவியையும் அல்லவா ஏற்றிக் கொண்டு செல்லுகிறான்.

மனதை அடக்கும் பயிற்சியும் இத்தகையதே. முதலில் மனது எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணும். விடாப்பிடியாக நாமும் தியானத்திலீடுபட அதுவும் வழிக்கு வருகின்றது. தொடக்கத்தில் துள்ளிக்குதித்த மனது இப்போ நாம் சொன்னபடி நடக்கிறது. முன்பு மனம் சொன்னபடி நாம் கேட்டோம். பயிற்சியினால் இப்போது நாம் சொன்னபடி மனது கேட்டு நடக்கிறது.

பயிற்சி எதையும் சுலபமாக்கி விடுகிறது. இதனைத் தான்

சாதனை என்றும் கூறுவர். ஏன்? நீந்துவதையே எடுத்துக் கொள்ளுங்கள். நவரத்தினசாமி என்பவர் பாக்கு நீரிணையை நீந்திக் கடந்தார். எம்மால் பத்து அடி தூரந்தானும் நீந்திக் கடக்க முடியாத நிலையில் நவரத்தினசாமி என்பவர் இருபத்தெட்டு மைல் தூரத்தை நீந்திக் கடந்தார். அவரது மருமகன் அக்கரையிலிருந்து இக்கரைக்கு நீந்திவந்தார். இவையெல்லாம் எப்படி சாதிக்க முடிந்தது? எல்லாம் பயிற்சியினால்தான்.

நீந்தத் தெரியாதவன் நீரில் இறங்கினால் மூழ்கிப் போகிறான். ஒருவன் தண்ணீரில் மூழ்காமல் மிதந்து நீந்துவதைப் பார்க்கும்போது இவனுக்கு அது அதிசயமாகத் தோன்றுகிறது. கைகளையும் கால்களையும் உதைப்பதன் மூலமாகவே ஒருவன் நீந்த முடியுமா என்று வியக்கிறான். ஆனால் இவனே நீந்தக் கற்றுக் கொள்ளும்போது நீரைக் குடித்து மூழ்கி மூச்சுத் திணறும்போது இது நமக்கு முடியாதோ என்று சோர்வடைகிறான். ஆனால் நீந்தும் பயிற்சி வந்து விட்ட பிறகு தேங்கிநிற்கும் குளத்தில் மட்டுமல்ல, பாய்ந்து வரும் ஆற்று வெள்ளத்திலும் அனாயாசமாக எதிர்நீச்சல் அடிக்கிறான்.

பயிற்சியால் சாதிக்க முடியாதது எதுவுமில்லை. ஒன்றைப் பயிலும்போது சிரமங்கள் இருக்கலாம். சோர்வு ஏற்படலாம். விடாமுயற்சியும் தொடர்ந்து பயிலும் பயிற்சியும் எதையும் சுலபமாக்கிவிடும். பிரம முகூர்த்தத்திலே எழுந்து தியானம் செய்தல் நல்லது. பழக்கத்தினால் இதனைப் பெரியோர்கள் இலகுவாக நடைமுறைப்படுத்துகிறார்கள். ஆனால் ஏழு மணிக்கு நித்திரை விட்டு எழுந்து பழகியவன் நான்கு மணிக்கு எழும்புவனைப் பார்த்து மலைக்கிறான். பயிற்சி எதையும் சுலபமாக்கிவிடுகின்றது. மன அமைதி பெறுவதற்கு அடிப்படையான சில விஷயங்கள் பின்வருமாறு:

1. எந்தக் காரியத்தைச் செய்தாலும் குழப்பம் இல்லாமல் நிதானமாகச் செய்யக் கற்றுக் கொள்வது அவசியம். எங்குபோனாலும் உங்களோடு பிரச்சினைகளைத் தூக்கிச் செல்லாதீர்கள். பிரச்சனைகளை எந்த நேரத்தில் பரிசீலித்து தீர்வு காண வேண்டுமோ அப்போதுதான் பரிசீலிக்க வேண்டுமே தவிர தேவையில்லாத நேரங்களில் அதைப்பற்றியே எண்ணிக்

கொண்டிருப்பதால் எந்தப் பிரச்சனைக்கும் தீர்வு கிடைக்கப் போவதில்லை. மாறாக அனாவசியமான குழப்பங்களுக்கு ஆளாகவேண்டி நேரிட்டு மன நிம்மதியும் கெட்டுப்போகும்.

2. எந்தக் காரியத்தைச் செய்தாலும் நம்பிக்கையோடு செய்யப் பழகிக் கொள்ள வேண்டும். ஏனெனில் சிறிய மனிதனும் தனது அசையாத நம்பிக்கையின் மூலம் பெரிய காரியங்களைச் சாதித்து விடமுடியும். நம்பிக்கையோடு காரியங்கள் செய்யும்போதுதான் மனச் சஞ்சலம் நம்மை அணுகாது. ஆரம்பத்திலேயே ஆகுமா ஆகாதா என்று கேள்வி கேட்கத் தொடங்கிவிட்டால் மன உறுதி தளர்ந்து போகும்.

3. பிரச்சனைகளைக் கண்டு அச்சமடையக் கூடாது. தீராத பிரச்சினை என்று நாம் எண்ணக் கூடியது கூட காலப்போக்கில் தீர்ந்து விடக்கூடும். சில விஷயங்களை முயற்சி செய்து காலத்தின் தீர்ப்புக்கு விட்டுவிடும்போது காலமே அந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான வழிவகைகளையும் காட்டிவிடுகிறது.

4. மன நிம்மதி பெறுவதற்கு தியானம் ஒரு சிறந்த வழி. நம்முடைய பெரியவர்கள் அனுபவவாயிலாக இதைக் கண்டறிந்து சொல்லி இருக்கிறார்கள். தியானப் பயிற்சி நன்றாக வளர்ந்து விட்டால் பின்னர் ஒரு நாளின் எந்தப் பகுதியிலும் சிறிது நேரம் தியான நிலையிலிருந்து மனதை அமைதிப்படுத்திக் கொண்டு விடமுடியும். மனப்போராட்டம் ஏற்படும்போது, அல்லது மனம் சஞ்சலம் அடையும்போது ஓரிரு நிமிடம் தியான நிலையில் இருந்தால்கூட போதும், மனச்சாந்தி கிடைக்கும்.

5. ஆலயங்களுக்குச் செல்லுவது மன அமைதி பெற ஒரு சிறந்த வழியாகும். ஆலயங்களுக்குச் செல்லுவதில் ஒரு பகுதியாக தல யாத்திரையினையும் மேற்கொள்ளுவது நல்லது. கூட்டத்தைப் பார்ப்பது பாபத்தை கழுவிக் கொள்ள ஒரு வழியாகும் என்று பெரியவர்கள் சொல்லிக் கொள்ளுகிறார்கள்.

6. குற்ற உணர்வுகளை மனத்திற்குள்ளேயே அடக்கி வைத்திருப்பது பெரும் தீங்காக முடியும். பலவிதமான மனநோய்களுக்கு அதுவே காரணமாகிவிடுகிறது. எனவே

குற்றங்களையும் செய்துவிட்ட தவறுகளையும் யாரிடமாவது மனம்விட்டுச் சொல்வது நல்லது.

7. தூக்கம் அவசியம். உடல் களைப்பையும் மனச்சோர்வையும் தூக்கம் போக்குகிறது. அலட்சியப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை. தேவையான அளவுக்குத் தூங்க வேண்டும். தூங்கும்போது ஆழ்ந்து தூங்குவதும் அவசியம்.

8. எக்காரணம் கொண்டும் வாழ்க்கையில் விரக்தி கொள்ளக்கூடாது. விரக்தி வேதனை வித்துக்களை மனதில் தூவிவிடுகிறது. விரக்தி என்பது ஒரு எதிர்மறை உணர்ச்சி. முன்னேற்றத்திற்குத் தடைக்கல். விரக்தி கொண்டவனால் எந்தக் காரியத்தினையும் சரிவரச் செய்ய முடியாது. காரியங்கள் செம்மையாக நடைபெறாத போது வியாகுலம் ஏற்பட்டு மன நிம்மதி கெட்டுப் போகிறது.

9. பொழுதுபோக்கு மன நிம்மதிக்கு மிகமிக அவசியம். ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு பொழுது போக்கினைத் தங்களுக்கு உரியதாக ஆக்கிக் கொள்வது அவசியம். ஓய்வு நேரங்களில் உருப்படியான பொழுதுபோக்குகளில் ஈடுபடும்போது மனம் தானாக நிம்மதி பெறுகிறது.

# 11. இந்து சமயத்தின் உலகளாவிய இயல்பு

ஒரு காலத்தில் இந்து சமயமே உலகம் முழுவதும் பரவி இருந்தது. இந்து சமயத்தைத் தவிர மற்றைய எல்லாச் சமயங்களுக்கும் காலவரையறை உண்டு. அதாவது இன்ன காலத்திலே இன்னார் தோன்றி உபதேசம் செய்தார் என்று சொல்லப்படுகின்றது. இவை எல்லாம் சரித்திர காலத்திற்கு உட்பட்டவை. ஆனால் சரித்திர காலத்திற்கு முன்பிருந்தே உலகம் முழுவதற்கும் ஒரே சமயம் மாத்திரந்தான் இருந்தது. அதுதான் இந்து சமயம். அதன் ஆரம்பமே உலகளாவிய இயல்புதான்.

சிவன் கோயில் என்று வழங்கப்படுகிற ஒரு திட்டு அமெரிக்கா கண்டத்தைச் சேர்ந்த கனடாவில் இருப்பதாக அமெரிக்கா ஆராய்ச்சியாளர்களே கூறுகின்றார்கள். இது நூறாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டதென ஆராய்ச்சியாளரால் கணக்கிடப்படுகிறது. இதில் பல புதுமையான விலங்கினங்களும், புல் பூண்டுகளும் காணப்பட்டன எனவும் சொல்கிறார்கள். அமெரிக்கப் பல்பொருட் காட்சிச் சாலையார் இத்திட்டிற் புகுந்து ஆராய முயன்று வருகின்றனர். சிவன் கோயில் என்னும் பெயர் அங்குள்ளமையால் தமிழர் நாகரிகம் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்பே அமெரிக்கா வரையிற் பரவியிருந்ததென்பது புலப்படுகின்றது.

இந்து மதத்தின் வரலாறு இருக்கு வேதத்தில் காணப்பெறும் மந்திரங்கள் என்னும் தோத்திரங்கள் இயற்றப்பெற்ற காலத்திலிருந்து தொடங்குகிறது. வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட இக்காலம் இன்னதெனத் தெளிவாக அறியப்படவில்லை. கி.மு.5000 ஆண்டுகளுக்கு முற்பட்டதாகஇருக்கவேண்டும் என உத்தேசமாகக் கூறுகிறார்கள்.

முதன் முதல் உலகத்திலே தோன்றிய நூல் இருக்கு வேதம் என்பதை ஆராய்ச்சியாளர் ஒரே மனதாக ஒப்புக்கொள்கின்றனர். ஆகவே இந்து மதத்தின் உலகளாவிய இயல்பும் உலகத்தில் முதன்மையானது. காலத்தாலும் முந்தியது. வேதாந்தத் தெளிவே சைவசித்தாந்தம் என்பது நம் முன்னோர் ஒப்புக்கொண்ட முடிவு. இதனைச் சேக்கிழார் “வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத்துறை விளங்க” என்பதனால் விளக்குவார்.

வேதாந்த மதம் என்பது இந்துமதத்தின் மறுபெயராகும். அது மிகப் பழமையான மதமாவதுமன்றி, உலகப் பொதுவான பரந்த முழுமதமாகும். இதன் இயல்பே சமரச சமயம். காலத்திற்கும் இடத்திற்கும் மக்களது இயல்பிற்கும் ஏற்றவாறு புதுப்புது படிவங்களைக் கொள்ளிலும், அதன் உயர்நிலையான அடிப்படைக் கொள்கைகள் மாறாதிருப்பன. அவை:-

(1) மனிதத்தன்மையில் தெய்வத்தன்மை உள்ளடங்கி இருப்பது. அதை முழுதும் வெளிப்படுத்துவதே வாழ்க்கையின் மெய்ப்பயன். (2) அவ்வாறு செய்ய யோகங்களுள் ஒன்றையோ பலவற்றையோ பயன்படுத்தலாம். ஒன்றே மெய்ப்பொருள். எனினும் அறிஞர் அதனைப் பலவாறாகப் பேசுவர். இங்ஙனமே ஒன்றே மெய்ந்நெறி. அது யான் எனது என்னும் பற்றை அறுத்தலே. இதனையும் பலவாறாக அறிஞர் பேசுவர். இங்ஙனமே மெய்ப்பயனும் ஒன்றே. உலவா இன்பத்து அழுந்துதலே அது. எனினும் இதையும் பலவாறாக அறிஞர் பேசுவர்.

அகங்காரத்தை உணர மனம் கடந்த அளவிற்குப் பெருக்குதலாலோ சுருக்குதலாலோ அதனைத்தாண்டி அப்பாற் செல்லலாகும். "என்னை உடலாக நினைக்கும்போது உனக்குத்தான்; என்னை ஜீவனாக நினைக்கும்போது உனது அம்சம்; என்னை ஆன்மாவாக நினைக்கும்போது நீயும் நானும் ஒன்றே", என்று அனுமார் இராமபிரானை நோக்கிக் கூறியதில் வேதாந்தத்திற்குரிய மூவகைப்பட்ட உயர்ந்த அனுபூதிகளும் வெளியிடப்பட்டுள்ளன.

உள்ளது ஒன்றே என்னும் கொள்கையைப் போதித்தலின் எவ்வகைப் பேதமும் அறியாமையின் விளைவே என்பது அதன் முடிவாகும். வேற்றுமைக்குள்ளே ஒற்றுமையைக் காணலே, பலவற்றுள் ஒரு பொருளைக் காணலே, ஞானக்காட்சியாகும்; இதுவே ஒற்றுமைக்கும் ஒத்துழைப்புக்கும் மூலம். உலகமக்களின் தனிவாழ்க்கையையும் சமூக வாழக்கையையும் முத்தி அடைவதற்கு ஏற்ற நெறியில் அமைக்கவல்லது வேதாந்தம். ஆதலின் உலகமெங்கும் சாந்தியையும், அன்பையும், இன்பத்தையும், சமத்துவத்தையும், சமரசத்தையும் பரப்புவதில் வேதாந்தத்திற்கு இணையான தரிசனம் வேறில்லை எனலாம். இந்த இடத்தில் ஒளவையாரின் பாடல் ஒன்றை நினைவுகூரலாம்.

**ஒன்றாகக் காண்பதே காட்சி புலன் ஐந்தும்**
**வென்றான்தன் வீரமே வீரமாம் – என்றும் தான்**
**சாவாமற் கற்பதே கல்வி பிறர் தம்மை**
**ஏவாமல் உண்பதே ஊண்.**

பன்மையாகக் காட்சி அளிக்கும் உலக நிகழ்ச்சிகளில் ஒருமை நிலவுவதைக் காணும் அறிவுத் திட்பமும் நுட்பமும் காட்சித் தெளிவும் பெற்றுப் புறப்பொருள்களின் பொறி உணர்ச்சிக் கவர்ச்சிக்குத் தன்னை அடிமைப்படுத்திக்கொள்ளாமல் தன்னிலையை உறுதிப்படுத்திக் கொண்டு ஆளுமையை வளர்த்துச், செயலில் வீரம் நிறைந்திருக்க, பிறர் இவனையும் இவன் பிறரையும் ஏவாத பெருமிதமான சுயேச்சை நிலையில் முயன்று உழைத்து அதன் பயனால்வரும் உணவு, உடை, இருப்பிடம் முதலிய இன்றியமையாத தேவைகளைத் தன் முயற்சியினால் நிறைவு செய்து கொண்டு 'தான்' என்ற தன்மை சாவாதவாறு தானே கற்றுக் கொள்வதே கல்வி. காட்சி, வீரம் கூறியதாகக் கூறப்படும் அப்பாட்டை, அப்பாட்டே காட்டும் "ஒன்றாகக் காணும் காட்சி" நிலையில் கண்டால் சரியான கல்வியின் இலக்கணமும் அக்கல்வியின் இலக்கியங்களும் நிகழ்வதாகக் கொள்ள இடம் இருக்கிறது.

சைவசித்தாந்தம் முப்பொருள் உண்மையைக் கூறும். உலகிலுள்ள எல்லாப் பொருட்களும் மூன்று பிரிவுகளில் அடங்கும், அறிவிக்காமலே அறிவிக்கின்ற பொருள் ஒன்று அறிவித்தால் அறிந்து, அறிவிக்காவிடில் அறியமாட்டாத பொருள் ஒன்று அறிவித்தாலும் அறியமாட்டாத பொருள் ஒன்று. பதி, பசு, பாசம் என்று கூறுவது இவற்றையே.

சித்தாந்தம் என்ற சொல் 'முடிபு' என்பதைக் குறிக்கும். சைவசித்தாந்தம் கூறும் முடிந்த முடிபுகளை மிகச் சுருக்கமாகக் கூறலாம்.

**1. பதி, பசு, பாசம் ஆகியவை அனாதி நித்தியப் பொருள்கள் எனல்.**

**2. எல்லாச் சமயங்களையும் சமரச முறையில் ஏணிப்படிகளில் வைத்து அவிரோத பாவனையை வளர்த்தல்.**

**3. தத்துவக் கொள்கைகளை விவரித்தல்.**

**4. கருமங்களை வென்று, பிறப்பு, இறப்பு என்னும் தொடர்ச்சியிலிருந்து விடுபடுவதற்கு வழிகளைக் காட்டுதல்.**

**5. இவ்வுலகில் செம்மையான நல்வாழ்க்கையை நடத்துவதற்கு உபாயம் கூறுதல்.**

**6. எல்லா உயிர்களிடத்தும் இறைவன் இருப்பதை வற்புறுத்தி அவர்கட்கு இயன்றவரை தொண்டு புரிவதே இறைபணி நிற்றலென உபதேசித்தல்.**

**7. உலகை வெறுக்கவோ விடவோ வேண்டியதில்லை. உலகப்பற்றுக்களை விட்டு உலகிலேயே வாழ்ந்து நல்லன எல்லாவற்றையும் வளர்க்கலாம் என்று வற்புறுத்தல்.**

**8. கடவுள் வழிபாடும் உயிர்த்தொண்டுமே உயிருக்குச் சாதனங்களும் பயனுமாகும் என்ற முடிவு கூறுதல்.**

இதில் கூறப்பட்ட முடிந்த முடிபுகள் அத்தனையையும் உலகிலுள்ள எல்லாச் சமயங்களும் கொள்கை அளவிலும் சாதனையிலும் நூற்றுக்கு நூறு ஒப்புக் கொள்கின்றன. இதிலிருந்து இந்து சமயத்தின் உலகளாவிய நெறியை உணருகின்றோம்.

சுவாமி விவேகானந்தர் சிக்காகோ நகரத்திலே நடந்த உலக சமய மகாநாட்டிலே உரையாற்றிய ஒரு பகுதி:

"பிறருடைய கொள்கையை வெறுத்தொதுக்காத பண்புடைமை, அக்கொள்கைகளை ஏற்றுக் கொள்கின்ற பொதுநோக்கு என்னுமிரண்டினையும் உலகுக்குக் கற்பித்த சமயத்திற்கு நான் உரியவன் எனப் பெருமை அடைகின்றேன்! எல்லாச் சமயங்களையும் அன்பினோடு நோக்குகின்ற பண்புடைமையில் எங்களுக்கு நம்பிக்கையுண்டு. அது மாத்திரம் அன்று. எல்லாச் சமயங்களையும் உண்மைநெறிகள் என நாங்கள் ஏற்றுக் கொள்கின்றோம். உலகத்திலுள்ள எல்லாச் சாதியாராலும் மதங்களாலும் துன்புறுத்தி ஒதுக்கப்பட்ட மக்களுக்கு அடைக்கலம் தந்து காப்பாற்றிய ஒரு சாதிக்கு நான் உரியவன் என்பதைக் குறித்துப் பெருமை அடைகின்றேன்! உரோமருடைய கொடுஞ்செயலினாலே தமது பரிசுத்த தேவாலயம் சின்னாபின்னப்பட்ட ஆண்டிலே தென்னிந்தியாவுக்கு வந்து எங்களிடம் அடைக்கலம் புகுந்த கலப்பில்லாத இஸ்ரவேல் சாதியாரில் எஞ்சியிருந்தவர்களை நாங்கள் அன்பினோடு அணைத்துக் கொண்டோம் என்பதனை உங்களுக்கு எடுத்துச் சொல்லும் பெருமை எனக்கு உண்டு.

பெருஞ் சிறப்புவாய்ந்த சொராஸ்திரிய சாதியாரிலே எஞ்சி இருந்தோருக்குப் புகலிடங்கொடுத்து இன்றும் பாதுகாத்து வருகிற ஒரு சமயத்தைச் சார்ந்தவன் நான் எனப் பெருமை அடைகின்றேன்!

என் அன்புள்ள சகோதரர்களே! இளமையிலே நான் பலமுறை ஓதியதும் இன்னும் கோடிக்கணக்கான மானிடர்களாலே ஓதப்படுவதுமாகிய ஒரு கீதத்திலிருந்து சில அடிகளை எடுத்து உங்கள் முன்னிலையிலே மொழிவதில் மிக மகிழ்கின்றேன்.

**எண்ணுமிரு நிலத்தெழுந்த பலநதியும்**
**இறுதியில் வந்தெறிநீர் வேலை**
**நண்ணுகின்ற இயல்பது போற் பலவேறு**
**தகைமையாராய் ஞான நாடும்**
**மண்ணகத்தோர் சொல்லுநெறி செம்மையதாய்க்**
**கோடணையாய் மருவு மேனும்**
**புண்ணியனே நினையடையு மார்க்கமவை**
**யனைத்துமெனப் புகல்வன் யானே!"**

இந்த இடத்திலே கம்பனுடைய பாடல் ஒன்றையும் சிந்திப்போமாக!

**" கல்லிடைப் பிறந்து போந்து கடலிடைக் கலந்த நீத்தம்**
**எல்லையின் மறைக ளாலு மியம்பரும் பொருளீ தென்னத்**
**தொல்லையி லொன்றே யாகித் துறைதொறும்பரந்த சூழ்ச்சிப்**
**பல்பெருஞ் சமயம் சொல்லும் பொருளும் போற் பரந்ததன்றே."**

பரம்பொருள் ஒன்றேயாயிருப்பது போலச் சரயுநீர் வெள்ளம் ஒன்றேயாயிருந்தும், பலசமயத்தவர் சூழ்ச்சிக்கு உட்பட்டு அப் பரம் பொருள் பலபடியாகச் சொல்லப்படுவது போல ஏரி, தடாகம் முதலிய பல இடங்களிற் பொருந்தி பல பெயருடனே வழங்கலாயிற்று.

கடலிலுள்ள நீர் சூரிய வெப்பத்தால் ஆவியாகி, ஆவி மேகமாகி, மேகம் மலையிலே மழையைப் பொழிகின்றது. அம்மழை நீர் சுனையாகி, அருவியாகி, சிற்றாறாகி, பேராறாகி பல நீர் நிலைகளையும் நிரப்பி, பலவகை நிலங்களுக்கூடாகப் பாய்ந்து வந்து கடைசியிலே கடலைச் சேருகின்றது. கடலைச் சேருமுன் ஆற்றுக்கு ஒரு பெயருண்டு. கடலோடு ஆறு இரண்டறக் கலந்த பின் ஆறு என்ற பெயரை இழந்து கடல் என்ற பெயரையே பெறுகின்றது. இதேபோன்று பரம்பொருளிடமிருந்து தோன்றிய ஆத்மாக்களும் சமயங்களும் பரம்பொருளோடு இரண்டறக் கலந்த பின் தம் பெயரிழந்து பரம்பொருளியல்பைப் பெற்றுவிடுகின்றன.

சுவாமி விவேகானந்தருடைய பேச்சு இந்து சமயத்தின் உலகளாவிய தன்மையை வெட்டவெளிச்சமாக எடுத்துக் காட்டுகின்றது. "வாளினாலோ, எழுதுகோலினாலோ, ஒருவரை ஒருவர் பகைக்கின்ற கொடுஞ்செயலானது அகன்று விடுக! ஒரே நோக்கத்தினைக் கொண்டு ஒன்றினையே நாடிச் செல்கின்ற மக்களிடையே அன்பினோடு கூடிய எண்ணங்கள் நிறைவுபெறுக!" சுவாமி விவேகானந்தருடைய இந்த வாக்கியம் உலகின் இன்றைய நிலையில் எவ்வளவு பொருத்தம் என்பதை நாம் எல்லோரும் உய்த்துணருவோமாக!

இந்து சமுத்திரம் ஒரு காலத்திலே நிலப்பரப்பாக இருந்தது என்பது ஆராய்ச்சியாளரின் துணிபு. இலங்கையிலுள்ள ஒரு மலைமுகட்டில் நடுப்பகல் வேளையில் நின்று இந்துமாக் கடலுள் நோக்கினால், கடலினடிப்பகுதியில் பொற்கலச மொன்று காணப்படுமென்றும், அஃது இராமாயண காலத்தில் இலங்கையின் மன்னனாயிருந்த இராவணேஸ்வரனின் அரண்மனைக் கலசம் என்றும் பலர் கூறக் கேள்வி. அந்த நிலப்பரப்பைத்தான் நமது இலக்கியங்கள் குமரிக்கண்டம் எனப் பேசுகின்றன. ஆராய்ச்சியாளர் இலெமூரியாக்கண்டம் என்றபெயரால் அழைப்பர். தென்னாபிரிக்கா வுக்குப் பக்கத்திலே உள்ள மடகஸ்கார் தீவு ஒரு காலத்தில் குமரிக்கண்டத்துடன் இணைந்திருந்தது. அப்பொழுது இந்து சமயமும் தமிழ் மொழியுமே குமரிக்கண்டம் முழுவதும் பரவியிருந்தது. மடகஸ்காரின் தலைநகரம் "அந்தணனறிவோ" என்பது. அத்தீவிலுள்ள மக்களுடைய நாகரிகம் தமிழ் மக்களுடைய நாகரிகத்தையும் பண்பாட்டையும் பொருந்தியதாக விளங்குகின்றது. குமரிக்கண்டம் முழுவதும் இந்து மதமாக இருந்தது என்பதற்கு ஒரு சாட்சியே போதுமானது.

குமரிக்கண்டம் கடலுள் ஆழ்ந்த காலத்தில் உலகம் முழுவதிலும் ஒரு மாற்றம் ஏற்பட்டுள்ளது. குமரிக்கண்டம் கடலுள் ஆழ்ந்த காலத்திலேதான் இமயமலை கடலுள் இருந்து உயர்ந்திருக்கிறது. இமயத்தின் உச்சியில் சங்குகள் காணப்படுவதற்குக் காரணம் அது ஒரு காலத்தில் கடலுள் அமிழ்ந்திருந்தது என்பதே. குமரிக்கண்டம் என்பது ஆபிரிக்கா, இந்தியா, அவுஸ்திரேலியா ஆகியவற்றை எல்லாம் இணைத்த ஒரே நிலப்பரப்பாக இருந்தது.

சூரபத்மா வீரமகேந்திர புரியிலிருந்து ஆயிரத்தெட்டு அண்டங்களையும் ஆட்சிசெய்தான் என்பது கந்தபுராணச்

செய்தியாகும். இலங்கைக்கு ஏமகூடம் என்ற பெயர் இருந்தது.

முருகப் பெருமான் சூரபத்மாவுடன் யுத்தம் செய்வதற்காக இலங்கையில்தான் பாசறை அமைத்திருந்தார். ஆகவே வீரமகேந்திரபுரி என்பது குமரிக்கண்டத்தைச் சேர்ந்ததாகும். சூரசம்காரம் முடிந்த உடனே முருகப் பெருமான் வருணனை அழைத்து "நாம் தண்டு இறங்கி இருந்த இலங்கை தவிர வீரமகேந்திரபுரியையும் அவுணரின் ஏழு தீவுகளையும் அழித்துவிடு" என்று கூறி அருளினார்.

"கருணையங்கட லாகியோன் கனைகடற் சிறையாடும்
வருணன் மாமுக நோக்கியே வெய்யசூர் வைகுற்ற
முரணு றுந்திறல் மகேந்திர நகரினை முடிவெல்லைத்
தரணியா மென உண்குதி ஒல்லையில் தடிந் தென்றான்"

"என்ற மாத்திரைச் சலபதி விழுமியதென் றிசைவுற்றுத்
துன்று பல்லுயிர் தம்மொழி மகேந்திரத் தொல்லூரை
அன்று வன்மைசேர் புணரியுள் அழுத்தினன் அவனின்கீழ்
நின்று மாயவன் அடுவுல குண்டிடு நெறியேபோல்"

என்று கூறுகின்றது கந்தபுராணம்.

சமயம் என்றால் என்ன என்பதற்கு விடைகூறிய ஒரு பெரியார், ஒரே கடவுள், ஒரே உலகம், ஒரே மனித சமுதாயம் என்ற உணர்வுடன் ஒரே வானக்குடை நிழலில் எல்லாரும் ஒருமை கொண்டு வாழவேண்டும். இந்தச் சமய உரிமையை நாட்டுவதே சமயம் என்று கூறுகின்றார்.

"வையகம் துயர் தீர்கவே" என்று சம்பந்தர் கூறுகிறார். உலகெலாம் சேமமாக இருக்க வேண்டும் என்பதுதான் அதன் கருத்து. இக்கருத்தமைந்த வடமொழிச் சுலோகம், "லோகா சமஸ்தா ஸுகினோபவந்து" என்று கூறுகிறது.

விஞ்ஞான வளர்ச்சியினால் உலகம் மிகச் சமீபத்தில் வந்து விட்டது. ஆனால் மனித மனத்தில் பிரிவினைகள் ஏற்பட்டுக் கொண்டே செல்கின்றன. அன்று காசியாத்ரீகனுக்காக இந்தியாவில் செட்டிப் பிள்ளைகள் சத்திரம் கட்டிவைத்துச் சாப்பாடு போட்டார்கள். உலகத்தின் எப்பகுதியிலிருந்தும் இமய யாத்திரை செய்கிறவனுக்காக "ஸேட்ஜி" தர்மசாலா வைத்திருந்தான். கடவுள்

பக்தியால் உலகம் முழுவதுமே ஒன்றுபட்டு வாழ்ந்தது. இன்று அரசியல், புத்திவாதம் ஆகியன அதிகமாகிவிட்டதால் தேசங்களுக்கிடையிலே, சமூகங்களுக்கிடையிலே பெரிய கோளாறுகள் உண்டாகி இருப்பதைக் காண்கிறோம்.

யாத்திரீகன் கடவுள் பக்தி ஒன்றை வைத்துக் கொண்டு அன்று உலகம் முழுவதையும் சுற்றிவந்தான். இன்று அரசியல்வாதி பல கட்டுக்காவல்களுக்கிடையிலும் தனது சொந்த ஊரிலேயே பிரயாணம் செய்யமுடியவில்லை. நமது முன்னோர் உலகத்தை முன்வைத்தே பல கருமங்கள் ஆற்றினார்கள். அவர்களிடம் நான், எனது வீடு, எனது நாடு, எனது சாதி என்ற சிறுமைகள் ஒழிந்து உலகம் என்ற பரந்த மனப்பான்மையே வளர்ந்திருந்தது. "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்பது தமிழனுடைய கோட்பாடு. இது எங்கு பிறந்ததோ, அந்த இடத்திலேயே இவனால் இன்று உயிர்வாழ முடியவில்லை.

மகாத்மா காந்தி அடிகள் தமது வாழ்க்கையிலே அன்பு அல்லது அஹிம்சை, உண்மை அல்லது சத்தியம் என்னும் இரு தத்துவங்களையும் கையாண்டார். "அன்பின் வழியது உயிர்நிலை" என்பது வள்ளுவர் கூற்று. "அன்பே சிவம்" என்பது திருமூலர் கூற்று. தன்னைத்தான் நேசிப்பதுகூட ஒருவித அன்பே; அது மிகவும் சுருங்கிய அன்பு. உலகிலுள்ள அனைத்தின் உள்ளும் வேலை செய்து கொண்டிருக்கும் இவ்வன்பு சுருங்கி இருக்கும் நிலையை நாம் கீழ்ப்பிறவி என்கிறோம். இவ்வன்பு விரிந்து விலாசம் அடைய அடைய மனிதன் மேல்நோக்கிச் செல்கின்றான். தன் உயிர் போல் மன்னுயிரையும் நேசிக்கிறான். பிறர்க்காகத் தன்னையும் தன் நலன்களையும் விட்டுக் கொடுக்கின்றான். மிகவும உயரிய மனிதன் கணப்பொழுதும் அன்பினாலேயே உயிர்வாழ்கின்றான். தியாகத்திலும் பிறர்க்காகத் தான் அடையும் துன்பங்களிலும் பிறரால் தனக்கு விளைவிக்கப்படும் துன்பங்களிலும், அவை எப்பேர்ப்பட்ட துன்பங்களாக இருந்தாலும் சரி அவன் இன்பத்தையே காணுகின்றான். காரணம் அவனது குறுகிய அன்புணர்ச்சி அகன்று அகில அன்புணர்ச்சி ஆகிவிடுகிறது. இந்த நிலையில் அன்பு சிவமாகிறது.

பொதுவாகச் சமயம் என்பது நம்மை யார் என உணரவைக்கின்றது. நமக்குள்ள துன்பங்கள் யாவை என்பதைப் புலப்படுத்துகின்றது. அத்துன்பங்கள் ஏன் நேர்கின்றன என்பதைச் சுட்டுகிறது. அவற்றைக் களைவதற்கு வழிகள் யாவை என்றும்

கூறுகிறது. அவ்வழியிலே இட்டுச் செல்லும் குருவை அடைகிறது. அவ்வழியிலே நம்மைச் செலுத்துகிறது. முடிவில் முடிவில்லா இன்பத்தில் ஆழ்த்துகிறது. இத்தகைய மதமே இந்துமதம். இம்மதம் எம்மதத்திற்குஞ் சம்மதமே.

"யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்"

என்பது திருமூலர் வாக்கு. இறைவன் திருவருளால் யான் இறைவனது இன்பத்தைப் பெற்றனன். இவ்வின்பத்தினை இந்த மண்ணுலகம் பெறவேண்டும்.

"தனியொருவனுக்கு உணவில்லையெனில்
சகத்தினை அழித்திடுவோம்"

என்ற பாரதியைவிட,

"உலகம் உண்ண நீ உண்,
உடுத்த உடுப்பாய்"

என்ற பாரதிதாசன் வளர்ந்துதான் இருக்கிறார். கவிதை வளாந்துதான் இருக்கிறது. "சகத்தினை அழித்திடுவோம்" என்று உணர்ச்சி வேகத்தில் பாரதி பாடியிருக்கிறார். ஆத்திரத்தின் உச்சியில் நின்று பாடுகிறார். பாரதிதாசனுக்கு தன்னம்பிக்கை இருக்கிறது. எனவே,

"நடத்து உலகத்தை நான்கு புறமு
முள்ள சுவரை இடித்துவிடு"

என்று பாடுகிறார். வேற்றுமைகளை எல்லாம் விட்டு நாட்டோடு நாடு இணைந்து மேலேறு என்று பாடுகிறார்.

'இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின்' என்று பாடிய திருவள்ளுவருக்குப் பிறகு, 'தனியொருவனுக்கு உணவில்லையெனில்' என்று பாடிய பாரதிக்குப் பிறகு, 'உலகம் உண்ண உண், உடுத்த உடுப்பாய்' என்று பாடிய பாரதிதாசன் பாரம்பரியத்திற்கு மேலாகத் தமிழ்த் தந்தை திரு. வி.க. பாடியிருக்கிறார்.

அண்டையன் பசியால் வாட
அணங் கொடு மாடி வாழ்தல்
மண்டையன் குற்றமன்று
மன்னிடும் ஆட்சி குற்றம்.

இந்துக்களுக்குத் தனியொரு பண்பாடு உண்டு. அதாவது தாம் செல்லும் இடங்களில் அவர்களோடு சேர்ந்து வாழுதல், தம்மை நாடி வந்தாரை அணைத்து வாழுதல்.

அன்பு உலகளாவியது. அது இல்லாத இடமே இல்லை என்பது இந்து மதக் கொள்கை. ஆனபடியினால் தான் திருமூலர் அன்பும் சிவமும் ஒன்று என்றார். சிவம் உலகளாவியது என்பதை அன்பைக் கொண்டுதானே உணரமுடியும். அன்பாகிய திருவருளும், இன்பமாகிய சிவனும், மணியும், ஒளியும் போல் ஒன்றே. அன்பாகிய திருவருளே இன்பமாகிய சிவனுக்குத் திருமேனியாகும். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற ஓருலக ஒற்றுமைக்கு 'பொதுவுடைமை' என்ற ஐந்தெழுத்து உதவுவது போல, அறிந்ததனின்றும் விடுதலை பெறுவதற்கும், சமய உணர்வுடைய முழுப்புரட்சிக்காரராகி நம் உயிர்வளம், உடல்வளம், உலக நலம் பெறுவதற்கு 'நமசிவாய' என்ற ஐந்தெழுத்தையும் உரிமையாக்குகிறார் சிவவாக்கியர்.

உலகின் அகச்சமயங்கள், புறச்சமயங்கள், கருத்துக்கள், கோட்பாடுகள், மாறாட்டங்கள், போராட்டங்கள் நீக்கிய மதச் சந்தைகளின் இரைச்சலுக்கப்பால் மாந்தனை மாந்தனாக்கும் அருளாட்சியே சிவவாக்கியர் செய்யுளின் சாரம்.

புலனடக்கம், மன அடக்கம், சிந்தை அடக்கம், சித்தத்தை ஒரு நிலைப்படுத்தல் ஆகிய கல்வியைக் கற்பிக்கும் அறிவியல் கலையை ஒளவையின் அரிய உயரிய குறள்தோறும் காணலாம். ஒளவையார் மாந்தரை பொய்யினின்றும் உண்மையை நோக்கி அழைத்துச் செல்லவில்லை. மாறாக எளிய உண்மையிலிருந்து உயரிய உண்மைக்கே அழைத்துச் செல்கிறார். நாம் உய்யும் வகையை நாமே வருந்தி உழைக்க வேண்டும் என்கிறார்.

பட்டினத்தார், அமைதி பெற்ற மனத்தின் குரலாக ஒன்றென்றிரு தெய்வம் உண்டென்றிரு. நல்லறமும் நட்பும் நன்றென்றிரு என்ற உண்மை மெய்ப்பொருளை உணர்த்துகின்றார். தன்னை அறிந்த பின் ஒருதெய்வமில்லை என்ற உண்மையின்

உள்ளொளிப் பிழம்புகளே பட்டினத்தாரின் பாடல்கள்.

மக்கள் எல்லோரும் நிகர் என்பதை மெய்ப்பிக்க மற்றவர்களின் நலனுக்காகத் தாம் அழுதே சிறந்ததென்று மூட்டும் கருணையினால் களங்கமற்ற காட்சியைக் காண்கிறார் பத்திரகிரியார். தனக்கும் முழு உலகத்துக்கும் உள்ள உறவைக் காட்டும் பேரறிவுப் பித்தேறி வாழ்வின் பயனை உலகுணரச் செய்ய இருளை ஒளி விழுங்கி அருளை அருளிச் செய்கிறார் நலம்பல செய்யும் புலம்பலிலே.

**இயற்கையில் உண்டாகும் புயலைவிட மனதில் உண்டாகும் புயல் மிகமிகக் கொடுமையானது. மனநோயால் ஏற்படும் புயல் தனிமனிதனை அழிக்கும். மனப்பேயால் ஏற்படும் புயல் மனித இனத்தையே அழிக்கும். மனப்பேய்க்குக் காரணம் 'தான்' என்னும் திமிர் உணர்வே. மனமே ஆறாவது அறிவு. ஆறாவது அறிவில் அகப்பேய் பிடித்துக் கொண்டால் தெளிவு என்னும் உணர்வே அதனைத் துரத்த முடியும்.**

கடு வெளிச் சித்தர் சொல்லுகின்றார்: நாம் எல்லோரும் ஒரு காலத்தில் விலங்குகளாய், விலங்காண்டிகளாய் இருந்தோம். விலங்கின் தீய பண்புகள் விழ நற்பண்புகள் ஓங்க மாந்தரானோம். தூய உள்ளமும் பழியற்ற வாழ்வும் வாய்மையும் புகலிடமாய்ப் பெற்றோம். **உலகம் நம்மைச் சமைத்தது. சமைத்ததின் பயனே சமயம்.**

மெய்ப்பொருள் சாட்சி, அனைத்துலக ஒருமை, தீமை வென்று வாழும் வாழ்க்கை, அன்பு, பணிவு, மென்மை, தன்பழிகூறல், மன்னித்தல், பொறுமை, இரக்கம், இடித்துரைத்தல், ஆகியவற்றை நயமான உவமைகளால் எளிய நல் உருவகங்களால் உள்ளங்கை நெல்லிக்கனியைப்போல் உண்மைகளை எடுத்துக் கூறுகிறார் பாம்பாட்டிச்சித்தர். **உலகந் திருந்துவது இருக்கட்டும் உங்கள் உடலையும் உள்ளத்தையும் திருத்துங்கள். உலகம் தானே திருந்தும்** என்று சொல்லும் பொருளும் அருமையான அணியழகில் நனிசிறந்திசைக்கின்றன. **மதத்தின் மமதையையும், சமயங்களின் சஞ்சலச் சாக்கடையையும் சாதி பேதங்களின் வேதனைகளையும், களைவதே வெல்லமுடியாத ஆற்றலுக்கு மனிதரை உயர்த்தும் யோகம் என்கிறார் பாம்பாட்டிச் சித்தர்.**

ஒவ்வொருவரும் தமக்காக உள்ளனர். கடவுள் ஒருவரே எல்லோருக்கும் இடனாக உள்ளார். **நெஞ்சமே நல்லகையேடு, பட்டறிவே சிறந்த ஆசிரியர். உலகமே பல்கலைக்கழகம், கடவுளே**

**சிறந்த நண்பர்.** இவையே குதம்பைச் சித்தரின் சிந்தனையும் மின்னொளியுமாகும்.

கொங்கணச் சித்தர் பின்வருமாறு கூறுகின்றார்: உலகெங்கும் எல்லாப் பெண்களையும் விடத் தாய் உயர்ந்தவளாகக் கருதப்படுகிறாள். மனைவியும் பெற்ற பிள்ளைகளும் ஒரு மனிதனைக் கைவிடலாம். ஆனால் தாய் ஒருபோதும் கைவிட்டுவிடமாட்டாள். உலகின் பொருட்டு நாம் பெரும் செயல்கள் புரிய உந்துசக்தியாக நலம்புரிவதற்காக நம்மை நடத்துபவள் தாயே. வலிமையையும் சலியா உழைப்பையும் திறம்படச் செயற்படுத்திடும் தொழில்நுட்பம் அறிந்தவள் தாய். அதனாலேயே தாய்த் தெய்வ வழிபாடு ஏற்பட்டது.

# 12. இந்து சமய ஆராய்ச்சி நிலையம்

இலங்கையில் ஐந்து நாட்களாக நடைபெற்ற அகில உலக இந்து மகாநாட்டில் அகிலம் எங்கணுமிருந்தும் வந்த பேராளர்கள் பல விடயங்களை அறிமுகம் செய்து வைத்தனர். இவற்றுள் எல்லாம் மிக முதன்மையானதும் முக்கியமானதுமான விஷயம், இலங்கையில் இந்து சமய ஆராய்ச்சி நிலையம் ஒன்றினை நிறுவ வேண்டும் என்று எடுத்துக் கொண்ட முயற்சியாகும்.

இந்த விஷயத்தில் பேராளர் அத்தனைபேரும் ஒரே முகமாக ஒப்புக் கொண்டமையே அதன் முக்கியத்தை உணர்த்துகின்றது. அரசாங்க உதவியுடன் முதன்முதல் நடந்த உலக இந்துமகாநாட்டில் எடுக்கப்பெற்ற இத்தீர்மானம் எல்லாத் தேசத்தினரையும் விழிப்படையச் செய்துள்ளது. இந்த ஆராய்ச்சி நிலையத்தை நிறுவுவதற்கான நிலையத்தையும் ஓரளவு பொருளுதவியையும் செய்ய அரசாங்கம் முன் வந்திருப்பது எதிர்காலத்தில் இந்துக்களுக்கு ஒரு நல்லகாலம் என்பதற்கு அறிகுறியாகும்.

இலங்கையில் இந்த ஆராய்ச்சி நிலையத்தை ஏற்படுத்துவதற்கு இலங்கைக்குப் பல தகுதிகள் உண்டு. சிவபக்தனான இராவணன் அரசாண்ட நாடு இலங்கை. இராவணனுடைய தாயார் தினமும் திருக்கேதீச்சரப் பெருமானையும் கோணேச்சரப் பெருமானையும் தரிசனம் செய்தே உணவு உட்கொள்ளும் நியதியைப் பெற்றிருந்தார். கோணேச்சரத்தை சம்பந்தரும் கேதீச்சரத்தை சம்பந்தரும் சுந்தரரும் பாடும் பேறுகிடைத்தது. அருணகிரியாரும் கதிர்காமத்தைப் பாடியுள்ளார்.

இலங்கைவாழ் இந்துக் குழந்தைகள் ஆரம்ப வகுப்புத் தொடக்கம் பல்கலைக்கழகம் ஈறாக இந்து சமய பாடத்தை ஒரு பாடமாகப் படித்து முன்னேற அரசாங்கம் வழிவகுத்துள்ளது மல்லாமல் இந்து சமயபாடம் ஒன்பதாம் வகுப்பு முடிய பிரதானமான பாடங்களுள் ஒன்றாகவும் ஆக்கப்பட்டுள்ளது. யாழ்.வளாகத்தில் இந்து சமய நாகரிகம் என்ற துறை ஏற்படுத்தப்பட்டு ஆண்டுதோறும் கணிசமான அளவில் பட்டதாரிகள் வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். இலங்கையிலுள்ள பல இந்துக் கோயில்களில் ஆகம முறைப்படி கிரியா முறைகள் செவ்வனே நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. திருக்கேதீச்சரம்

முன்மாதிரியான கோயிலாக விளங்குவதுமன்றி அங்கு பூசகர்களைப் பயிற்றும் குருகுலம் ஒன்றும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

சமய, கோயில் பாதுகாப்பாக விளங்குவன ஆதீனங்கள். இத்தகைய ஆதீனம் ஒன்றும் நல்லூரில் ஏற்படுத்தப்பட்டு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் என்ற பெயருடன் நல்ல முறையில் நடைபெற்று வருகின்றது. இந்த ஆதீனத்திற்கு இந்திய ஆதீனங்களின் வழிகாட்டல்களும் உதவியும் உண்டு. பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்து சமயக் காவலராக விளங்கிய ஆறுமுகநாவலர் பிறந்து சமயப் பணி புரிந்த இடம் இலங்கையாகும்.

இந்து சமயம், புத்த சமயம், கிறிஸ்து சமயம், இஸ்லாம் சமயமாகிய நான்கு சமயங்களுக்கும் பிறப்பிடம் ஆசியாக் கண்டமாகும். இத்தகைய ஆசியாக் கண்டத்தைச் சேர்ந்ததே இலங்கை. அதுவுமன்றி காலத்தைக் கடந்து நின்று எல்லா மதங்களுக்கும் தாய் மதமாக விளங்கும் இந்துமதத்தின் பிறப்பிடமான இந்தியா இலங்கையின் சமீபத்திலுள்ளது. இலங்கையையும் இந்தியாவையும் பிரிக்கும் பாக்குநீரிணை இருபத்தெட்டு மைல் தூரம் மாத்திரமே உடையது. இந்த நீரிணையைப் பலர் நீந்திக் கடந்துள்ளதைக் கொண்டே இதன் சமீபத்தை உணர்ந்துகொள்ளலாம்.

இந்த மண்டபம் குறைந்தது ஐம்பது ஏக்கர் கொண்ட பரப்பளவுள்ள நிலத்தில் அமைய வேண்டும். அமைதியான சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும். உலகெங்கணுமுள்ள மொழிகளில் உள்ள இந்து சமய நூல்கள் எல்லாம் திரட்டப்பட்டு நூல் நிலையம் ஒன்று அமைக்க வேண்டும். இந்து சமய சஞ்சிகைகள் வரவழைக்கப்பட வேண்டும். இதேபோன்று அந்த நூல்நிலையத்தில் பிறசமய நூல்களும் சமய சஞ்சிகைகளும் இடம்பெற வேண்டும். பிற நாட்டவர்கள் இங்கு வந்து தங்கி இருந்து இந்துசமய ஆராய்ச்சி செய்வதற்கான இருப்பிட வசதிகள், உணவு வசதிகள், போக்குவரவு வசதிகள் ஆதியன செய்யப்பட வேண்டும்.

எல்லாவற்றிற்கும் மேலாக சமய சாதனாநிலையம் அதாவது தியான மண்டபம் போன்றவை நிறுவப்பட வேண்டும். இந்த ஆராய்ச்சி நிலையம் போதனையும் சாதனையும் சந்திக்கும் நிலையமாக அமைத்தல் சாலப்பொருத்தம் உடையதாகும்.

ஆண்டுதோறும் வெவ்வேறு தேசங்களில் அகில உலக இந்து மகாநாடு நடைபெறலாம். ஆனால் முதலாவது அகில

உலக இந்து மகாநாடு பிறந்ததினம் அல்லது ஆண்டு நிறைவு விழா ஆண்டுதோறும் இந்த ஆராய்ச்சி நிலையத்திலே கொண்டாடப்பட வேண்டும். இந்து சமய ஆராய்ச்சி மாணவர்கள் எத்தேசத்திலிருந்து என்றாலும் இங்கு வந்து ஆராய்ச்சி செய்வதற்கான வசதிகள் செய்யப்பட வேண்டும். நிரந்தரமாக இருந்து யோக, ஞான மார்க்கங்களுக்கு வழிகாட்டக் கூடியவர்களுக்கு ஏற்ப ஒழுங்குகளையும் வசதிகளையும் செய்ய வேண்டும்.

இந்த ஆராய்ச்சி நிலையம் இத்துடன் நின்றுவிடாது, உலகத்தின் எந்த மூலையில் இருந்து என்றாலும் ஒரு இந்து குரல்கொடுப்பானாயின் அதனைச் செவி கொடுத்துக் கேட்பதோடு அதன் நிவிர்த்திக்கான மார்க்கங்களையும் உடனடியாகச் செய்ய வேண்டும். அகில உலகிலுமுள்ள இந்துக்களும் ஒன்று கூடுதற்கான ஓர் இடமோ, அமைப்போ இன்று வரை ஏற்படவில்லை. இந்துக்கள் தமக்க ஏற்படும் இன்னல்களைச் சொல்வதற்கேற்ற இடமும் இல்லை. ஆகவே இக்குறைகளை எல்லாம் படிப்படியாக இந்த ஆராய்ச்சி நிலையம் போக்கி வைக்கும் என்று நம்புகின்றோம்.

ஓர் உண்மையான இந்து வாழும் நெறியெல்லாம் இந்த ஆராய்ச்சி நிலையத்தில் அமைய வேண்டும். நூலாராய்ச்சியுடன் மாத்திரம் நின்று விடுமானால் அதனால் யாருக்கும் எவ்வித பிரயோசனமும் இருக்க முடியாது. நமது இந்து சமுதாயம் அறிவுத்திரு, அருள்திரு, அன்புத்திரு, வீரத்திரு, சுதந்திரத்திரு, அழகுத்திரு, செல்வத்திரு, வெற்றித்திரு ஆகிய திருக்களைப் பெற்றோங்க இந்த ஆராய்ச்சி நிலையம் உதவ வேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போம்.

# 13. தியானமும் யோகமும்

யோகம் என்பது பூரண வாழ்க்கை. பூரணப் பொருளை நாடி அடைதல் பூரண வாழக்கையாகும். அப்பூரணப் பொருளை அடைவதற்குச் சாதனமாயுள்ளது தியானமாகும்.

மனிதன் முதலில் தன்னுடைய உடலையும் உள்ளத்தையும், இறுதியில் இயற்கை முழுவதையும் தன்வயப்படுத்துவதற்கான வழியை வகுக்கும் விஞ்ஞானம் யோகம் என்று சொல்லப்படும். இந்துக்களுடைய 64 கலைகளில் யோகக் கலையும் ஒன்றாகும். இந்த யோகக்கலை இந்துக்களிடையே ஆதிகாலந்தொட்டு வழங்கி வருகின்றது. ஆதி நூல்களான வேதங்கள், உபநிடதங்கள், இதிகாசங்கள் ஆகியவற்றில் யோகம் பற்றிக் கூறப்பெற்றுள்ளது.

அட்டாங்க யோகத்தில் தியானமும் ஒன்று. புற விவகாரங்களில் 'உழன்ற மனம் தன்னுடைய பிறப்பிடமான அகத்தே உள்ள புருடனிடம் ஆழ்ந்து செல்வது தியானம் எனப்படும். அதாவது இறைவனைப் பற்றிய இடைவிடாத நினைவு என்றும் சொல்லலாம். உயரமான இடத்திலிருந்து எண்ணெயை கீழே ஒழுகவிட்டால் கம்பி போல ஒழுகும். இத்தகைய எண்ணெய் ஒழுக்குப் போன்ற இடைவிடாத நினைவே தியானம் எனப்படும்.

யோகம் என்ற சொல்லுக்குத் தொடர்பு, சேர்க்கை அல்லது சம்பந்தம் என்பதுதான் பொருளாகும். ஆன்மீக ஞானத்தில் ஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்கும் உள்ள சம்பந்தம் என்றே இதற்கு அர்த்தமாகும். இந்தச் சம்பந்தம் அல்லது சேர்க்கை எத்தகையது? எதைக் குறிக்கிறது? என்பதை நாம் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம்.

உடல், உள்ளம், ஆத்மா ஆகிய மூன்றையும் ஒருங்கே மேம்பாடடையச் செய்வதே யோகத்தின் குறிக்கோளாகும். விஷயப் பிரபஞ்சத்தினின்று புலன்களைத் திருப்பி மனத்தை உள்ளே ஒருமுகப்படுத்துவது யோகம். ஆத்மாவில் அல்லது ஆவியில் நித்தியமான வாழ்வே யோகம். மனத்தையும் அதன் மாறுபாடுகளையும் கட்டுப்படுத்துவது யோகத்தின் குறிக்கோள்.

மனம், புலன்கள், பருவுடல் ஆகியவற்றைப் பயிற்றி ஒழுங்கு படுத்துவது யோகம். உடலின் உள்ளிருக்கும் நுண்ணிய சக்திகளைச் சமநிலைப்படுத்தவும், கட்டுப்படுத்தவும் யோகம் உதவுகிறது. யோகம் பூரணத்தையும், சக்தியையும் என்றும்

அழியாத ஆனந்தத்தையும் உண்டுபண்ணுகிறது. வாழ்வு முழுவதுமே யோகமாக மாறவேண்டும். யோகப் பயிற்சி உள்ள ஒருவன் எந்த நேரத்திலும் மனச்சாந்தியை அடையக்கூடும். அதிக சக்தி, ஊக்கம், உற்சாகம், நீண்ட ஆயுள், உயர்ந்த ஆரோக்கியநிலை ஆகிய இத்தனையையும் யோகம் அளிக்கின்றது. மிருக இயல்பைத் தெய்வீக இயல்பாக மாற்றி மனிதனைத் தேவ நிலையின் சிகரத்திற்குக் கொண்டு செல்வது யோகத்தின் குறிக்கோள்.

யோகப்பயிற்சி உணர்ச்சிகளையும் உத்வேகங்களையும் அடக்க உதவுகின்றது. மோகங்களைத் தடுக்கும் சக்தியை அளிக்கின்றது. மனதை எப்பொழுதும் சமநிலையில் வைத்துக் கொள்ள உதவுகின்றது. அற்புதமான மன ஒருமையை அளிப்பதோடு பகவானுடன் இணைக்கத்தையும் உண்டுபண்ணுகின்றது. யோக வாழ்வு ஒன்றினால் மாத்திரமே வாழ்க்கையின் இறுதி இலட்சியத்தை அடைய முடியும்.

தியான மூலம் மேல்நிலை அடைய விரும்பவர்கள் பயிற்சியில் கண்ணுங் கருத்துமாக இருக்க வேண்டும். அதிகாலை 4 மணிக்கும் 6 மணிக்கும் இடையில் உள்ள நேரம் பிரம முகூர்த்தம் என்று சொல்லப்படும். இந்தப் பிரம முகூர்த்த நேரத்திலே அதிக கஷ்டம் இல்லாமலே தியானம் இலகுவில் கைகூடிவிடுகின்றது.

சரீரத்தின் அசதி நீங்கவும், அசுத்தம் நீங்கவும் தியானத்திற்கு ஆதாரமான புத்தி தெளிவடையவுங் கருதி நான்கு மணிக்கு எழுந்த உடனேயே தந்தசுத்தி முதலானவற்றை முடித்துக் கொண்டு பரிசுத்தமான மனதுடன் நீராடி முடிந்தபின் தியானத்திற்கெனத் தயாரித்திருக்கும் ஒரு பரிசுத்தமான கூடத்திற்குள் சென்று ஊதுவத்தி சாம்பிராணி போன்ற சுகந்த தூபங்களை இடவேண்டும். தியானத்திற்கென்றே தனி ஒரு அறை இருத்தல் பொருத்தமானது. எங்கள் மனதிற்குப் பொருத்தம் இல்லாதவர்களை அந்தத் தியான கூடத்திற்குள் செல்லவிடக்கூடாது. அவர்களை அதனுள் விடுவதால் எம்மால் நிரப்பப்பட்ட தியான அலைகள் நீங்கிவிடும். அதனால் அடுத்த நாளைய தியானம் கைகூடாமலும் போகலாம்.

எமது பிரார்த்தனை அறைகளுக்குள்ளே திருமுறை அலைகள், மந்திர அலைகள் போன்றவற்றை இடைவிடாது நிரப்பிக் கொண்டிருக்க வேண்டும். அதனால் தியானத்திற்குச் சென்ற உடனேயே அந்த அலைகளின் உதவியால் தியானம் எளிதில் கைகூடுகின்றது. தியானம் இலகுவில் கைகூடுவதனால் தியான

அலைகளும் பரப்பப்படுகின்றன.

ஒரு மகானுடைய சந்நிதிக்கு நாம் சென்ற உடனே ஒரு புத்துணர்வைப் பெறுகின்றோம். அதனுடைய காரணம் அவர் சந்நிதியில் ஆத்மீக அலை நிரம்பி இருப்பதாகும். இதேபோன்று விசேட தலங்களுக்குச் செல்லும்போதும் இந்தகையதொரு அநுபவத்தைப் பெறலாம். ஆத்மீக அலைகளுக்குள்ளே நாமும் அகப்படுகிறபோது மிக இலகுவில் மன ஒருமை நிகழ்ந்து விடுகின்றது. திருமுறை அலைகள், மந்திர அலைகள், ஆத்மீக அலைகளால் நிரம்பப்பெற்ற இடமே உண்மையான திருத்தலம். அங்குதான் எமக்குப் பூரணமான மனமகிழ்வு ஏற்படுகின்றது; சாந்தி ஏற்படுகின்றது; ஆனந்தம் ஏற்படுகின்றது.

தியானம் இலகுவில் கைகூடுவதற்கு நாம் சில நியமங்களைத் தவறாது கடைப்பிடிக்க வேண்டும். இரவில் படுக்கைக்குச் செல்லுமுன் எமது உபாசனா மந்திரத்தைக் குறைந்தது நூற்றெட்டு முறையாவது செபம் செய்ய வேண்டும். அங்ஙனம் செபம் செய்யும்போது உபாசனாமூர்த்தியை மனதிலே தியானிக்க வேண்டும். அந்தத் தியானத்துடனேயே நித்திரைக்குச் சென்றால் இரவு முழுவதும் எம்மை அறியாமலே தியானமும் செபமும் நிகழ்ந்து கொண்டிருக்கும்.

எமது மனதில் இரு பகுதிகள் உள்ளன. ஒன்று மேல் மனது. அடுத்தது அடி மனது. இந்த அடிமனத்தைத்தான் யோகிகள் சித்தம் என்று அழைக்கின்றனர். அடி மனதின் பெரும்பகுதியில் மூழ்கிப்போன, ஆனால் மீண்டும் திரும்பிப் பெறக்கூடிய அநுபவங்களும், பின்னணிக்குத் தள்ளப்பட்ட ஞாபகங்களும் அடங்கியிருக்கின்றன. எமது தியானத்தையும், உபாசனா மந்திரத்தையும் அடிமனத்திற்குக் கொடுத்துவிட்டால் இரவு முழுவதும் தியானமும் மந்திர செபமும் இடைவிடாது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. விழிப்பு நிலை வரும்போது அதே தியானத்துடனும் அதே மந்திர செபத்துடனும் எழும்புவீர்கள்.

"நான் விடியற்காலை புகைவண்டிக்குச் செல்வதற்குச் சீக்கிரம் எழுந்திருக்க வேண்டும்" என்று எண்ணிக் கொண்டு நீங்கள் சிலசமயம் படுக்கைக்குச் செல்கின்றீர்கள். இந்தச் செய்தியை அடிமனம் கிரகித்துக் கொண்டு உங்களைக் குறிப்பிட்ட நேரத்தில் தவறாது எழுப்பி விடுகின்றது. அடிமனம் தான் உங்களுக்கு எப்பொழுதும் உடனிருக்கும் தோழனாக விளங்குகின்றது.

சில சமயங்களில் சாதகர்கள் எல்லோரும் விடுகின்ற பிழை ஒன்றுண்டு. தியான நேரங்களில் மாத்திரம் தான் மனப்போராட்டம் நிகழும். ஏதோ அந்த நேரத்தில் அரைகுறையான தியானத்தில் மனம் ஈடுபடலாம். மற்றைய நேரங்களில் மனதைக் கண்டபடி அலையவிட்டுவிடுவார்கள். தியானம் செய்யாத வேளைகளிலும் மனதைக் கண்டபடி அலையவிடாது கட்டுப்பாட்டில் வைத்திருந்தால் தான் தியான நேரத்தில் மனது இலகுவாக வசப்படும்.

தியான அறையில் போடப்படும் தூபம் அறையிலுள்ள காற்றைச் சுத்தப்படுத்துவதோடு எமக்கும் ஒரு உற்சாகத்தைக் கொடுக்கிறது. முதலில் தியானத்திற்கான இடத்தை ஆயத்தம் செய்வது போல மனத்தையும் ஆயத்தம்செய்தல் வேண்டும். அதற்கு முதல் படியாக தியான மூர்த்தியைப் பற்றிய பாடலில் ஒரு பகுதியைப் பாராயணம்செய்தல் வேண்டும். பாராயணம் 10, 15 நிமிடங்கள் வரை நடைபெறலாம். அதன் பின் உபாசனா மூர்த்தியின் மந்திரத்தை செபம் செய்யலாம். மந்திர செபம் செய்பவர்கள் ஆரம்பத்தில் 108 மணிகள் கொண்ட செபமாலை வைத்திருத்தல் நல்லது. குறைந்தது மூன்று மாலைகளாவது செபம் செய்தல் விரும்பத்தக்கது.

செபம் செய்யும்போதே அந்த மந்திரத்திற்குரிய மூர்த்தியைத் தியானம் செய்தல் இன்னும் தியானத்திற்கு வலுவூட்டுவதாகும். இதனைச் செபசகித தியானம் என்று சொல்லுவர். தியானத்திற்கு உட்காருவதன் முன், அதாவது கண்களை மூடித் தியானத்தை ஆரம்பிக்குமுன் நாடி சுத்தி செய்தல் தியான சித்தி ஏற்படுவதற்கு வலுவூட்டுவதாகும்.

இறைவனைப்பற்றி இடைவிடாத நினைவுதான் தியானமாகும். கோயில்களிலேயே மூர்த்தி தியானம் ஆரம்பமாகிறது. எழுந்தருளி மூர்த்தி அழகான மூர்த்தி. வெறுமனே அந்த மூர்த்தியின் அழகை எத்தனை நாளைக்குப் பார்த்துக் கொண்டிருந்தாலும் அலுப்புத் தோன்றாது. அத்தகைய மூர்த்தியைக் கோயிலிலே பொன்னாலும், பட்டாலும், பூவாலும் அலங்காரம் செய்வர். அந்த மூர்த்தியைப் பார்த்த உடனே உள்ளத்திலே பதிய வேண்டும் என்பதற்காகத்தான் அவ்வாறு அலங்காரம் செய்கின்றனர். இதனை நாவுக்கரசர்,

"உயிராவணம் இருந்து உற்று நோக்கி
உள்ளக் கிழியின் உரு எழுதி" என்று குறிப்பிடுவார்.

அதாவது ‘உயிர்ப்பு இயங்காதபடி மூச்சை அடக்கி ஒன்றுபட்டுக் கருதித் தியானித்து உள்ளமாகிய சுதையில் இறைவனுடைய திருஉருவை எழுதி’ என்பது கருத்து.

மூச்சுக்கும் மனத்திற்கும் ஒரு தொடர்பு உண்டு. மூச்சு ஒடுங்க மனம் ஒடுங்கும்; மனம் ஒடுங்க மூச்சு ஒடுங்கும். இறைவனை மனத்தில் நினைப்பதைத் தியானம் என்று சொல்லுவார்கள். உள்முகத்தில் தியானம் பண்ணப் பண்ண உள்ளொளி உண்டாகும். அப்பால் உள்ளத்திலே அவன் உருவத்தை தனித்து இருந்து காணப் பழகினால் உள்ளொளியைத் தரிசித்து அதனிடையே இறைவன் திருஉருவத்தைக் காணலாம். இப்படிப் பலகாலம் பயிற்சி செய்தாலன்றி, கண்ணை மூடியவுடன் இறைவன் திருஉருவைக் காணமுடியாது. உள்முகமாக இறைவன் திருவுருவத்தைப் பார்ப்பதுதான் இறைவனோடு நாம் ஒன்றுபட வழியாகும். அதற்காகவே ஆண்டவனை உருவம் உடையவனாகத் தியானிக்கிறோம்.

மந்திர உபதேசம் செய்து கொள்கிறவர்கள் அந்த மந்திரத்தின் தேவதையைத் தியானம் செய்வதற்கு உதவியாக ஒரு சுலோகம் இருக்கும். அதைத் தியான சுலோகம் என்று சொல்வார்கள். மந்திரம் எந்த மூர்த்தியைக் குறிக்கிறதோ அந்த மூர்த்தியின் உருவத்தைத் தியான சுலோகம் வருணிக்கும். தியான சுலோகத்தைச் சொல்லிக் கொண்டு அந்த வடிவத்தை மெல்ல மெல்ல உள்ளத்தில் பதித்துக் கொள்ள வேண்டும். அப்படிப் பதித்துக் கொண்டு மந்திரத்தை செபித்தால் மெல்ல மெல்ல ஒளிபரவி அந்தந்த திருஉருவமும் ஒருவாறு உள்ளத்தே நிலைகொள்ளத் தொடங்கும்.

சாதன வேறுபாடுகளுக்குத் தக்கபடி தியானம் செய்யும் முறையும் வெவ்வேறாக மாறுகின்றது. சாதாரணமாய் இஷ்டதெய்வத்தை இதயத்தில் வைத்துத் தியானம் செய்வது தான் நல்லது. இவ்வுடலே கோயில் என்றும், இதனுள்ளே கடவுள் உறைகின்றார் என்றும் கொள்ள வேண்டும். இடைவிடாது தியானம் செய்யச் செய்ய அதனால் மனமானது எப்போது நிலையாக நிற்கத் தலைப்படுகிறதோ அப்போது எவ்விடத்தில் விருப்பமாயினும் அவ்விடத்தில் இஷ்டதெய்வத்தைத் தரிசிக்கலாம். முன்னே பின்னே, உள்ளே வெளியே, தலையில் நெஞ்சில் எங்கு வேண்டுமாயினும் ஓரிடத்தில் அப்போது தியானம் சுலபமாகச் செய்யலாம்.

விடாது தியானம் செய்யச் செய்ய முதன்முதல் ஒருவனுக்கு உண்டாவது சோதி தரிசனம். அந்த அனுபவம் ஏற்படுகின்ற அதேவேளையிலோ, அன்றி அதற்குச் சற்றுப் பின்னரோ ஒரு வகை ஆனந்தமாகிய பேரின்பம் அவனுக்கு ஏற்படுகின்றது. அந்த இன்பத்தைவிட்டு அப்புறம் மேலே செல்ல மனம் விரும்புவதில்லை. ஆனால் மனமானது இன்னும் சற்று முன்னேறிச் சென்று ஆழ்ந்த தியானத்தில் அமருமாயின் அந்தச் சோதியே பேருருத் தாங்கிப் பேரொளியாக மாறி, அதனோடு மனம் ஒன்றாகக் கலந்து விடுகின்றது. சிலவேளைகளில் 'ஓம்' என்னும் பிரணவ ஒலியை நெடுநேரம் கேட்டுநின்று பின் அதனோடு ஒன்றுபட்டுக் கலந்து விடுகின்றது.

எல்லோருடைய மனமும் ஒரே அளவான வலிமையை உடையதல்ல. ஆனாலும் மனவலிமையை ஒவ்வொருவரும் அதிகப்படுத்தலாம். பிரமச்சரியத்தால் மனவலிமை மிக அதிகமாகின்றது. வலிமை மிகுந்த மனத்தை காமக்குரோதிகள் அசைக்க முடியாது.

பரிசுத்தமில்லாத அசுத்தரை, அல்லது அசுத்த உடலை, அசுத்த மனமுடையவரை எவருமே நெருங்குவதும் விரும்புவதுமில்லை. சுத்த உடல், சுத்த மனம், சுத்த எண்ணம் உடையவரைத்தான் எல்லோரும் நேசிக்க நெருங்க, புகழக் காண்கிறோம். நாமும் அப்படித்தான் செய்வோம். இப்போது உலகமெல்லாம் ஒருவரை நேசிக்கிறது; நெருங்கக் கருதித் தவம் செய்கிறது; என்றால், அவர் யாவரினும் மிகத் தூயவராகத் தானே இருக்க வேண்டும். அந்தப் பரிசுத்தர்தான் கடவுள். எவரை யாவரினும் மிகத் தூயவரென அறிந்து, எவரை அடையத் தேவரெல்லாம், ஞானிகளெல்லாம் விரும்புகிறார்களோ அவர்தான் அகிலாண்டங்கட்கெல்லாம் தலைவர்.

" அத்தனைச் சிற்றம்பலவனை யென்னுயிராகி நின்ற
சுத்தனைச் சுத்த வெளியா னவனைச் சுகவடிவாம்
நித்தனை நித்த நிராமய மாகிய நின்மலனை
யெத்தனை நாள் செல்லு மோமன மோகண் டிறைஞ்சுதற்கே

என்பர் தாயுமான சுவாமிகள். அம்முழுமுதற் கடவுளைத் தியானிக்க, நேசிக்க, நெருங்கக் கருதின், நாமும் பரிசுத்தராகத் தானே இருக்க வேண்டும். நம்மனம் அசுத்தமாயிருப்பின்,

பரிசுத்தரான பரமாத்மாவைப் பூரணமாய் நினைப்பதற்கும் முடியாதென்ற நம்மனமே நமக்கு அறிவிப்பதை நாம் அறிகிறோம்.

அசுத்த ஆகாரம் உண்ணாமலும், அதிக உணவு அருந்தாமலும், அதாவது இலேசான உபவாசத்தால் குடல் சுத்தி செய்தும், இந்திரியங்களைத் தீயவைகளில் செல்லாது தடுத்து இந்திரிய சுத்தி செய்தும், பிராணாயாமத்தால் இரத்தத்தைச் சுத்தி செய்தும், பசனை செபம் முதலியவற்றால் அந்தக் கரணங்களைச் சுத்தி செய்தும், பரமாத்மாவிடம் நமக்குள்ள அன்பெனும் சக்தியால் மற்றெல்லா உறுப்புக்களையும் சுத்தி செய்தும், சுத்தராதல் வேண்டும். அவ்வண்ணம் சுத்தராகிச் சுத்தரை நாடுவதே தியானம் எனப்படும். தியானந்தான் நம்மை இத்தனை விதத்திலும் சுத்தராக்கிக் கொள்ளக் கட்டாயப்படுத்துகிறது. நாம் தியானத்தில் இருக்கும் நேரந்தான் ஒருநாளில் பரிசுத்தமாயிருக்கும் நேரம். மற்றைய நேரமெல்லாம் நாமே நம்மை அசுத்த எண்ணம், அசுத்தச் செய்கைகளால் அசுத்தப்படுத்திக் கொள்ளும் நேரமாயிருக்கிறது.

" உள்ளக் கொதிப்பகல வுள்ளுள்ளே யானந்த
வெள்ள மலர்க்கருணை வேண்டும் பராபரமே"

என்பர் தாயுமானவர். விடுமுறை நாட்களில் சரீரத்திற்கு அதிக உழைப்புக் கொடாமலிருப்பது போலவே மனத்திற்கும் அதிக உழைப்பைக் கொடாமலிருத்தல் வேண்டும். அப்போதுதான் பூரண ஓய்வு எடுத்துக் கொண்டதாகும். அதுதான் உயிரையும், உடலையும், மனத்தையும், புத்தியையும் பாதுகாக்கும்.

ஆரம்ப தியானாப்பியாசகர்களுக்கு எடுத்த எடுப்பிலேயே சிறிது நேரங்கூட ஒன்றையும் நினையாமலிருக்க முடியாமற்போன போதிலும், காமம், குரோதம், பயம் முதலானவற்றை அதிகப்படுத்தக்கூடிய நினைவுகளையாவது நினையாதிருக்கப் பழக வேண்டும். அப்பழக்கம் சித்தியாகுமட்டும் அதற்கு உபபலமாக ஆத்மீக இரகசியங்களடங்கிய பசனையையாவது செய்து வருவது நலம்.

கஷ்டமும் கவலையுமே சரீர பலக்குறைவையும், புத்தித் தடுமாற்றத்தையும் ஆயுள் நஷ்டத்தையுந் தருவது ஆதலால் அத்தகைய துன்பந்தருஞ் சுமையைக் குறைக்க யாதேனும் ஓர் ஏகாந்தமான இடத்தில் தனித்துச் சிறிது நேரம் இருந்தால், அதில் ஓர் இன்பம் உண்டாகும். மெல்ல அவ்வின்பத்துடன் கடவுளை

நினைந்து, மெய்யின்பத்தையுஞ் சேர்த்து அநுபவித்து மற்றைய விசாரமனைத்தையும் விட்டு நீங்கி இருக்க வேண்டும்.

தியானம் செய்யும்போது சாந்தத்தைக் கட்டாயமாய் வருந்தியடைய வேண்டியிருக்கிறது. சாந்தமில்லாவிடின் தியானிப்பதும், பயனடைவதும் மிகக் கஷ்டம். சாந்தமென்பதும் அதனை அடைதலென்பதும் தியானத்தின் முக்கியமான அங்கங்களாகும். சாந்தமில்லாவிடில் இன்பம் அடைய முடியாது. தியானிப்பவர்களெல்லாம் மெய்யின்ப வாழ்வடையக் கருதித்தான் பாடுபடுகின்றனர். ஆதலால் மெய்யின்பம் பெறுவதற்கு உதவிபுரிகின்ற சாந்தத்தை அடைந்தேதான் தீரவேண்டும் என்பது நிச்சயமாகிறது. தியானத்தின் மூலம் இன்பவாழ்வு அடைவதற்கு ஆதாரமாயிருக்கிற சாந்தத்தை அடையும் உபாயமே நமக்கிப்போது தேவை.

எதைப்பற்றித் தியானிப்பது என்பதற்குச் சிலமாதிரிகள் தரப்பட்டிருக்கின்றன. நிமிர்ந்து உட்காரு. உன் கண்பார்வையை மூக்கு நுனியின் மீது இருப்பது போன்று அமையப் பெற்றிருக்கட்டும். ஆனால் மூக்கின் நுனியைப் பற்றி எண்ணவோ அதைப் பார்க்கவோ செய்ய வேண்டியதில்லை. கண்பார்வையை அப்படி அமைக்குமிடத்து மனம் குவிதற்கு அது பெரிதும் உதவிபுரிகிறது. கண்களை அங்ஙனம் பாதி மூடியும் மூடாதும் வைக்குமிடத்து கண்களுக்குரிய நாடி நரம்புகள் வயப்படுத்தப்படுகின்றன. அதன் வாயிலாக இச்சாசக்தியும் வசப்படுவதாகிறது.

சீலத்தை அதன் நடுவாகவும் ஞானத்தை அதன் காம்பாகவும் கொண்டுள்ள தாமரைப் புஷ்பம் ஒன்று சில அங்குலங்கள் உன் தலைக்கு மேல் இருப்பதாகப் பாவனைபண்ணு. அந்தத் தாமரைக்கு 8 இதழ்கள் இருப்பதாக எண்ணிக்கொள். அந்த 8 இதழ்களும் யோகத்தின் அஷ்டசித்திகள் என வைத்துக்கொள். அத்தாமரை புஷ்பத்தினுள் தியாகம் மிளிர்வதாக வைத்துக்கொள். அம்மலருக்குள்ளே பொன்னார் மேனியனாய், சர்வசக்திமானாய், அனைத்துக்கும் ஈசனாய், சுயஞ்சோதியாய் ஈசன் இருக்கிறான். அந்த ஈசனைக் குறித்துத் தியானம் பண்ணு.

உன் இருதயத்துள் வெட்டவெளியொன்று இருப்பதாக எண்ணிக்கொள். அந்த வெளியினுள் ஒளிப்பிழம்பு ஒன்று இருந்துகொண்டிருக்கிறது. அந்த ஒளிப்பிழம்பை உனது ஜீவ சொரூபமாக வைத்துக்கொள். அதனுள் அதிலும் அதிகமான சுடர் நிறைந்துள்ள ஒளிப்பிழம்பு ஒன்றைப் பாவனை பண்ணு.

அது உள்ளிருக்கும் பரமாத்மன் ஆகிறது. இருதயத்தினுள் அப்பரமாத்மனைக் குறித்து தியானம் பண்ணு.

தியானத்திற்கு முண்டக உபநிடதத்தில் ஒரு சிறந்த உவமை சொல்லப்பட்டிருக்கிறது. தியானம் செய்கிறவன் வில்லாளி. குருவிடத்தில் அடைந்த ஞானமே வில். தியானம் செய்பவனுடைய ஆத்மாவே அம்பு. அம்பாகிய ஆத்மாவை அதாவது தன் உள்ளத்தை, வில்லில் வைத்து நாணை இழுக்க வேண்டும். நாணை இழுப்பதென்றால் ஏகாக்கிர சித்தத்துடன் தான் அடைந்த ஞானத்தை உபயோகித்துத் தியானிப்பது. நாணை நன்றாக இழுத்துக் குறிபார்க்க வேண்டும். பரமாத்மாவே குறியாகும். நல்ல வில்லாளன் வில்லை வளைக்கும்போது குறியும் அம்பும் ஒரே நேரில் அமையச் செய்கிறான். அந்த நிலையில் அம்பு குறியில் மறைந்து போகிறது. பரம்பொருளைத் தியானம் செய்பவன் அவ்வாறே தன் ஆத்மாவையும் பரமாத்மாவையும் ஒன்றாகவே காணவேண்டும். தியானம் செய்யும் காலத்தில் பரமாத்மாவினால் தன் ஆத்மா முற்றிலும் அத்துவிதீயமாக மறைந்து போக வேண்டும்.

நமது சரீரம், இரத்தம், தசை, நரம்பு, எலும்புகளால் மட்டுமானதன்று. ஆனால் மிகமிக அற்புதமான ஆத்மா என்னும் தெய்வீக சக்தியாலும், உயிர், மனம், புத்தி, சித்தம் முதலான பல அரூப சக்திகளாலும் ஆனது. சாந்தமான, சத்தியமான தியானத்திலிருந்து கிடைக்கப்பெறும் இன்பமே ஆத்மீக சக்தியை அடையச் செய்கிறது. அவ்வின்பத்தை அடைதலின்றி வேறெதைப் பெற்றாலும் ஆத்மீக சக்தியை அடைய முடிவதில்லை. ஆத்மசக்தியை அடைவதற்கு மெய்யின்பம் பெறுவது அவசியமாயிருப்பதுபோல், சக்தியை அல்லது பரமாத்மாவை அடைவதற்கு தியானத்தின் மூலம் மெய்யின்பாதீதத்தை அடைதல் அவசியமாகும். பரமாத்மாவான கடவுள் அனுக்கிரகம் பெற்றவர்கள் எல்லா வாழ்வையும், எல்லாச் சித்திகளையும் பெற்றுத் தக்க நிவிர்த்தியை அடைகின்றார்கள்.

தியானம் ஐந்து காரியங்களை உடையது:

**1. வீண் எண்ணங்களை நீக்குதற் பொருட்டு நல்லெண் ணங்களைச் சிந்தித்தல்**

**2. நல்லெண்ணங்களிலும் மேலான நல்லெண்ணங்களாகிய தெய்வீக எண்ணங்களைப் பல பாடல்களின் மூலமாவது**

சிந்தனையின் மூலமாவது எண்ணி ஆத்மீக நிலையில் அன்புபெருகச் செய்தல்.

**3.** கடவுளிடம் அன்பை மட்டும் பெற்று மற்றைய பாடலாதி நினைவுகளை நீக்கி நிற்றல்.

**4.** அன்புடன் ஒன்றுபட்டு மனோ ஒடுக்கத்துடன் எவ்வித விசனமுமின்றி மெய்யின்பத்தை அடைதல்.

**5.** எல்லையில்லாச் சக்திகளைப் பெற்றுக் கடவுளின் அருளைப் பெறுதல்.

# 14. நாகைலிங்கரைத் தரிசி நெஞ்சே

“தான் தானாய் நடந்து கொண்டிருக்கும் நாகனென்னும் லிங்கத்தை - அதாவது மூச்சை அறிவாய் மனமே” என்பது இதன் பொருள். இது நெஞ்சறிவிளக்கத்தில் உள்ள ஒரு பாடல் ஆகும்.

மனிதப்பிறவி அவரவர் முன்பு செய்த கர்மத்தின்படி கிடைப்பது. முன்செய்த கர்மத்தின் ஒரு பகுதியை அனுபவிக்க வந்த மனிதன் இதனை அனுபவிக்கும் போதோ புதிய கர்மங்களையும் தேடிக் கொள்கின்றான். பிறக்கும்போது கொண்டு வந்த கர்மம் பிராரத்துவம் என்று சொல்லப்படும். பிராரத்துவத்தை அனுபவிக்கும் போதே புதிதாக தேடிக்கொள்ளுவது ஆகாமியம் எனப்படும். அனுபவிக்காமல் வைத்துவிட்டு வந்த கர்மம் சஞ்சிதம் எனப்படும்.

அப்படியானால் இந்தக் கர்மம் எப்போ தொலையும்? என்பது ஒரு கேள்வி. கர்மத்தைப் பற்றின்றிச் செய்யும்போது ஆகாமியம் இல்லாமல் போய்விடுகின்றது. இதனைக் குறித்தே பகவத்கீதையில் கர்மயோகத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

மனிதனுடைய மற்றுமுள்ள சீவராசிகளினுடைய ஆயுட்கணக்கு அவர்கள் விடுகின்ற மூச்சைக் கொண்டே கணக்கிடப்படுகின்றது. நம்முடைய ஆயுட்கணக்கு நம் மூக்கின் வழியாக நடந்துகொண்டிருக்கும் மூச்சேஒழிய, சூரிய சந்திராதிகளால் நடக்கும்படியான நாட்களல்ல.

எந்தச் சாதியைச் சேர்ந்தவனாயிருந்தாலும் அவனவன் கர்மத்திற்குத் தக்கபடி மூன்று மாதம் சீவித்திருந்து, அவன் கர்ம விதிப்படி மரணம் அடைய வேண்டும் என்று பிரமதேவர் சிருஷ்டி செய்திருந்தால், அம்மூன்று மாத ஆயுட்காலமுடைய குழந்தை, தாயின் கர்ப்பப் பையிலிருந்து புறப்பட்டு வெளிவந்தவுடன், முதல் ஆடும் மூச்சு முதல், மூன்று மாதங்கள் வரையில் ஆடிவரும், 19 லட்சத்து 44 ஆயிரம் மூச்சுகள், இராப்பகலாய் இமைப்பொழுதேனும் சும்மா இராமல் சுவாசித்து முடிகின்றன. கடைசியாய்வரும் மூச்சானது அறுபட்டு அக்குழந்தையின் சரீரத்தை விட்டு ஓடிவிடப்போகிறபடியினால், அக்குழந்தை கர்மத்திற்குத் தக்கபடி வரவேண்டிய வியாதி வந்து மரணமடைந்து விடுகின்றது.

“சாட்டில்லாவிட்டால் சாவில்லை” என்று ஒரு பழமொழி வழங்கி வருவதை நாம் எல்லாரும் அறிவோம். மரணத் துன்பத்தை விசாரிக்க வந்தவர்கள் முதலில் கேட்கும் கேள்வி குழந்தை ஏன் இறந்தது? என்பதாகும். தாய் ஏதோ ஒரு நோய் வந்ததாகக் கூறுவாள். பிராரத்துவம் அவ்வளவுதான் என்று வந்தவர்கள் சமாதானம் கூறுவார்கள். இது உலக நியதி.

நேற்று இருந்தவன் இன்றைக்கு இல்லாமற் போனான் என்னும் பெரிய இயல்புடையது இந்த உலகம். அவ்வளவு நிலையற்றது இம்மானிட வாழ்வு. ஒருநாள் முழுவதும்கூட உயிரோடிருப்பார்கள் என்பது நிச்சயமில்லாத மனிதர்கள் எண்ணுகிற எண்ணங்கள் ஒரு கோடி இரண்டு கோடியல்ல; பற்பல கோடிகள். எண்பது கோடி நினைந்து எண்ணுவன என்று ஔவையார் கூறினார். ஒவ்வொரு மூச்சோடு ஒவ்வொரு எண்ணம் பிறந்து அழிகின்றது.

நிமிடத்திற்குப் பதினைந்து மூச்சுக்கள் ஆடுகின்றன. மணிக்கு அறுபது நிமிடங்கள். ஆதலால் மணிக்கு 900 மூச்சுகள் ஆடுகின்றன. நாள் ஒன்றுக்கு இருபத்துநாலு மணித்தியாலம் ஆனபடியினால் 21,600 மூச்சுகள் ஆடுகின்றன.

முன்னுள்ள பெரியோர்கள் இவ்விதமாய்க் கணக்கெடுத்துச் சொல்லாமல் நெஞ்சறி விளக்கத்தில் பாடிய பாடல் பின்வருமாறு:

**“ இறந்திடு மிருபத் தோராயிரத் தறுநூறு பேரும்**
**இறந்திடு மிக்காயம் போனா லீசனைக் காண்பதென்னாள்**
**மறந்திடா தறிவான் மூல வாசியை மேலே யேற்றிச்**
**சிறந்த தற்பரத்து நாகை லிங்கரைத் தரிசி நெஞ்சே.”**

நிமிடத்திற்குப் பதினைந்து மூச்சுகளாய் மூக்குத் துவாரங்களின் வழியாய் ஆடி, பிரதி தினம் இருபத்துநாலு மணி நேரத்திற்குள் நடந்து நடந்து கழிந்து வரும் இருபத்தோராயிரத்து அறுநூறு மூச்சுகளும், இந்தச் சரீரத்திலிருந்து ஒவ்வொருவராய் அறுபட்டு இறந்து கொண்டே வந்தால், பரம சிவனைக் காண்பது எப்போது? மறவாதபடி இமைப்பொழுதேனும் சும்மாயிராமல் ஓயாதபடி ஆடி, மூலாதார வழியாய் நடக்கும் மூச்சென்னும் வாசியை முதுகெலும்பின் வெள்ளை நரம்பிலுள்ள சிறிய துவாரங்களின் வழியாய் பிரம்ம கபாலத்திற்கு ஏற்றி, உயர்வாயிருந்து, தான்தானாய் நடந்து கொண்டிருக்கும் நாகனென்னும் லிங்கத்தை அதாவது மூச்சை அறிவாய் மனமே.

ஆதலால், மூச்சென்னும் நூல் நமது மூக்குத் துவாரங்களிலிருந்து அறுபடா முன்னமே நாமெல்லோரும் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும்.

பூர்வவினையின் பிரகாரம் ஒரு சிலருக்கு அவமிருத்துக்கள் நிகழ்வதும் உண்டு. அத்தோடு இப்பூவுலகில் நாம் எத்தனை ஆண்டுகள் வாழப்போகின்றோம் என்பதும் நமது கையில் இல்லை. இயமன் நமது முன்னே திடீரெனத் தோன்றுவான். அப்பொழுது யாரிடமும் சொல்லிக் கொள்ளாமலே அவனுடன் புறப்பட்டுவிட வேண்டியதுதான்.

கோயிலுக்குச் செல்வதற்கு, கடவுளை வணங்குவதற்கு நேரம் இல்லை என்று பலர் சொல்லக் கேட்கின்றோம். திடீரென மரணம் சம்பவிக்கும் போது நேரம் இல்லை என்று கூறமுடியுமா? அல்லது இயமனிடம் கைலஞ்சம் கொடுத்து அடுத்த ஆண்டு வா என்று சொல்ல முடியுமா?

ஆகவே நாம் நல்ல சுகத்துடன் இருக்கும்போதே புண்ணியங்களைச் சம்பாதித்துக் கொள்ள வேண்டும். அது ஒன்றுதான் நம்முடன் கடைசி காலத்தில் உடன்வரத் தக்கது. ஒரு சிலர் "புண்ணியம் என்பதேது நான் புத்திசாலி. நான் என் புத்தியை எப்படியும் உபயோகிப்பேன்?" என்று கூறிப் பாவங்களைச் செய்வார்களானால் அவர்கள் பாவமூட்டையுடன் தான் மறு உலகு செல்ல வேண்டும். கடவுள் தியானம் ஒன்றே மனிதனை எந்த இடத்திலும் கைகொடுத்துக் காப்பது. இறைவன் இந்த உடலைக் கொடுத்ததே ஆத்மாவின் ஈடேற்றத்திற்காகத் தான்.

நாம் இப்பூவுலகத்திற்கு எதற்காக வந்தோமோ அதனை மறந்து விட்டோம். ஆகவே வந்த நோக்கத்தை நினைவுகூர்ந்து எமது பிறப்பைப் புனிதப்படுத்திக் கொள்வோமாக.

# 15. உலகுய்ய வழி

உலகம் என்பது உயர்ந்தோர்மாட்டே என்றது அந்தக்காலம். சர்வசன வாக்குரிமை கிடைத்தபின் அக்கருத்து மாறிவிட்டது. இதனால் வெளிமாற்றத்தைத்தான் உலகம் விரும்புகிறது. அகமாற்றத்திற்கு இடமில்லையாகி விட்டது. கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று நாம் காணும் இந்த உலகத்தில் பிளவுகள் பிரிவினைகள் கூடிவிட்டன.

"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்"
"எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவனே
எல்லா உடலும் இறைவன் ஆலயமே"
"ஒன்றெனக் கண்டேயெம் ஈசன் ஒருவனை
நன்றென் றடியினை நானவனைத் தொழ"

என்ற வாக்கியங்கள் புத்தகங்களில்தான் காணமுடிகிறது. மக்கள் வாழ்க்கையில் அவற்றைக் காணமுடிவதில்லை.

பிளவுபட்ட இவ்வுலகம் மேலும் சீர்குலைந்து அழிவில் முடியுமா? அல்லது ஒன்றுபட்ட உலகம் உருவாக வழிபிறக்குமா? இது ஒரு புது சகாப்தத்தின் முடிவா? அல்லது தொடக்கமா? இது முன்னுரையா? அல்லது முடிவுரையா?

உலகமெங்கும் ஆபத்தான பல சக்திகள் வெடிக்கக் காத்திருக்கின்றன. இன ஆதிக்கத்தை எதிர்த்துக் கண்டனக் குரல்கள் எழுப்பப்பட்டிருக்கின்றன.

பண்டைத்தமிழ் இலக்கியங்கள் எல்லாம் உலகை நோக்கியே பேசின. குறுகிய நோக்கத்தில் எழுதப்படவில்லை.

"யாதும் ஊரே யாவருங் கேளிர்"
"உலகம் யாவையும் தாமுளவாக்கலும்"
"உலகெலாம் உணர்ந்தோதற் கரியவன்"
"உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு"
"ஆதிபகவன் முதற்றே உலகு"

உலகம் ஒன்று எனக்கண்ட பெருமை பண்டைத் தமிழ் இலக்கியங்களுக்குரியன. இந்த உயர்கருத்து ஒன்றே

பண்டைத்தமிழ் இலக்கியங்களை இன்றும் வாழவைத்துக் கொண்டிருக்கின்றன.

வையகம் நமது வீடாக இருக்க வேண்டும். ஆயினும் வெடித்துச் சிதறும் சக்திகள் கொதித்து எழுகின்றன. இன்றைய உலகில் நாம் செய்ய வேண்டியது என்ன? பொதுவான இலட்சியங்களின் அடிப்படையில் இணைந்த ஒற்றுமையை உலகில் உருவாக்குவது நம் சாதனைக்கு அப்பாற்பட்டதா? அது கடினமானதா?

"உள்ளம் திருந்த உலகம் திருந்தும்" என்ற பழமொழி மிக ஆழமான உண்மையான கருத்தைக் கொண்டுள்ளது. நமது உள்ளத்தில் அமைதி ஏற்பட்டால்தான் நமது குடும்பத்திலும் அமைதி ஏற்படும். நமது குடும்ப அமைதி நமது சூழலையும் அமைதியாக்கும். சூழலிலுள்ள அமைதி அவ்வூரை அமைதி பெறச் செய்யும். அவ்வூரின் அமைதி தேசத்திற்காகி தேசத்தின் அமைதி உலகிற்காகிறது. உலக அமைதி அண்டங்களுக்கும் பரவுகிறது. நாமுய்ய உலகுய்யும்.

**நாமுய்ய வழி என்ன? நம்மை நாமே கண்காணித்து நம்மை நாமே திருத்திக் கொள்வதாகும்.**

ஒரே உலகம், அமைதியும் சமாதானமும் நிறைந்த உலகம்; இராம இராச்சியம் கண்ட உலகம், தார்மீக அரசு என்றெல்லாம் தீர்க்கதரிசிகள் கண்ட இலட்சியக் கனவை நிறைவேற்றுவதற்குத் தடையாக உள்ளது எது? தடையாக உள்ளது பொருள் வளக்குறைவு அல்ல; அறிவின் வறட்சியோ, திறமையின் குறைவோ அல்ல; மனித இயல்பில் உள்ள சிறுமை, பேராசை, போலிப்பெருமை, செருக்கு, கௌரவம், பொறாமை ஆகியவைதான் தடையாய் உள்ளன.

உலக அமைதி காண ஒரு பேரறிஞன் ஒரு நல்ல வழி சொன்னான். அது உலகத்திலுள்ள அரசியல்வாதிகளை எல்லாம் ஒரே நாளில் சிறைபிடித்து அவர்களை ஒரு கப்பலில் ஏற்றி மக்கள் யாரும் வாழாத ஒரு தீவிற்கு அனுப்பிவிட வேண்டும் என்பதுதான். ஆழ்ந்து பார்த்தால் அதில் எவ்வளவோ உண்மை உண்டு. பொதுமக்களால் தெரிவுசெய்யப்பட்டு ஒரு தலைவன் ஒரு நாட்டில் தோன்றுகிறான். வென்றவனும் தோற்றவனும் நாட்டுக்கு நன்மை செய்வதாகத்தான் கூறினார்கள். ஆனால் நடப்பது என்ன? தலைவனாக வந்தவனுடன் தோல்வி

அடைந்தவன் ஒத்துழைப்பதில்லை. அவன் செய்யும் நன்மைகளுக்கெல்லாம் வாழ்நாள் முழுவதும் இடையூறு விளைத்துக்கொண்டே இருப்பான். மக்களை முன்னேற்றுவதற்கான நல்வழிகளையும் கூறமாட்டான். அடுத்த தேர்தலில் எதிர்க்கட்சி ஆளும் கட்சியாக வந்து விட்டால் முன்பு இவர் செய்தவைகளையே அவர்களும் செய்வார்கள்.

ஒரு தொகுதிக்கு இருவர் போட்டியிடுகின்றனர். ஒருவர் அதிகப்படியான வாக்குகளால் தெரிவு செய்யப்படுகின்றார். தெரிவு செய்யப்பட்டவர், தமக்கு வாக்குக் கொடுத்தவர்களுக்குத்தான், தான் தலைவன் என்று நினைக்கத் தவறி விடுகின்றார். இதனை எல்லாமட்டங்களிலும் பார்க்கின்றோம். இத்தகைய மனோபாவம் இருக்கும்வரை தனி மனிதனும் திருந்த முடியாது; சமூகந் திருந்த முடியாது; தேசமுந் திருந்த முடியாது.

புது உலகம் நம்மை மாறும்படி, தனக்கேற்பத் திருந்தும்படி அழைக்கின்றது. பழைய சமூகப் பொருளாதார அமைப்புகள் இனியும் பொருந்தா. நாம் மாற வேண்டும். புது உலகுக்கேற்ற புது மனிதனை உருவாக்க வேண்டும்.

இந்த இடத்தில் ஒரு பிழை நடந்துவிடுகின்றது. நீதி, நேர்மை, ஒழுக்கம் பழையவை என்று ஒதுக்கப்பட்டு விடுகின்றன. அநீதி, ஒழுக்கக்கேடு, நேர்மையீனம் புதியவை என்று தாமாகப் புகுந்து விடுகின்றன.

மனிதனைப் புதியவனாக்கும் இந்தப் பொறுப்பை, அவனைத் திருத்தும் பொறுப்பை, நிறைவேற்ற, சாதாரணமாக சமயநெறி புகட்டும் கட்டுப்பாட்டுணர்வைத்தான் நம்பி நிற்போம். நம்மகத்தே நம்நோக்கைத் திருப்பி நம்மைப் புதுப்பித்து உருமாற்றி மனித இயல்பின் கீழ்த்தர, இழிவான நீச இச்சைகளையும் போக்குகளையும் அகற்றித் தூய்மை பெற்று உயர்நிலைக்கு நம்மை உயர்த்திக் கொள்ளுமாறு தூண்டுவது, இக்கட்டுப்பாட்டு உணர்வுதான். இக்கட்டுப்பாட்டுக்குத் தன்னை ஆளாக்கி உயர்நிலைக்கு உயர்த்திக் கொள்ள முடியாதவன் இழிந்த குணங்களுக்கு அடிமைப்படுவதோடு தான் உலகினின்றும் தப்பிக் கொள்வதற்காகக் கடவுளின் மேல் கையை வைக்கின்றான். கடவுளை ஒப்புக்கொண்டால் சமயக்கட்டுப்பாடுகளுக்கு அமைய வேண்டும். அங்ஙனம் அமைந்தால் தனது கீழ் இச்சைகளை நிறைவேற்ற முடியாமல் போய்விடும். ஆகவே கடவுளின் தலையிலே கையை வைத்துவிட்டான். அதனால் ஒழுக்கக்கேடுகள்

மலிந்துவிட்டன.

கடவுளை மறந்தவன், சமயக்கட்டுப்பாடுளுக்கு அமையாதவன் உலகில் எதனையாவது சாதித்துள்ளானா? என்றால் இல்லை என்றே பதில் வரும். தனது சுய இச்சைக்காக ஆத்மசுத்தி செய்கிறவர்களைத்தான் உலகெங்கும் காண்கின்றோம். மனச்சாட்சியை மறைத்துவைத்து விட்டுத்தான் கருமங்கள் ஆற்றுகின்றார்கள்.

துரதிர்ஷ்ட வசமாக இன்று சமயங்களே விமர்சனத்திற்கும் ஆராய்ச்சிக்கும் ஆளாகி உள்ளன. கடவுள் ஆராய்ச்சிக்குள்ள பொருளல்ல. அனுபவிக்கப்படும் பொருள். சமயம் ஆராய்ச்சிக்குரிய தல்ல. அநுட்டானத்திற்குரியது. விஞ்ஞான உணர்வு ஓங்கியுள்ள இந்தச் சகாப்தத்தில், நம்ப முடியாத கொள்கைப் பிடிவாதங்களையும், ஐயப்பாட்டிற்குரிய நிகழ்ச்சிகளையும் ஒப்புக் கொள்ள முடியாது. ஆனால் மனிதனின் அறிவை ஆட்கொள்ளக் கூடிய, அவன் புத்தறிவைத் திருப்தி செய்யக்கூடிய ஒரு சமயக் கோட்பாடு நமக்கு வேண்டும்.

இன்னுமொரு முக்கிய குறைபாடு என்னவென்றால், சமூகத்தில் கொடிய அநீதிகள் ஏற்படும்போது, சமயத் தலைவர்கள் அவற்றை எதிர்க்க எழுவதில்லை. தேசிய அரசியல் சர்ச்சைகளுக்கு அப்பால் நின்று மக்களைத் திருத்துமாறு அழைப்பது சமயத்தலைவர்கள் பொறுப்பு. இம்மாதிரிச் சோதனைகள் எழுந்த நேரத்தில், அவற்றைச் சமயத் தலைவர்கள் துணிவுடன் எதிர்கொள்ளத் தவறிவிட்டனர்.

காரணம் என்ன? சமயத் தலைவர்கள். அரசியலுக்கும் இலௌகீகத்திற்கும் அடிமையாகி விட்டனர். சமயத் தலைவர்கள் அரசியலிலிருந்தும் இலௌகீகத்திலிருந்தும் தம்மை விடுவித்துக் கொண்டு என்றைக்குச் சுதந்திர புருஷர்களாகின்றார்களோ அன்றைக்குத்தான் அவர்களால் சமூகத்திற்கு வழிகாட்ட முடியும். நடுநின்று நேர்மையைக் கடைப்பிடிக்க முடியும். அரசியல்வாதிகள் தமது அரசியல் லாபத்திற்காகச் சமயத் தலைவர்களை நோக்கிச் செல்கிறார்கள். சமயத் தலைவர்களோ தமது இலௌகீக இச்சைகளைப் பூர்த்தி செய்வதற்காக அரசியல் வழிகளை நாடுகின்றார்கள். இக்கேடு இருக்கும்வரை நாமுய்ய முடியாது; உலகுய்ய முடியாது.

இலௌகீகப் பற்றுதல்களின் முனைப்பு மிகையாகி விட்ட காரணத்தால், சமயமே உலகிற்கேற்பத் தன்னைத் திருத்திக்

கொள்ளலாயிற்று. இதனை உலகம் முழுவதிலும் காண்கின்றோம். பொதுமக்களின் அதிகப்படியான வாக்குகளைப் பெறுவதற்காக மதத் தலைவர்களை அரசியல் தலைவர்கள் பயன்படுத்துகிறார்கள். ஆனால் அரசியல் தலைவர்கள் நெறிதவறிச் செல்லும்போது மதத் தலைவர்கள் அவர்களை நெறிப்படுத்துவதில்லை. மதத் தலைவர்களுடைய உபதேசங்களை அரசியல் தலைவர்கள் ஏற்றுக் கொள்ளவுந் தயாரில்லை. இரு பகுதியினரும் சேர்ந்து பொதுமக்களை ஏமாற்றத் தலைப்பட்டிருக்கிறார்கள். அரசியல்வாதிகளுக்குத் தேவை பதவி; மதத்தலைவர்களுக்குத் தேவை தமது இலௌகீக இச்சைகளைத் தீர்த்துக் கொள்ளுதல்.

ஒரு சிறிய உதாரணத்தை எடுத்துக் கொள்வோம். மதுவின் கொடுமையை யாவரும் அறிவர். இன்றைய தீமைகளுக்கு மூலகாரணம் மது என்பதைப் புள்ளிவிவரங்களைக் கொண்டு அறியமுடிகின்றது. இத்தகைய தீமையை ஒழிக்க வேண்டும் என்று எந்த மதவாதியாவது எந்த அரசியல் வாதியாவது பகிரங்க மேடைகளிலே கூறியிருக்கின்றார்களா? ஒருவரோ இருவர் கூறியிருப்பினும் இதற்கான நடவடிக்கையினை யாராவது எடுத்துள்ளார்களா? அரசாங்கம், அதனால் வரும் வருமானத்தை தன்னால் ஈடுசெய்ய முடியவில்லை என்றொரு நொண்டிச் சாட்டைக் கூறலாம். மக்களுக்குத் தீமை செய்யும் அந்த வருமானம் யாருக்கு வேண்டும்? மதுவினால் வரும் வருமானத்தைவிட மதுவினால் வரும் தீமைகளுக்காக அரசாங்கம் பல மடங்கு பணத்தைச் செலவு செய்கின்றது என்பதைக் கணக்கிட்டுப் பார்ப்பதில்லை.

மதுவிலக்குச் சட்டம் இன்று பேரவையிலே கொண்டு வரப்படுமானால் அதற்குச் சார்பாக எத்தனைபேர் வாக்களிப்பார்களோ யார் அறிவார்? மதுவிலக்குச் சட்டத்தை ஆதரிக்காதவர்கள் அத்தனைபேரும் சமூக நன்மை விரும்பிகள் அல்லர். மாவட்ட சபைகள் இவற்றிலே முக்கிய கண்டனம் செலுத்துமானால், பேரவை அங்கத்தவர்களை நிர்ப்பந்தப்படுத்தி மதுவிலக்குச் சட்டத்தை அமுல்நடத்த முடியும். என்று மதுவிலக்குச் சட்டம் அமுல்படுத்தப்படுகின்றதோ அன்றுதான் மக்கள்மீது அரசியல்வாதிகளும் மதத்தலைவர்களும் அன்பு கொண்டுள்ளார்கள் என்பதை நாம் ஏற்றுக் கொள்ள முடியும். இந்த வழி நாம் உய்ய மாத்திரம் அல்ல, உலகுய்யவும் வழி அதுவேயாகும்.

# 16. எல்லாப் பிழையும் பொறுத்தருள்வாய்

நாம் எல்லாம் சில்வாழ்நாள் பல்பிணிச் சிற்றறிவுடையோம். ஆனமையின் அறிந்தும் பிழை செய்வோம்; அறியாமலும் பிழை செய்வோம்; பழக்கத்தினாலும் பிழை செய்வோம். நாம் முற்பிறப்பிற் செய்த பிழையினாலேதான் இப்பிறப்புக் கிடைத்தது. இப்பிறப்பிலே செய்யும் பிழைகள் அடுத்த பிறப்புக்கு வித்தாகின்றன.

நாம் ஏன் பிறந்தோம்? இறக்க. ஏன் இறக்கிறோம்? பிறக்க. இது ஒரு சுழற்சி. இந்தச் சுழற்சி ஒழிய வேண்டும். இது ஒழிவதற்கு வழிதான் என்ன? திருநாமம் ஐந்தெழுத்தும் செப்ப வேண்டும்! தீவண்ணர் திறம் ஒருகாற் பேச வேண்டடும்! ஒருக்காலும் திருக்கோயில் சூழவேண்டும்! உண்பதன்முன் மலர்பறித்திட்டுண்ண வேண்டும்? அருநோய்கள் கெடவெண்ணீறு அணிய வேண்டும்! இவை செய்யாவிட்டால் பிறப்பதற்காகவே இறந்து கொண்டிருப்போம். நாம் இனிமேல் பிறக்காமலிருப்பதற்கு வழிகளே மேலே சொல்லப்பட்டவைகளாகும்.

“இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின்பும் வேண்டுகின்றார். மீண்டும் பிறவாமை வேண்டும்.” இப்படி வேண்டுதல் செய்தவர் காரைக்காலம்மையார். ஆதிசங்கராச்சாரிய சுவாமிகள் பின்வருமாறு வேண்டுதல் செய்கின்றார்: “பெருமானே சென்ற பிறப்பிலே உம்மைத் தொழாதிருந்தமைக்கும், அடுத்தபிறப்பிலே நான் வணங்காமலிருக்கும் பிழைக்கும் என்னை மன்னிக்குமாறு வேண்டுகின்றேன்.”

சென்ற பிறப்பிலே நின்னை வணங்காத படியினாலே தான் எனக்கு இப்பிறப்புக் கிடைத்தது. ஆனால் இப்பிறப்பிலே நிச்சயமாக உம்மை வணங்கி விட்டேன். வணங்கியபடியினாலே அடுத்த பிறப்பு நிச்சயமாக இல்லை. பிறப்பு இல்லை. பிறப்பு இல்லை எனவே வணக்கமும் இல்லையல்லவா?

தீவினையினாலும் பிறப்பு உண்டு; நல்வினையினாலும் பிறப்பு உண்டு. தீவினை இரும்பு விலங்கு; நல்வினை பொன்விலங்கு. விலங்கே விலங்குதான். நாம் செய்யும் பிழைகள் எல்லாமே பிறப்புக்கு வித்தாகின்றன.

புல்லாகிப் பூடாயப் புழுவாய் மரமாகி
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகி
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்

செல்லா நின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன்.

என்ற வண்ணம் இத்தகைய பிறப்புக்களுக்கெல்லாம் காரணம் ஆசையே.

ஆசைப்படப்பட ஆய்வருந் துன்பம்
ஆசைவிடவிட ஆனந்தமாமே.

எல்லாப் பிழையும் பொறுத்தருள்வாய் என்பதில் முக்கியமாக ஏழு பிழைகளைக் குறிப்பிடுகின்றார். முதல் நான்கு பிழைகளும் மனதைச் சேர்ந்தவை. இரண்டு வாக்கைச் சேர்ந்தது. ஏழாவது காயத்தைச் சேர்ந்ததாகும். கல்லாப்பிழை, கருதாப்பிழை, கசிந்துருகி நில்லாப்பிழை, நினையாப்பிழை இந்த நான்கும் மனதாற் செய்யும் பிழைகளாகும். ஐந்தெழுத்தைச் சொல்லாப்பிழை, துதியாப்பிழை இவையிரண்டும் வாக்காற் செய்யும் பிழை. தொழாப்பிழை காயத்தாற் செய்யும்பிழை. திரிகரண சுத்தியோடு வாழ்தலே வாழ்க்கையின் முக்கியம் என்பது பட்டினத்தாரின் கருத்து.

கல்வி கற்று அறிவை விருத்தி செய்து கொள்ளும் வாய்ப்பு மனிதப் பிறவிக்கு மாத்திரமே உண்டு. மக்கட் பிறப்பினைப் பெற்றவர் அப்பிறவியின் பயனைப் பெற வேண்டுமாயின் மெய்ந்நூல்களைக் கற்றல் வேண்டும். கல்லாதிருப்பரேல் அவர் பிறப்பு விலங்குப் பிறப்போடொத்துப் பயன்படாதொழியும். ஆதலின் கல்லாமை குற்றம் என்றார். களர் நிலத்தை யாரும் பேணுவதுமில்லை; அது மற்றையோருக்குப் பயன்படுவதுமில்லை. அதைப் போன்றே கல்லாதவர் தமக்கும் பயன்படார். மற்றையோருக்கும் பயன்படார். விலங்கோடு மக்களை நோக்கும்போது மக்கள் விலங்கிலும் பார்க்க எவ்வளவு நன்மையுடையரோ, கற்றவனையும் கல்லாதவனையும் ஒப்பிட்டு நோக்கும்போது, கல்லாதவன் அவ்வளவு தீமையுடையவன். மனிதனுக்கும் விலங்குகளுக்கும் எல்லைக்கோடாக அமைந்தது கடவுளைப்பற்றிய நினைவு. ஞானசம்பந்தப் பெருமான் “கல்லார் நெஞ்சில் நில்லான் ஈசன்” என்றார்.

கல்வி கற்றுவிட்டால் மாத்திரம் போதாது. அதனை ஆராய்ந்து உணர வேண்டும். இதனை வள்ளலார் “நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து” என்று குறிப்பிடுகின்றார். உணர்வு

பெறாத கல்வி பயன்படாமையின் கருதாப்பிழை என்றார். மணிவாசகர் இதனை "சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்" என்று குறிப்பிடுகின்றார். கருதுதல் என்றால் கருத்தூன்றிக் கற்றவற்றை ஆராய்ந்து தெளிதல் என்பது பொருள். ஆராய்பவனுக்கு மெய்ப்பொருள் பொய்ப்பொருள்களின் வேறுபாடு விளங்கும். வேறுபாடு விளங்க விளங்க மெய்ப்பொருளினிடம் பற்றும் பொய்ப் பொருள்களினிடம் பற்றுநீக்கமும் உண்டாகும்.

கல்வியை நன்கு கற்றும், ஆராய்ந்துணர்ந்தும், கற்றதன் பயன் இறைவனைத் தொழுதல் என்று தெரிந்து வைத்திருந்தும் இறைவன் ஒருவன் உளன் என்பதனை நினையாத மாந்தரும் இருக்கத்தான் செய்கின்றார்கள். ஆகம அறிவிற்குப் பயன் அவன் தாளைத் தொழுது பிறவி அறுத்தல் என்பதனை உணர்ந்திருந்தும் அதற்கான முயற்சிகளைச் செய்யாதும், அவனை நினைந்து நினைந்து, உணர்ந்து உணர்ந்து, நெகிழ்ந்து நெகிழ்ந்து, அன்பே நிறைந்து நிறைந்து, ஊற்றெடுக்குங் கண்ணீரதனால் உடம்பு நனைந்து நனைந்து, அன்பு பிறவாமையின் கசிந்துருகாப் பிழை என்றார்.

இறைவன் வேறு அவன் திருமந்திரம் வேறு அல்ல. இறைவனை இடைவிடாது நினைப்பதற்கு மந்திர செபம் ஒன்றே மிக இலகுவான வழி. கோயிலில் இறைவனைத் தரிசனம் செய்வதற்கு சில நிபந்தனைகள் உண்டு. மந்திர செபம் செய்வதற்கு எவ்வித கட்டுப்பாடும் இல்லையாம்.

"நின்றாலும் இருந்தாலும் கிடந்தாலும் நடந்தாலும்
மென்றாலும் துயின்றாலும் விழித்தாலும் இமைத்தாலும்"

ஆகிய எல்லா நிலைகளிலும் மந்திர செபம் செய்ய முடியும்.

"நான்மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே"
"நாவினுக் கருங்கலம் நமச்சிவாயவே"
"சிவாயநம என நீறணிந் தேன் தருவாய் சிவகதிநீ"

என்பவை எல்லாம் ஆழ்ந்து சிந்திக்கற்பாலன. திருவைந்தெழுத்தை முறைப்படி ஓதுதலே சிறந்த இலகுவான வழி. அதனால் அம்மந்திரத்தைச் சொல்லாமையும் பிழை என்றார்.

உலகிலுள்ள எப்பொருளும் எவ்வுயிரும் இறைவன்

திருஉருவமே. இறைவன் எல்லாப் பொருளிலும் நீக்கமற நிறைந்திருக்கும் தன்மையைக் கண்டு களிப்பவர்கள் சீவன்முத்தர் என்று அழைக்கப்படுவார்கள். அத்தகைய சீவன் முத்தர்களுக்கும் சிலசமயங்களில் உலக வாசனை தோன்றுவதுண்டு. அங்ஙனம் தோன்றும்போது உள்ளத்தை அதன் வழிச் செல்லவிடாது தடைசெய்தற்பொருட்டு இறைவன் திருமந்திரத்தை ஓத வேண்டும். “காமமாதிகள் வந்தாலும் கணத்திற்போம் மனதிற்பற்றார்” என்பது சீவன் முத்தருடைய இலக்கணம்.

எல்லாப் பொருளையும் பற்றி நின்றே பற்று அற்ற இறைவன் ஓதிய வீட்டு நெறியை இதுவே நன்னெறி என்று மனதிற் கொள்க. உலகப்பற்றை விடுவதற்கு உரிய உபாயம் இறைவனைப் பற்றுதலாம். “பற்றது பற்றில் பரமனைப் பற்றுமின் என்பது திருமந்திரம். “பற்றானைப் பற்றிநின்றார்க் கில்லை பாவமே” என்பது ஞானசம்பந்தர் தேவாரம். உமாபதிசிவம் பின்வருமாறு கூறுகின்றார்.

**“ மண்முதற் கரணமெல்லா மறுவசத் தாக்கிஞானக்**
**கண்ணினிலூன்றி யந்தக் கருத்தினாலெவையு நோக்கி**
**எண்ணியஞ் செழுத்துமாறி யிறைநிறை வுணர்ந்து போற்றல்**
**புண்ணியன்றனக்கு ஞான பூசையாய்ப் புகலுமன்றே”.**

இனி, இறைவன் தன்னுள் இரண்டறக் கலந்து நின்றே தனக்குச்செய்து வருகின்ற உதவியை எண்ணுந்தோறும் அவன்பால் நமக்கு அன்பு படிப்படியாய்ப் பெருகிவருவதாம். வரவே அத்தகைய பேருதவியாளனை யாம் வாயாரப் புகழ்தலும் கைகூப்பித் தொழுவதுமே, இயல்பாம். அங்ஙனம் புகழ்ந்து தொழாதவழி யாம் செய்நன்றி கொன்றதொரு புன்மையையும் உடையோமாகலின் துதியாப் பிழை என்றும் தொழாப்பிழை என்றும் ஓதினார். இப்போது பட்டினத்தாரின் திருப்பாடலை முழுமையாக நோக்குவோம்.

**“ கல்லாப் பிழையுங் கருதாப் பிழையுங் கசிந்துருகி**
**நில்லாப் பிழையு நினையாப் பிழையுநின் னஞ்செழுத்தைச்**
**சொல்லாப் பிழையுந் துதியாப் பிழையும் தொழாப் பிழையும்**
**எல்லாப் பிழையும் பொறுத்தருள்வாய் கச்சி யேகம்பனே.”**

‘திருக்காஞ்சியில் எழுந்தருளியிருக்கும் ஏகாம்பர நாதேஸ்வரப் பெருமானே! அடியேன் நின்னருள் நூல்களாகிய மெய்ந்நூல்களை நல்லாசிரியர்பாற் சென்று கல்லாதிருந்த குற்றமும், அவற்றின் பொருளை ஆராய்ந்து தெளியாத குற்றமும், கடவுளாகிய நீ ஒருவன் எங்கட்குக் களைகண்ணாயுள்ளனை என்றுணராத குற்றமும், நீ எளியேங்கட்குச் செய்யும் பேருதவியை நினைந்து நின் திருவடிக்கு அன்பு பூண்டு உள்ளமுருகி நின் திருமுன் தன்முனைப்பற்று நில்லாத குற்றமும், நின்னுடைய திருவைந்தெழுத்தை நாவாரச் சொல்லாத குற்றமும், நின்புகழை வாழ்த்தாத குற்றமும், நின்னைக் கைகூப்பித் தொழுது வணங்காத குற்றமும், என மேலே கூறியனவும் இன்னோரன்ன பிறவுமாகிய எல்லாக் குற்றங்களையும் பொறுத்து எளியேனுக்கு நின் திருவருளை வழங்கி அருள்வாயாக!’ என்பது இதன் பொருளாகும்.

## ஒன்ராறியோ இந்து சமயப் பேரவை வெளியீடுகள்.

| | |
|---|---|
| தரிசனம் | ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள் |
| அர்ச்சனை மாலை | ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள் |
| என்னை எனக்கறிவித்த | |
| எங்கள் குருநாதர் | ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள் |
| திருமுறைக் கதைகள் | ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள் |
| முத்தான தொண்டர் | கவிஞர். வி. கந்தவனம் |
| புதிய சைவ வினாவிடை(முதலாம் புத்தகம்) | கவிஞர். வி. கந்தவனம் |
| தங்கம்மா நான்மணிமாலை | கவிஞர். வி. கந்தவனம் |
| சிவயோக சுவாமிகளின் அருள்மொழிகள் | |
| பன்னிருமாத நினைவுகள் | ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள் |
| கனடாவிற் சைவ சமயம் | கவிஞர். வி. கந்தவனம் |
| ஈழத்துச் சித்தர் குடைச்சுவாமி | பேரறிஞர் முருகவே பரமநாதன் |
| சைவத் திருமுறைகளின் விழுமியம் | பேரறிஞர் முருகவே பரமநாதன் |
| புதிய சைவ வினவிடை (இரண்டாம் புத்தகம்) | கவிஞர் வி. கந்தவனம் |
| நல்லூர் நாற்பது | கவிஞர் வி. கந்தவனம் |
| யோகி ராம் சுரத்குமார் | ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள் |
| திருமுறைச்செல்வம் | சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் |
| தேவைக்கேற்ற திருமுறைத்திரட்டு | கவிஞர் வி. கந்தவனம் |
| சுவாமி சதானந்தர் நற்போதனை | தொகுப்பு சபா சிவானந்தன் |
| கந்தன் கதை | கவிஞர் வி. கந்தவனம் |
| கந்தனே கலியுகத்தில் கண்கண்ட | தெய்வம் ஆத்மஜோதி நா. முத்தையா |
| கேதாரபத்திரி யாத்திரை | ஆத்மஜோதி நா. முத்தையா சுவாமிகள் |
| விதியை வெல்வது எப்படி | கு. வைத்தியநாதன் சைவசித்தாந்த பண்டிதர், திருவாவடுதுறை ஆதீனம் |
| ஒலியிழை நாடாக்கள் | |
| சமய வாழ்க்கை | ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள் |
| சைவத்தின் பெருமை | |
| நாவலரும் பெரியபுராணமும் | கவிஞர். வி. கந்தவனம் |
| தமிழ் முருகன் | கவிஞா. வி. கந்தவனம் |

| | |
|---|---|
| குரு வழிபாடு | கவிஞர். வி. கந்தவனம் |
| ஞான விளக்கு | சிவத்தமிழ் வித்தகர். சிவமகாலிங்கம். |
| சிந்தனைத்தேன் துளிகள் | மாதாஜி புலவர். சி. விசாலாட்சி |
| விநாயக வெண்பா | கவிஞர். வி. கந்தவனம் |
| விநாயக விருத்தம் | கவிஞர். வி. கந்தவனம் |
| அகத்தியரும் விநாயகப்பெருமானும் | கவிஞர். வி. கந்தவனம் |
| முருகப்பெருமானும் ஔவையாரும் | கவிஞர். வி. கந்தவனம் |

**இந்நூலுக்கு நிதி உதவி செய்த பேரவையின் சிவனடியார் திருக்கூட்டத்தினர்........**

. திரு. த.கு. சபாரத்தினம் - $100

. திரு. செ. சோமசுந்தரம் - $100

. திரு. வே. இ. இராசையா - $100

. திரு. க. வித்தியானந்தன் - $50

. திருமதி. சின்னத்துரை செல்லமுத்து - $100

. திருமதி. சிவசுப்பிரமணியம் புனிதவதி - $100

. திருமதி. வியாகரத்தினம் மகேஸ்வரி - $100

. திருமதி. கணேஷ் நாகேஸ்வரி - $50

. திருமதி. சின்னராசா இராசமலர் - $50

. திருமதி. சண்முகலிங்கம் இராசலட்சுமி - $50

. திருமதி. நாகராஜா தேவமலர் - $50

.

## சைவதுரந்தரர் வி. கந்தவனம் அவர்களின் அணிந்துரையிலிருந்து சில வரிகள்....................

ஆத்மஜோதி முத்தையா அவர்களது ஆத்மா திருவருளாலே சோதியாக விளங்குகிறது. வாழ்க்கை முழுவதும் திருவருளிலே திளைத்து அதன் அருமையை பெருமையை தான் பெற்ற இன்பத்தை எழுத்தாலும் பேச்சாலும் எல்லோருக்கும் எடுத்தியம்பியவர்.

.மனத்தைச் சுத்தப்படுத்தவே எல்லாச் சமயங்களும் முனைகின்றன. மனச்சுத்தம் ஆத்மீக வாழ்க்கைக்கு இன்றி அமையாதது. சைவம் மனப்பக்குவம் பற்றி பேசுகின்றது. பக்குவத்திற்கு தியானப்பயிற்சி ஏற்றது. பயிற்சிக்கு முயற்சி அவசியம். பக்குவம் பெற்ற மனம் பாதை தவறாது. நீதி வழுவாது. சைவசமய ஒழுக்கம் நீதியிலே தங்கியுள்ளது. இவற்றையெல்லாம் இந்நூல் எடுத்தியம்புகின்றது

நல் மனம் படைத்தவர்களின் சிந்தனைகள் திருவருள் வழி செயல்பட்ட பெரியவர்களின் திருவாக்கு எமக்கு வேண்டியவை. வாழ்க்கைப் பிரச்சனைகளை தீர்க்க உதவுபவை. வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிகாட்டுபவை. ஆத்ம ஒளியேற்றி தெய்வீக வாழ்க்கை வாழ வைத்து மறுபிறப்பைப் போக்கும் மந்திரங்களாக அமைபவை.